விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-4659)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 01 ஞாயிற்றுக்கிழமை (16.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 362

## தாய்நாட்டின் எதிர்கால நன்மை கருதி

# கட்சி வேறுபாடின்றி சகலரும் கடமைகளை நிறைவேற்றுங்கள்

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள்

(கொழும்பு)

தாய்நாட்டின் எதிர்கால நன்மை கருதி அரசியல் கட்சி சார்பின்றி கடமைகளை நிறைவேற்ற அனைத்து பிரஜைகளும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்துள்ளார். தியத்தலாவை இராணுவ கல்வியற் கல்லூரியின் 93ஆவது பயிற்சி நிறைவு விழாவில் நேற்று முற்பகல் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)



## பிரதமராக ரணில் இன்று பதவியேற்பு

முற்பகல் 10.30 மணிக்கு ஜனாதிபதி முன் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியான சுபவேளையில் பிரதமராக பதவியேற்பார் என கட்சியின் பொதுச் செயலா 16

## புதிய அரசாங்கம் பிணை மோசடியை மறைக்க முடியாது

### ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசாங்கத்திற்கு மத்திய வங்கியின் பிணை முறி மோசடி அல்லது அமைச்சர்களின் திருட்டுக்களை மறைப்பதற்கு இடமளிக்கப் போவதில்லை என 15

## பிரதமர் பதவியை இராஜினாமா செய்த மகிந்த



15

## ரணில் தலைமையிலான ஐ.தே.கவை வீழ்த்துவோம்

### எஸ்.பி.திசாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நியமிக்கப்படும் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியை கவிழ்ப்பதற்கான எமது போராட்டம் தொடரும் என, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மகிந்தவின் விஜேராம இல்லத்தில் வைத்து நேற்று சனிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே 15

## 24 மணித்தியாலங்களுக்கு வடக்கில் காற்றின் வேகம் அதிகரிக்கும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணம் மற்றும் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அடுத்த 24 மணித்தியாலங்களுக்கு காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. 16

## சிங்கள பௌத்த இனவாதத்தை மகிந்த கையிலெடுக்கின்றார்

### மனித உரிமை செயற்பாட்டாளர் சுனந்த தேசப்பிரிய

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தனது பதவி விலகல் குறித்து தெளிவுபடுத்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் காணப்படும் கருத்துக்கள் அவர் தீவிர சிங்கள பௌத்த பிரசாரத்திற்கு தயாராவதை வெளிப்படுத்துயுள்ளதாக மனித உரிமை செயற்பாட்டாளர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தனது அறிக்கையில் 103 ஆசனங்களை மாத்திரமே கொண்டுள்ள ஐக்கியதேசிய கட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கட்டுப்பாட் 16

## எதிர்க்கட்சி தலைவர் பதவி மகிந்தவுக்கு வழங்க வேண்டும்

### தினேஸ் குணவர்தன கோரிக்கை

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் பதவி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார். 15



## ரணில் அரசின் அமைச்சரவை விபரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை அடங்கிய பெயர் விபரத்தை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன 15

## மகிந்தவை மீண்டும் ஜனாதிபதியாக்குவோம் - குமார வெல்கம

(கொழும்பு)

மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடக் கூடிய நிலையை ஏற்படுத்துவோம் என 15

# ஐ.தே.க அரசை கூட்டமைப்பு பணயக் கைதியாக வைத்துள்ளது

### ராஜினாமாவின் பின் மகிந்த அறிக்கை

(கொழும்பு) தற்போதைய அரசாங்கத்தின் ரிமோட் கன்ட்ரோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமே உள்ளது என, தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்த பின்னர் அறிக்கை வெளியிட்டுள்ளார் மகிந்த ராஜபக்ஷ. அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு வருமாறு,

பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் மக் 15

## கூட்டமைப்பின் நிபந்தனையை நிறைவேற்றாவிட்டால் அரசு கவிழும் - மகிந்த சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சியினர் கடைப்பிடிக்காவிட்டால், அவர்கள் எந்த நேரத்திலும் தங்கள் பாராளுமன்ற பெரும்பான்மையை இழக்கலாம் என்று பதவி விலகிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பிரதமர் பதவியிலிருந்து வில 15

## மகிந்த - மைத்திரி கூட்டணி அரசியல் பயணம் தொடரும்

### மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்ஷ கூட்டணியின் அரசியல் பயணம் எவ்வித தடையுமின்றி தொடரும் என, பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஐக்கிய தேசியக் கட்சியின் போராட்டம் நிறைவுற்றது

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து நடத்திய சத்தியாக்கிரக போராட்டம் நிறைவடைந்துள்ளது.

ஜனநாயகத்தை பாதுகாப்போம் என்ற தொனிப் பொருளில் சுமார் 50 நாட்களாக இந்த சத்தியாக்கிரக போராட்டம் கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் இடம்பெற்று வந்தது.

பாராளுமன்றத்தை கலைக்க தீர்மானித்ததானது, அரசியலமைப்புக்கு எதிரானது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதையடுத்து இந்த சத்தியாக்கிரக போராட்டம் கைவிடப்பட்டதாக சிவில் அமைப்புக்கள் கூறியுள்ளன. (ம)

# விரைவாக தேர்தலை நடத்த நடவடிக்கை எடுப்போம்

## ரோஹித அபேகுணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சியின் கடமைகளை செய்து கொண்டு எதிர்வரும் காலத்தில் விரைவாக தேர்தல் ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக செயற்படுவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன கூறியுள்ளார்.

பத்தரமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

நான்கு வருடங்களாக அரசாங்கம் அமைத்தும் செய்ய முடியாது போன பொருளாதார நிவாரணத்தை மிகவும் குறுகிய காலத்தில் வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷவுக்கு முடிந்ததாக அவர் கூறினார்.

அதேநேரம் பாராளுமன்றத்தில் காணப்பட்ட மிகவும் பயங்கரமான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இல்லாமல் செய்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு மக்களின் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக் கொள்வதற்காக முடிந்தளவு முயற்சி செய்வதாக ரோஹித அபேகுணவர்தன கூறியுள்ளார். (ம-3)


**காணி விற்பனை**

தெல்லிப்பழை டச்சு வீதியில் ஆறு பரப்பு 8.45 குழி கொண்ட காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:
**0777179911, 0771685159** (6712)

**பணியாளர் தேவை**

புத்தக விற்பனை நிலையத்துக்கு பணியாளர் தேவை.
**புத்தகக்கூடம்,**
**திருநெல்வேலி.**
**தொடர்பு: 0771285749** (6716)

**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் வீட்டு பண்ணையில் வேலை செய்ய வேலையாள் தேவை.
வயதெல்லை 45 - 60, சம்பளம் (25,000 /=)
உணவு, தங்குமிட வசதிகள் உண்டு. (C-4735)
**T.P:077 045 4140**

**பணி நிலை வேண்டுகை**

* கணனி பக்க வடிவமைப்பாளர்கள் (ஆண் / பெண்)
* தட்டச்சாளர்கள் (ஆண் / பெண்)

முன்னனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்.

(17.12.2018 திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில்)
காலை 10 மணி தொடக்கம்
மாலை 3 மணி வரை நேரில் வரவும் (C-4732)

* நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்ட நேரம் கவனத்திற் கொள்ளப்படும்.

**Harikanan** Printers of the North
1st Floor, K.K.S. Road, Jaffna.

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

மஞ்சவனப்பதி முருகன் துணை

**வாடிக்கையாளருக்கு ஓர் நற்செய்தி...**

மின்சாரத்தினால் (Electric Bike) இயங்கும் இருசக்கர வண்டி இன்று (16.12.2018) ஞாயிற்றுக்கிழமை கொள்வனவு செய்வோருக்கு ரூபாய் 85,000/= பெறுமதியான இருசக்கர வண்டி விசேட விலைக்கழிவாக 75,000/= இற்குப் பெற்றுக்கொள்ளலாம். (C-4733)

**6 மாத உத்தரவாதம் வழங்கப்படும் (பற்றி உட்பட)**

இன்று மட்டும்!

யாழ் மாவட்ட ஏக விநியோகஸ்தர்
**SUNJEYS HOLDINGS**
**No.98,** அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் இந்து மகளிர் கல்லூரி அருகில்)
**T.P : 077 3864 077 / 0777 474 111**

மஞ்சவனப்பதி முருகன் துணை

**வாடிக்கையாளருக்கு ஓர் நற்செய்தி**

யாழ். நகரில் முதல்முறையாக அனைத்து வாடிக்கையாளரதும் தேவை கருதி இன்றிலிருந்து எமது நிறுவனம் 24 மணித்தியால சேவையை வழங்குவதுடன் இன்றிலிருந்து 3 நாட்களுக்கு 16.12.2018 ஞாயிறுவரை ரூபாய் 3000/=இற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 10% விலைக்கழிவும், ரூபாய் 5000/= இற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 10% விலைக்கழிவுடன் எமது நிறுவனத்தில் இருந்து 6km சுற்றளவுக்குள் வசிப்பவர்களுக்கு கொள்வனவு செய்யும் பொருட்கள் இலவசமாக விநியோகிக்கப்படும்.

முக்கிய குறிப்பு: தொலைபேசியூடாகவும் பொருட்கள் ஓடர் செய்யலாம்.
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது : அங்கர், சீனி, மா தவிர்ந்த பொருட்கள்)

**SUNJEYS A to Z SUPER MART**
100, Arasady Road, Jaffna.
(இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)
(C-4733) **021 205 3077**


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## சரவணபவான் ஶ்ரீகௌரிபாலா

(J.P All Ceylon)

பரவிப்பாஞ்சான் கிளிநொச்சியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும், கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம், யா/மகாஜனா கல்லூரி பழைய மாணவனும், ஓய்வுநிலை மூகாமையாளரும், கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் செயலாளரும் ஆகிய **சரவணபவான் ஶ்ரீகௌரிபாலா** அவர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதிபதி கௌரவ **மா.கணேசராசா** முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக கடந்த 2018.12.12 புதன்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார். தங்களின் சேவை மேன்மேலும் சிறக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**அரிகுகசிவம் சக சகோதரர்கள்**

(அ-4781)

# 9-ம் ஆண்டு நினைவலைகள்



**திருமதி விஜயகுமார் சர்வேஸ்வரி**

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும்
வழிநடத்திய எங்கள் அன்புத் தாயே!
நீங்கள் இல்லாத இவ்வுலகம் என்றும்
இருள் மயமானது! எங்கே காண்போம்
உங்கள் மலர்ந்த முகத்தை?
உங்கள் பிரிவைத் தாங்குமா
எங்கள் இதயம்? ஆண்டுகள் ஒன்பது
என்ன யுகம் ஆனாலும் என்றும்
மறவோம் உம்மை!

*என்றும் நினைவுகளுடன்...*
மகள் - ராஜராஜன் ஜர்திகா,
பேர்த்திகள் - அக்‌ஷீரா, அஷ்மிரா,
மகன் - ஜதீபன், தாய் - சிதம்பரம்

ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

பிறப்பு: 27.02.1969
இறப்பு: 25.12.2009

## சு.க.எம்.பிக்கள் 20 பேர் புதிய அரசில் இணைவு!

### நளின் பண்டார தகவல்



(கொழும்பு) ஐக்கிய தேசிய முன்னணியின் புதிய அரசாங்கத்தில் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 20 பேர் இணைந்து கொள்ளவுள்ளதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார நாளை திங்கட்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தூய்மையான புதிய அமைச்சரவை பதவிப்பிரமாணம் செய்து கொள்ளுமெனவும் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினர் எம்முடன் இணைந்தால் அதனை வரவேற்கின்றோம். ஆனால் அவர்கள் குழுவாக எம்முடன் இணைவதற்கு இடமளிக்கப் போவதில்லை. தனித்தனி உறுப்பினர்களாக இணைந்தால் மாத்திரமே இணைத்துகொள்ளத்தயாராகவுள்ளோம்.

அவர்களில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிச் சென்ற நால்வர் உள்ளடங்கலாக 20 பேர் ஐ.தே.கவுடன் இணையவுள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எனினும் அந்த 20 பேரும் குழுவாக வருவார்களானால் நாம் இணைத்துக்கொள்ளப்போவதில்லை எனத் தெரிவித்தார். (இ-7)

### மக்கள் தீர்ப்பை மாற்ற சட்டத்தில் இடமில்லை

# இலங்கை அரசியலில் சர்வதேச தலையீடுகள்

### சுதந்திரக்கட்சி குற்றச்சாட்டு



(கொழும்பு) இலங்கை அரசியலில் சர்வதேச தலையீடுகள் அதிகம் காணப்படுவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை அரசியலின் தற்போதைய நிலை தொடர்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

மேலும் நாட்டு மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து செயற்படுவதைக் காட்டிலும் சர்வதேச கருத்துக்களுக்கே அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்து செயற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அந்தவகையில் தற்போதைய அரசியல்வாதிகள் வெளிநாட்டு சக்திகளுக்கு ஏற்றவாறே தமது வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றனரெனவும் பியதாஸ விமர்ச்சித்தார்.

இதேவேளை மக்களின் தீர்ப்பை மாற்றுவதற்கு சட்டத்துக்கு இடமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## உயர்நீதிமன்றம் நிராகரித்தாலும் கூட இலக்கை அடைய மாற்றுவழி உண்டு

### டளஸ் விடாமுயற்சி



(கொழும்பு) நாட்டு மக்களின் எண்ணம் மற்றும் விருப்பம் என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவதற்காகவே பொதுத் தேர்தல் ஒன்றைக் கோரியிருந்தோம்.

எனினும் மக்களின் வாக்களிக்கும் உரிமையை மறுக்கும் வகையில் உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு நாங்கள் மதிப்பளிக்கின்றோம். அதேவேளை உயர்நீதிமன்றத்தால் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவது ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும் கூட, பொதுத்தேர்தலை நடத்துவதற்கான வேறுபல வழிமுறைகள் உள்ளன என பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை சட்டத்திற்குப் புறம்பானது என்ற தீர்ப்பு உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட நிலையில், கொழும்பில் மகிந்த அணியினர் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனநாயகம் என்ற சொல்லுக்கு மேற்குலக நாடுகள் வேறு ஏதேனும் அர்த்தங்களைக் கொண்டிருக்கலாம். எனினும் தேர்தல் ஊடாகவே மக்களின் ஜனநாயகம் நிறுவப்படும் என்பதே எமது நிலைப்பாடாகும். எனவே பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்பதே தற்போதும் எமது கோரிக்கையாக உள்ளது. தேர்தல் ஒன்றிற்கான அவசியம் தொடர்பில் மக்களை விழிப்பூட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கோத்தபாயவிற்கு ஆதரவான பிரசாரங்கள் மீண்டும் ஆரம்பம்



(கொழும்பு) மகிந்த ராஜபக்ஷவின் பதவி விலகல் அறிவிப்பைத் தொடர்ந்து முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை முன்னிறுத்தும் நடவடிக்கைகளை அவரது ஆதரவாளர்கள் ஆரம்பித்துள்ளனர்.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷவை முன்னிறுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

கோத்தபாய ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளர் மிலிந்த ராஜபக்ஷ கோத்தபாய ராஜபக்ஷவை மையப் படுத்திய பிரசார மொன்றை ஆரம்பித்துள்ளார். (இ-7)

## முறைகேடுகளில் ஈடுபட்ட மாணவர்களின் பெறுபேறுகளைத் தடை செய்யத் தீர்மானம்

(கொழும்பு) கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையின் போது முறைகேடுகளில் ஈடுபட்ட மாணவர்களின்பெறுபேறுகளைத்தடைசெய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி. பூஜித இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், "பரீட்சையின் போது முறைகேடுகள் இடம்பெற்ற 5 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இது தொடர்பில் விசாரணை செய்வதற்கு சிறப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இம்முறை கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சிறு குற்றங்கள் தொடர்பிலும் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மக்கள் ஆணை ஊடாக மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றுவோம்

### வாசுதேவ நம்பிக்கை



(கொழும்பு) மக்கள் ஆணையின் ஊடாக அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றும் முனைப்புடன் முன்னோக்கி நகர்வோம் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் விஜேராம இல்லத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பில் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், "இந்த மோசமான ஆட்சியாளர்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத வகையில் ஒரு ஐக்கியப்பாட்டை எம்மால் ஏற்படுத்த முடிந்தமையை எண்ணி நாம் திருப்தியடைகின்றோம்.

எமது பலத்தை மக்கள் சக்தியுடன் ஒன்றிணைத்து இந்த அரசாங்கத்தின் மக்களுக்கும் நாட்டிற்கும் எதிரான விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்போம்.

அது மாத்திரமின்றி, எதிர்காலத்தில் மக்கள் ஆணையுடன் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றும் முயற்சிகளிலும் ஈடுபடுவோம்" எனத் தெரிவித்தார். (இ-7)

## அதிக சலுகைகளை வழங்கும் அரசை எதிர்காலத்தில் கண்டுகொள்ளலாம்

### ஐ.தே.க.பொதுச் செயலாளர் வாக்குறுதி



(கொழும்பு) முன்னைய காலங்களில் மக்களுக்கு அதிக சலுகைகளை வழங்கி சேவையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைப் போன்ற ஒரு அரசாங்கத்தை எதிர்காலத்தில் கண்டுகொள்ளலாம் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கடந்த ஒக்டோபர் 26 ஆம் திகதி முதல் போராட்டம் நடந்தது. அந்தப் போராட்டம் இப்போது வெற்றி கண்டுள்ளது.

எமது அபிவிருத்தித் திட்டங்களுக்கு இடையூறு ஏற்படுத்திய ஒரு யுகத்தை நாம் கடந்து வந்துள்ளோம்.

இனிவரும் காலங்களில் மக்களுக்கான சலுகைகள் நிரம்பிய அபிவிருத்தித் திட்டங்களை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முன்னெடுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டில் தற்பொழுது உருவாகியுள்ள புதிய நிலைமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# 'தூணாக' ஹோலி... 'துணையாக' ரஹானே

## மெல்ல முன்னிலை பெற எத்தணிக்கும் இந்தியா



20

டெஸ்ட் அரங்கில் 20 ஆவது அரைசதம் அடித்த ஹோலி, அவுஸ் திரேலிய அணிக்கு எதிராக 10வது அரைச்சதம் எட்டினார். இதற்கு முன் அடித்த 9 அரைச்சதங்களில், 6 முறை சதமாக மாற்றி னார்.

அரைச்சதம் அடித்த ஹோலியின் ஆட்டத்தில் ஒன்று...

பெர்த் டெஸ்டில துணிச்சலாக ஆடிய அணித் தலைவர் ஹோலி.

துணைத் தலைவர் ரகானே அரைசதம் கடந்து நம்பிக்கை கொடுத்தனர். 'வேகத்தில்' மிரட்டிய இஷாந்த் சர்மா நான்கு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, அங்கு நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

அடிலெய்டில் நடந்த முதல் டெஸ்டில் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் இரு அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் பெர்த்தில் நடக்கிறது. முதல் நாள் நிறைவில் முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 277 ஓட்டங்களை எடுத்தது.

### இஷாந்த் அசத்தல்

நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் நடந்தது. முதல் ஒரு மணி நேரத்தில் இந்திய பந்துவீச்சை சமாளித்த பெய்ன், கம்மின்ஸ் விக்கெட் வீழ்ச்சியை தடுத்து நிறுத்த, ஓட்ட எண்ணிக்கை 300 ஓட்டங்களைக் கடந்தது. மணிக்கு 139 கி.மீ., வேகத்தில் உமேஷ் வீசிய பந்தில் கம்மின்ஸ் (19) போல்டானார். பும்ராவிடம் சிக்கினார் பெய்ன் (38). இஷாந்த் வீசிய 21ஆவது ஓவரின் 2, 3ஆவது பந்துகளில் ஸ்ரார்க் (6), ஹேசல்வுட் (0) சிக்கினர்.

அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 326 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் இஷாந்த் 4, பும்ரா, உமேஷ், விஹாரி தலா 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

### ஹோலி அரைச்சதம்

முதல் இன்னிங்சை ஆரம்பித்த இந்திய அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஸ்டார்க் பந்தில் முரளி விஜய் (0) போல்டானார். உணவு இடைவேளைக்குப் பின் ராகுல் 2 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத்தார். அடுத்து ஹோலி, புஜாரா இணைந்தனர். ஸ்டார்க் பந்தில் பவுண்டரி அடித்த ஹோலி, ஹேசல்வுட் ஓவரில் 3 பவுண்டரி விளாசினார். மூன்றாவது விக்கெட்டுக்காக 74 ஓட்டங்கள் சேர்த்தபோது, துரதிர்ஷ்டவசமாக புஜாரா (24) ஆட்டமிழந்தார்.

பின் வந்த ரகானே 'ஷோர்ட் பிட்ச்' பந்துகளை எளிதாக சமாளித்தார். மறுபக்கம் 'தூணாக' நின்று ஆடிய ஹோலி, டெஸ்ட் அரங்கில் 20வது அரைசதம் எட்டினார். ரகானே 17ஆவது அரைச்சதம் அடித்தார்.

இந்நிலையில் நேற்றைய 2ஆம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது, இந்திய அணி முதல் இன்னிங்சில் 3 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்கள் எடுத்து, 154 ஓட்டங்களால் பின்தங்கி இருந்தது. ஹோலி (82), ரகானே (51) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இன்று இந்திய துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக விளையாடும் பட்சத்தில், முதல் இன்னிங்சில் முன்னிலை பெற்று அவுஸ்திரேலியாவுக்கு நெருக்கடி கொடுக்கலாம்.

## தொடரை வென்றது பங்களாதேஷ்



சதம் அடித்த சாய் ஹோப்

மெகிடி, தமிமின் அசத்தலான ஆட்டம் கைகொடுக்க பங்களாதேஷ் அணி 8 விக்கெட்டுக்களால் இலகுவான வெற்றியைப் பெற்றதுடன் தொடரையும் கைப்பற்றியது. சாய் கோப்பின் சதம் வீணானது.

பங்களாதேஷ் சென்றுள்ள மே.தீவுகள் அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்றது.

முதலிரண்டு போட்டிகளின் முடிவில், தொடர் 1-1 என சமநிலையில் இருந்தது. இந்நிலையில் மூன்றாவது மற்றும் கடைசி போட்டி சியல்ஹெட்டில் நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

### மெகிடி 'சுழல்' தாக்குதல்

மே.தீவுகள் அணிக்கு சுழற்பந்துவீச்சாளர்கள் தொல்லை கொடுத்தனர். மெகிடி ஹசன் 'சுழல்' வலையில் ஹேம்ராஜ் (9), டரன் பிராவோ (10) சிக்கினர். சகிப் பந்துவீச்சில் ரோஸ்டன் சேஸ் (8), அலன் (6) ஆட்டமிழந்தனர். அணித் தலைவர் ராவ்மென் பாவெல் ஒரு ஓட்டம் எடுத்தார். ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும், நம்பிக்கையுடன் விளையாடிய ஹோப் நான்காவது சதம் கடந்தார்.

50 ஓவர்கள் நிறைவில் மே.தீவுகள் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. ஹோப் (108), பிஷூ (6) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் அதிகபட்சமாக மெகிடி 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

எட்டிவிடும் இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்கு லிட்டன் தாஸ் (23) ஏமாற்றினார். தமிம் இக்பால், சௌமியா சர்கார் ஜோடி அசத்தியது. இருவரும் அரை சதம் கடந்தனர். 2ஆவது விக்கெட்டுக்காக 131 ஓட்டங்களைச் சேர்த்தபோது, சௌமியா சர்க்கர் (80) ஆட்டமிழந்தார்.

பங்களாதேஷ் அணி 38.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (202 ஓட்.,) 8 விக்கெட்டுக்களால் அடைந்தது.

துடுப்பாட்டத்தில் தமிம் (81), முஷ்பிகுர் ரஹிம் (16) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.


# மரண அறிவித்தல்

## சுப்பு கந்தையா

கலையாபரணன் கோட்டை கைதடி நாவற்குழி கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பு கந்தையா கடந்த வெள்ளிக்கிழமை *(14.12.2018)* காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பு - பறுபதம் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சீதேவி தம்பதிகளின் மருமகனும் வள்ளியம்மையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முத்தாச்சி மற்றும் கதிரவேலு ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி, தேவி மற்றும் சின்னத்தங்கம், கந்தசாமி, அரியபுத்திரன் ஆகியோரின் மைத்துனரும் மகேஸ்வரி, கமலாதேவி, கமலநாதன், தவமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஐங்கரன், கந்தசாமி, லலிதாம்பிகை, விஜயகுமார் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற செந்தூரன் மற்றும் சுதர்சன் - சிந்து, செந்தூர்வேல், வினோத், சிந்துஜா - சத்தியராஜ், மிதுனன் - பிரவீனா, தனுசன் - வைசாலி, விஜிந், தர்மிலா ஆகியோரின் பேரனும் சஹானா, சாரா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை *(17.12.2018)* திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.30 மணியளவில் காந்தாளம்பிட்டி (கொல்லங்கிராய்) இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(6714)

தொ.பே: 0094776496012

தகவல்: குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்

## திருமதி மனோன்மணி சோமசுந்தரம்

(மாவிட்டபுரம்)

தோற்றம்:- 16.05.1939

மறைவு: 15.12.2018



யாழ்.வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது இணுவிலில் வாழ்ந்தவருமாகிய திருமதி சோமசுந்தரம் மனோன்மணி நேற்று *(15.12.2018)* சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னராசா - தில்லைக்கண்ணு தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரியும் மகேந்திரராஜா (ஆசிரியர் - வெஸ்லிக் கல்லூரி - கொழும்பு), வத்சலா (கனடா), இராமநாதன் (அதிபர் - யா/வீமன்காமம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சசிகலா (ஆசிரியை - கொழும்பு மத்திய மகா வித்தியாலயம், கொட்டாஞ்சேனை), ஜீவதயாள் (கனடா), கௌசலா (ஆசிரியை - யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் சாரங்கி, சாகித்தியன், கோபிநாத், டிசி, ஹோமதன், கௌதமன், திலோத்தமன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்று *(16.12.2018)* ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் இணுவிலில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(6715)

செட்டிவளவு,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:சோ.இராமநாதன் - மகன் (அதிபர்)
077 589 0019
சோ.மகேந்திரராஜா - மகன் (ஆசிரியர்)
077 151 3729

# மகிந்த பதவி விலக யார் காரணம்?

## சமந்தா பவர் விளக்கம்



நாட்டு மக்கள், சிவில் சமூகம், சுதந்திர ஊடகங்கள், நீதிமன்றம் ஆகியவற்றால் தான், பிரதமர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ஷ விலகும் நிலை ஏற்பட்டுள்ளது என்று ஐ.நாவுக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ஷ விலகிக் கொள்ள தீர்மானம் செய்திருப்பதாக நேற்று முன்தினம் மாலை, தகவல் வெளியானதையடுத்து, தனது டுவிட்டர் பதிவுகளில் சமந்தா பவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்பு சட்டவிரோதமானது என்று உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்புக் குறித்து கருத்து வெளியிட்டுள்ள சமந்தா பவர்.

“இது நாட்டின் ஜனநாயகத்துக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி. இதிலிருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்தியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பிளவுகள் ஆழமாக முன்னர் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதை நோக்கி நகர வேண்டும்” எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# மேன்முறையீட்டு நீதிமன்ற பதில் தலைவராக துரைராஜா



பதில் கடமை புரியும் மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவராக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி எஸ்.துரைராஜா நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் அவர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். (இ-7)

# சிரமதானம்



(சாவகச்சேரி)

இலங்கை -ஐக்கிய நாடுகள் நட்புறவு அமையத்தின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான தென்மராட்சி இளைஞர் சபையினரின் ஏற்பாட்டில் தனங்கிளப்பு கோனா குளப் பகுதி மற்றும் சுற்றுச் சூழலில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை சிரமதானம் மேற்கொள்ளப் பட்டது.

நன்னீர் மாசடைவதை தடுக்கும் நோக்கிலும் பொது மக்களுக்கு விழிப் புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் இந்த சிரமதானப் பணி முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது குளத்தின் சுற்றுச்சூழலில் காணப்பட்ட பொலித்தீன்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் அகற்றப்பட்டதுடன் பற்றைக் காடுகளும் வெட்டி அகற்றப்பட்டன.

இந் நிகழ்வில் இலங்கை -ஐக்கிய நாடுகள் நட்புறவு அமைய தென்மராட்சி இளைஞர் சபை தலைவர் நக்கீரன், ஊடக ஒருங்கிணைப்பாளர் த.சுபேசன், நன்னீர் முகாமைத்துவ செயற்பாட்டாளர துளசிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-30)

# 200 அடி பள்ளத்தில் பாய்ந்து வான் விபத்து

## சாரதி உட்பட 9 பேர் காயம்

(வெலிமடை)

கதிர்காமத்திலிருந்து வெலிமடை நோக்கிச் சென்ற வானொன்று இராவண எல்லை என்ற இடத்தில் 24 வது மைல் பகுதியில் பாதையை விட்டு விலகி 200 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியது.

குறித்த விபத்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

இவ்விபத்தில் வானில் பயணித்த சாரதி உட்பட ஒன்பது இளைஞர்கள் படுகாயங்களுக்குள்ளாகி பதுளை, பண்டாரவளை, தியத்தலாவை ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை



பெற்று வருகின்றனர்.

இவர்களில் பதுளை வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஐவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏனைய நால்வரில் இருவர் பண்டாரவளை வைத்தியசாலையிலும் இருவர் தியத்தலாவை வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த விபத்து குறித்து எல்ல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சிவகுருநாதன்



கூட்டுறவு திணைக்கள ஓய்வு பெற்ற மாவட்ட அலுவலரும் கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய முன்னாள் தர்மகர்த்தாவுமான திரு.கணபதிப்பிள்ளை சிவகுருநாதன் தனது எண்பத்தைந்தாவது அகவையில் 15.12.2018 சனிக்கிழமையன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை- வள்ளியம்மை தம்பதியரின் மூத்த மகனும், சின்னத்தம்பி- இரத்தினம் தம்பதியரின் மருமகனும், இளைப்பாறிய ஆசிரியை (புலோலி மெ.மி.த.க.) ஈஸ்வரியின் அன்புக் கணவரும், கருணாகரன் (கணிய அளவையாளர்- இடைக்காடு), திருவாகரன் (செயலாளர், சுகாதார அமைச்சு, வட.மா.), Dr. வசீகரன் (மாகாணப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம், வட.மா), ரகுகரன் (இயக்குநர்- தூரிகை, நெல்லியடி), மாலினி (கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்) ஆகியோரின் அன்புத் தந்தையும்,

சபாநாதன் (கரவெட்டி), அமரர்.கமலாம்பிகை (வதிரி), மங்கையற்கரசி (லண்டன்), பாலாம்பிகை (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கோமளா (ஆசிரியை- அச்சுவேலி பத்தமேனி, இரத்தினேஸ்வரி வித்தியாலயம்), சசிகலா, ரேணுகா (ஆசிரியை- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும்,

ஆரூரன், ஆரணியன், மிருதுளன், கேதாரினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.12.2018 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**11/2, பொன் கந்தையா வீதி, நெல்லியடி.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(வி-4724)

# இராசி பலன்

**மீனம்:** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசா திருப்பது நல்லது, மாலை நேர பயணங்கள் மகிழ்ச்சி தரும், புதியவர்களின் நட்பு கிடைக்கும்.

**மேடம்:** தொழில் ரீதியாகப் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், சுபகாரிய செலவுகள் அதிகரிக்கும் நாள், சயனக் சுகக்குறைவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், வாகன சுகமுண்டு.

**மிதுனம்:** பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தினர் உங்களின் ஆலோசனையைக் கேட்டு நடக்க முன்வருவர், போசன சுகமுண்டு.

**கும்பம்:** எதிர்பார்ப்புகள் வந்து சேரலாம், நண்பர்களால் வளர்ச்சிகூடும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும்.

**கடகம்:** வெறுத்து ஒதுக்கப்பட்ட சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரும் நிலை ஏற்படலாம், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள்.

**மகரம்:** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

**சிம்மம்:** வழிபாட்டால் வளர்ச்சியை கூட்ட வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.

**கிரகநிலை:** சந் | செவ் | கேது | சூரி., சனி | குரு., புதன் | சுக் | ராகு

சந்திராஷ்டமம்: பூசம், உத்தரம்

16.12.2018

மார்கழி 01, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 6.19 மணிக்கு

நவமி பின்னிரவு 4.12 மணிவரை

உத்திரட்டாதி பின்னிரவு 12.32 மணிவரை

சுபநேரம் 9.22-10.52 மணிவரை

இராகுகாலம் 4.52-6.22 மணிவரை

வளவன்

**தனுசு:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களில் சந்திப்பு இடம் பெறலாம்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சி கூடும் நாள், சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**துலாம்:** தலைமைப் பதவிகள் உங்களைத்தேடி வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப செய்திகள் நாடி வரும் நாள்.

**கன்னி:** சுற்றத்தினர் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

# மாசேரி நுளம்பாய் குளத்தின் புனரமைப்புப்பணிகள் நிறைவு



(வரணி)
தென்மராட்சிகமநலசேவைகள் நிலையப் பிரிவுக்குட்பட்ட மாசேரி கமக்கார அமைப்பிற்குரித்தான நுளம்பாய் குளத்தின்புனரமைப்புப் பணிகள் முடிவுறும் தறுவாயில் காணப்படுகின்றது. இக்குளமானது 50 வருடங்களுக்கு மேலாக எவ்வித தூர்வாரலும் இன்றி சேறு நிறைந்து தூரும் நிலையில் காணப்பட்டது.

இக்குளத்தைப் புனரமைக்க வேண்டும் என வலம்புரிப்பத்திரிகையில் கடந்த வருடமும் இவ்வருட ஆரம்பத்திலும் செய்தி வெளியாகியிருந்தது. இது தொடர்பாக மக்களின் கருத்தும் வெளியாகியிருந்தது. இதனைத் தொடர்ந்து வட மாகாண சபையின் 20 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் கடந்த ஓகஸ்ட் மாதம் மாசேரி கமக்கார அமைப்பினால் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

குளத்தில்காணப்பட்டசேறு முழுமையாக தூர்வாரப்பட்டு நான்கு புறமும் அணைக்கட்டு மண்ணால் அமைக்கப்பட்டு புல்கற்றைகளும் பதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் நீரை வெளியேற்றுவதற்காகவும் தேக்கி வைப்பதற்காகவும் துருசும் போடப்பட்டுள்ளது. மாட்டிறக்கம் மக்கள் நீராடுவதற்காக படிக்கட்டுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் வெளியே உள்ள நீர் குளத்திற்கு பாய்வதற்காக மதகுகள் வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மேலதிக நீர் வயல் 6 வளிக்கு செல்வதற்காக குளத்துடன் இணைந்த கால்வாயும் தூர்வாரப்பட்டு ஆழமாக்கப்பட்டுள்ளது.

ஆகவே குளத்தின் புனரமைப்புப்பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாக மாசேரி கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

குளம் புரமைக்கப்பட்டமையால் தாம் மகிழ்ச்சியடைவதுடன் குளத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்ட அதிகாரிகளுக்கு நன்றியையும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (இ-103)

# முன்பள்ளியின் ஆண்டு நிறைவும் மழலைகளின் கலைக்கதம்பமும்

(யாழ்ப்பாணம்)
ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளியின் 44 வது ஆண்டு நிறைவு விழாவும் மழலைகளின் கலைக்கதம்ப விழாவும் இன்று 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் முன்பள்ளித் தலைவர் கா.சிவசோதி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் ஜெயா தம்பையா, சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.கணேசலிங்கம், யாழ்.மாவட்ட செயலக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி இணைப்பாளர் இ.அமலன், ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத் தலைவர் ஓய்வுநிலை அதிபர் வ.ஆறுமுகம், கௌரவ விருந்தினர்களாக ஆவரங்கால் மேற்கு ஜே/277 கிராம உத்தியோகத்தர் சி.சுபாகரன், ஆவரங்கால் சமுர்த்தி வங்கி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சசீலன் காந்தரூபி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# வெற்றியாளர்களுக்கான கௌரவிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)
மீசாலை உமாதவா கல்வி நிலையத்தின் தரம்-5 புலமைப்பரிசில் வெற்றியாளர்களுக்கான கௌரவிப்பு விழா இன்று 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தென்மராட்சி கலாசார மண்டபத்தில் (சாவகச்சேரி சிவன் கோவில் முன்பாக) உமாதவா கல்வி நிலையத் தலைவர் ஆசிரியர் க.தவயோகராஜா தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன், யாழ்.பல்கலைக்கழக விவசாய பொறியியல் துறைப் பேராசிரியர் திருமதி துஷ்யந்தி மிகுந்தன், சிறப்பு விருந்தினராக வடமாகாண திறைசேரி பிரதம கணக்காளர் வே.கலைச்செல்வன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# முன்பள்ளி திறப்பு விழா



(யாழ்ப்பாணம்)
மண்டைதீவு மகா வித்தியாலய வளாகத்தில் முன்பள்ளி திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஆரம்பப்பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் ஜெயா தம்பையா, வேலணை பிரதேச சபைத் தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி, கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன், பிரபல வர்த்தகர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம், தீவகம் வேலணை முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஆனந்தி குமாரதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-5)

# வயல்களுக்குள் கால்நடைகள் விவசாயிகள் கவலை!

(யாழ்ப்பாணம்)
இருபாலை காலங்காட்டு பிரதேசத்தில் நெற்செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் தமது விவசாய நிலப்பரப்புக்குள் கால்நடைகள் நுழைவதால் நெற்பயிர் அழிவடையும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

யாழ்.குடாநாட்டில் மழை வீழ்ச்சியை நம்பியே பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதாகவும் போதிய மழை வீழ்ச்சி கிடைக்கப்பெற்று அடுத்த மாத நடுப்பகுதியில் அறுவடைக்காக காத்திருக்கும் நிலையில் கால்நடைகள் அவிழ்த்துவிடப்படுவதால்தாம் பொருளாதார ரீதியில் அதிகம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

ஆகவே சம்[illegible]ந்தப்பட்ட அதிகாரிகள் தமது நி[illegible]யை அறிந்து [illegible]ரவாக நடவடிக்கையொன்[illegible]டுக்குமாறு காலங்காட்டு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக உரும்பிராய் விவசாயிகள் சேவை சம்மேளன அபிவிருத்தி உத்தியோகத்தரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, குறித்த விடயம் சம்பந்தமாக தமக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை எனவும் இது தொடர்பில் எழுத்து மூலம் அறியத் தந்தால் நடவடிக்கையெடுக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-9-136)

# சமூக சேவையாளர் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)
யாழ். வீரசிங்கமண்டபத்தில் மாகாண மட்ட மாற்றுத் திறனாளிகள் தின விழா பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் தலைமையில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்றது.

இந் நிகழ்வில் பல்வேறுபட்ட மாற்றுதிறனாளிகளின் கலை கலாசார நிகழ்வுகளும் சிறந்த சமூக சேவையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா போன்ற மாவட்டங்களிலிருந்து பலர் இதில் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் சிறந்த வவுனியா பிரதேச செயலக பிரிவின் சார்பில் வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவர் பாக்கியநாதன் லம்போதரன் சிறந்த சமூக சேவையாளராக கௌரவிக்கப்பட்டார். (இ-7)

# 20 மில்லியன் செலவில் 10 வீதிகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)
கம்பெரலிய வீதிகளைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் காரைநகர் பிரதேச சபையின் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கைக்கமைய 20 மில்லியன் ரூபாய் செலவில் பத்து வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதாக காரைநகர் பிரதேச சபையின் பிரதித்தவிசாளர் கபாலச்சந்திரன் தெரிவித்தார்.

காரைநகர் நாச்சிமார் கோவில் வீதி, பக்தர் கேணி களவிலிப்பிட்டி வீதி, கொட்டப்புலம் இணைப்பு வீதி, ஆவந்தனை வீதி அண்டர்ஸன் வீதி, கேசடை வீதி, வெடியரசன் வீதி 2ஆம் ஒழுங்கை, எஸ்.எம். கேணியடி வீதி, மல்லிகை வீதி மற்றும் மருதபுரம் குறுக்கு வீதிகள் புனரமைப்பு, பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் கண்காணிப்பின் கீழ் பிரதேச செயலகத்தினூடாக நடைமுறைப்படுத்தப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ



**வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் பிரதேச கலாசார பேரவையும் கலாசார அதிகார சபையும் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய கலாசார விழா கடந்த 13 ஆம் திகதி குருநகர் கலாசார மண்டபத்தில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பொ.தயானந்தன் தலைமையில் நடைபெற்றது.**
**(படங்கள்:-கொழும்புத்துறை செய்தியாளர்)**



**கண்ணிவெடிகளற்ற பாதுகாப்பான சூழலை உருவாக்கும் தொனிப்பொருளிலான செயலமர்வும் ஆவணப்பட வெளியீடும் நேற்று முன்தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. ஹலோட்ரஸ்ட், டாஸ் நிறுவன அனுசரணையுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.**

# ஜனாதிபதி கொலைச்சதி தொடர்பில் பொலிஸார் அலட்சியம்-நாமல் குமார

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்வதற்கான சதி முயற்சிகள் குறித்த தனது குற்றச்சாட்டு குறித்து பொலிஸார் உரிய ஆர்வத்தை வெளிப்படுத்தவில்லை என கொலைச் சதி முயற்சியை பகிரங்கப்படுத்திய நாமல் குமார தெரிவித்துள்ளார்.

விசாரணையாளர்கள் மிக மோசமான விதத்தில் செயற்படுகின்றனர் என அவர் ரொய்ட்டரிற்கு தெரிவித்துள்ளார்.

பொலிஸாருக்கு நான் வழங்கவேண்டிய மேலதிக தகவல்கள் உள்ளன என குறிப்பிட்டுள்ள அவர் இந்த விடயம் குறித்த விசாரணைகளில் பொலிஸாருக்கு உதவத் தயார் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஊழலுக்கு எதிரான அமைப்பொன்றை தனதும் நண்பர்களினதும் சொந்த நிதியில் நடத்தி வருவதாக தெரிவிக்கும் நாமல் குமார குறித்து ஆரம்பம் முதல் சந்தேகங்கள் காணப்பட்டதாக ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

அவர் தெரிவித்தது அனைத்தும் அர்த்தமற்ற விடயங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன ரொய்ட்டரிற்கு தெரிவித்துள்ளார்.

நாமல் குமார நம்பத் தகுந்தவரில்லை என ஜனாதிபதியின் நெருங்கிய சகாவான சிரால் லக்திலக தெரிவித்துள்ளார்.

இந்த தகவலை தெரிவித்தவர் நம்பகத்தன்மையற்றவராக காணப்படலாம். ஆனால் இந்த சதியை அலட்சியம் செய்ய முடியாது என அவர் தெரிவித்தார். (இ-7)

# கொழும்பின் பாதுகாப்புக்காக 2000 பொலிஸ் அதிகாரிகள்



(கொழும்பு)

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நிர்வாகத்திற்காக கொழும்பு நகரத்தில் மாத்திரம் 2000 பொலிஸ் அதிகாரிகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நேற்று முதல் விசேட நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

இதன்போது சிவில் உடையணிந்த பொலிஸ் அதிகாரிகள் மற்றும் விசேட பொலிஸ் குழுக்கள் கொழும்பு நகர் முழுவதும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் விதமாக செயற்படும் நபர்கள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை மது போதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் சம்பந்தமாகவும் விசேட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார். (இ-7)

# கம்மன்பில மற்றும் டிலானின் கல்வித் தகைமைகள் பற்றி பரிசீலனை செய்ய வேண்டும்



(கொழும்பு)

உதய கம்மன்பில, டிலான் பெரேரா உள்ளிட்டோரின் கருத்துக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

ஆகவே அரசியல் அமைப்புக்கு எதிராக ஊடகங்கள் மத்தியில் கருத்துக்களை முன்வைத்தவர்களின் கல்வித் தகைமைகள் பற்றி பரிசீலனை செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக மனுத்தாக்கல் செய்தது முதல் தொடர்ச்சியாக உதய கம்மன்பில, டிலான் பெரேரா உள்ளிட்டோர் ஜனாதிபதியின் செயற்பாடுகளை ஆதரித்தே வாதிட்டிருந்தனர்.

ஆனால் அவர்களின் வாதங்களுக்கு எதிராகவே நீதிமன்றம் தீர்ப்பு பெற்றுக்கொடுத்துள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதிக்கு ஆதரவாக வாதிட்டவர்களின் சட்ட கல்வித் தகைமைகள் குறித்து ஆராயவேண்டிய நிலை உருவாகியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கைதடியில் நேற்று விபத்து தாயும் குழந்தையும் காயம்!

(சாவகச்சேரி)

கைதடிப் பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் தாயும் ஒரு வயது ஆண் குழந்தையும் காயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளுக்கு குறுக்காக திடீரென வந்த துவிச்சக்கரவண்டியுடன் மோதாமல் தவிர்க்க முற்பட்ட போதே இவ் விபத்து சம்பவித்துள்ளது. இதன்போது மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் பயணித்த கைதடி வடக்கைச் சேர்ந்த 34 வயது ச.சந்திரிக்கா மற்றும் அவரது ஒரு வயது நிரம்பிய ஆண் குழந்தை ஆகியோர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (இ-30)

# பண்பாட்டுப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் மற்றும் கலாசாரப் பேரவை நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா நாளை மறுதினம் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் நடைபெறும்.

இதில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சு.முரளிதரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் (பதில்) சி.சுஜீவா, கௌரவ விருந்தினராக பருத்தித்துறை யோகாக்கலையக இயக்குநர் மா.இரத்தினசோதி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)


## மணமக்கள் தேவை

- ஆண் (அவுஸ்திரேலியா PR) MBBS 1975-09-26 டொக்டர்
- பெண் 1991 டொக்டர் மணமகன் தேவை
- டீச்சர் பெண் 1990 விவாகரத்து மணமகன் தேவை
- ஆண் 1986 வாகன பரிசோதகர் மணமகள் தேவை
- ஆண் லண்டன் 1980 PR லண்டன் மணப்பெண் தேவை

(6707)

தொடர்புகளுக்கு:- 077 133 1566

## ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்

ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்

வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்திக்கு அருகில்,
திருமணத்தடை, புத்திரபாக்கியம்/புத்திரபாக்கியத்தடை, தொழில் வியாபாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங்கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக்குளத்திலும்...
(புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு - யாழ்ப்பாணம்)
(திங்கள், செவ்வாய், - வவுனியா) (C-4645)

தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்:- 076 328 7119



ஸ்ரீ ராம ஜெயம்



### இனுவில் திருப்பதி

அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலயம்,இனுவில்.

## சுவர்க்கவாசல் ஏகாதசித் திருவிழா-2018

காலம் 18-12-2018 செவ்வாய்க்கிழமை

| | |
|---|---|
| அதிகாலை 4.30 மணிக்கு | சுப்பிரபாதம் |
| அதிகாலை 5.00 மணிக்கு | கோபூஜை தொடர்ந்து இசையாராதனை |
| அதிகாலை 5.50 மணிக்கு | சர்வ சுவர்ண அலங்காரம், விஸ்வரூப தர்சனம், சர்வ உபசாரம், தசதர்சனம், திவ்விய பிரபந்த சமர்ப்பணம், ஸ்ரீநிவாசர் கருவறையில் இருந்து புறப்பாடு. |
| காலை 9.00 மணிக்கு | மூலவர் திருமஞ்சனம்(அபிஷேகம்) |
| நண்பகல் 12.00 மணிக்கு | விசேட பூஜை, அன்னதானம் |
| மாலை 6.00 மணிக்கு | இரவு திருவிழா ஆரம்பம் |
| மாலை 6.30 மணிக்கு | வசந்தமண்டப பூஜை |
| மாலை 7.00 மணிக்கு | சுவாமி வீதி உலா (நாச்சிமார் சகிதம்) |
| மாலை 7.30 மணிக்கு | ஸ்ரீநிவாசர் கருவறை திரும்புதல் (பஞ்சரத்தின ஆராதனை) |
| இரவு 8.30 மணிக்கு | அகண்ட நாம பஜனை தொடர்ந்து நித்திரை விழிப்பு வழிபாடு. |

**19.12.2018 அதிகாலை 5.00 மணிக்கு தீர்த்தவாரி, அபிஷேகம்**

| | |
|---|---|
| காலை 6.00 மணிக்கு | சுவாமி வீதியுலா. |
| காலை 6.30 மணிக்கு | பாரணை அன்னதானம் |

**18.12.2018 இசை நிகழ்வு**

அதிகாலை 5.00 மணிக்கு பாட்டு-அ.அமிர்தலோஜனன், அமிர்தசிந்துஜன், வயலின்-அ.ஜெயராமன், மிருதங்கம்-க.கஜன், கெஞ்சிரா-அ.சண்முகப்பிரியன்.

மாலை.7.30 மணிக்கு சங்கமம் வயலின் வாத்தியக்கலையக மாணவர்களும், கலைஞர்களும் இணைந்து வழங்கும் பஞ்சரத்தின ஆராதனை.

வயலின்- சு.கோபிதாஸ், சு.துவாரகி, சு.மயூரதி, த.பவனுஷா, ஸ்ரீ.கனோஜா, சி.கீதஸ்ரீ, கோ.கலைமகன், சி.சிவேதன், சி.சிவோதயன், கி.அனுஷாகர், அ.அபிராம்

பாட்டு- பொன்.ஸ்ரீ.வாமதேன், கிருபாசக்திகருணா, அ.அமிர்தசிந்துஜன்.

மிருதங்கம்- ம.லோகேந்திரன், ஞா.வசந், கடம்-கு.ரவிசங்கர், மோர்சிங் சி.செந்தூரன்.

குறிப்பு:- வைகுந்த ஏகாதசி விஷேட அபிஷேகம், சகஸ்ரநாம அர்ச்சனை செய்யவிரும்பும் அடியார்கள் முற்கூட்டியே காரியாலயத்தில் பதிவுகளைமேற்கொள்ளவும்.

தொலைபேசி இல.: 021 224 2300

ஆலய தர்மகர்த்தா
ச.கணேசலிங்கம்

## தேவை

**SB travels and tours pvt Ltd**

Air ticketing இல் அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. ஒரு வருடத்திற்கு மேல் அனுபவமுள்ளவர்களுக்கு 18000/+ Commission சம்பளமாகும்.

தொடர்புகளுக்கு:-021 222 9555
No .212,Kashthuriyar Road, Jaffna.
Send CV to sbtravelsjaffna@gmail.com

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர் தொழில்நுட்பவியல் கல்லூரியினால் இன்று 16.12.2018 கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படும் 15 ஆவது பட்டமளிப்பு விழாவில் (Higher National Diploma in English) பட்டத்தினை பெறும்

**செல்வி கஸ்தூரி தருமலிங்கம்**

அவர்களை வாழ்த்துவதோடு தொடர்ந்து பலபட்டங்கள் பெற்று சேவையாற்றி சிறப்புடன் வாழ சந்நிதியான் பாதம் பணிந்து உவகையுடன் வாழ்த்துகின்றோம்.

Congratulations!

நெல்லியடி,
முருகன் வீதி,
மிசாலை.

வாழ்த்துவோர்
அப்பா,அம்மா,பெரியப்பா,
பெரியம்மா, மைத்துனர்,
சகோதரர்கள்.

# விசாரணைக்கு வருமாறு துளசிக்கு ரி.ஐ.டி.அழைப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளரான துளசி என அழைக்கப்படும் கணேசலிங்கம் சந்திரலிங்கத்தை பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினர் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினர் வாக்கு மூலமொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக நெடுங்கேணி சேணப்பிழவில் வசிக்கும் துளசியை எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கொழும்பில் அமைந்துள்ள பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவின் இரண்டாம் மாடிக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

என்ன காரணத்திற்காக விசாரணைக்கு அழைக்கப்படுகின்றார் என்பது தொடர்பில் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை.

இதற்கு முன்னர் கடந்த 2016 ஆம் ஆண்டும் பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினர் விசாரணைக்காக துளசியை அழைத்து சில மணிநேரங்கள் விசாரணை மேற்கொண்டிருந்தனர்.

அதேபோன்று ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உறுப்பினர்கள் பலரும் பயங்கரவாத விசாரணைகள் பிரிவினரால் தொடர்ந்தும் அழைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (இ-9)

# “எழுதாரகை படகை பராமரிக்க போதுமான வருமானம் இல்லை”

(யாழ்ப்பாணம்)

தீவுகளுக்கான பயணிகள் படகுச் சேவைகளில் ஈடுபடும் படகுகளின் தரம் மற்றும் கடல்போக்குவரத்துக்கான தகுதிச் சான்றிதழ்களை வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆளுநர் பணித்துள்ளார்.

எழுவைதீவு, அனலைதீவு உள்ளிட்ட தீவுகளுக்கு இடையில் போக்குவரத்தில் ஈடுபட்டுவந்த எழுதாரகை படகின் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை சம்பந்தமாக ஆராயும் விசேட கூட்டம் ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.



இங்கு கருத்துத் தெரிவித்த உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன், எழுதாரகை படகினை பராமரிப்புச் செய்வதற்கு போதுமான வருமானம் கிடைக்கவில்லை.

அதற்காக பல இலட்சம் ரூபாவினை வருமானத்திற்கு மீறி செலவு செய்கின்றோம். அதனால் அதன் சேவையினைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு இயலாமை ஏற்பட்டுள்ளது. இதற்கு மாற்று வழி ஒன்றினை ஏற்படுத்த வேண்டும் என ஆளுநரிடம் தெரிவித்தார்.

நெடுந்தாரகை, வடதாரகை சேவையில் ஈடுபடுத்துவதைப்போன்று எழுதாரகையினையும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக சேவையில் ஈடுபடுத்த முடியும். அல்லது ஊர்காவற்றுறை பிரதேச சபையிடம் கையளித்து மாகாண சபையின் வருடாந்த வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் நிதியை ஒதுக்கீடு செய்து சேவையில்ஈடுபடுத்த முடியும்.

அதுவும் கைகூடாது போனால் தனியார் நிறுவனங்கள் ஊடாக இச்சேவையை செய்ய முடியும் என ஆலோசிக்கப்பட்டது.

இவைகள் அனைத்தையும் செவிமடுத்த ஆளுநர் தீவகத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடும் படகுகளின் எண்ணிக்கை, கட்டணம் உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் அவற்றில் சட்டரீதியாக காப்புறுதி செலுத்தப்பட்டு அனுமதியுடன் சேவையில் ஈடுபடும் படகுகளின் விபரங்களையும் கட்டணங்களையும் விபரமாக தெரிவிக்குமாறு பணித்துள்ளார்.

தீவகத்தில் வாழும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு படகு சேவையினை உத்தரவாதத்துடன் நடத்துவதற்கும் படகுகளில் பயணிகளுக்கான வசதிகள், பயணிகளுக்கான பாதுகாப்பு அங்கிகள், படகின் தரம், பதிவு காப்புறுதி உள்ளிட்டவை தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (இ-7)

# பார்த்தீனிய ஒழிப்புக்கு ஒத்துழைக்க வேண்டும்

(கரணவாய்)

பார்த்தீனியம் ஒழிக்கும் செயற்பாட்டில் அனைவரையும் ஈடுபடுமாறு சிவன் அறக்கட்டளை நிறுவன ஸ்தாபகர் கணேஸ்வரன் வேலாயுதம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாளை திங்கட்கிழமை முதல் ஒரு வாரத்திற்கு யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலகங்களுடன் இணைந்து இந்தச் செயற்பாடுகள் நடைபெறவுள்ளன.

இதில் இளைஞர்கள் மற்றும் யுவதிகள் மற்றும் சமூக ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

முதற் கட்டமாக யாழ். மாவட்டத்திலும் அதனைத் தொடர்ந்து வடமாகாணத்திலுள்ள ஏனைய மாவட்டங்களிலும் இச் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பார்த்தீனியச் செடியை ஒழிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களின் பாதுகாப்பிற்கான கையுறைகள் வழங்கப்படவுள்ளதால் தத்தமது பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (இ-60)

# இரண்டு வாரங்களுக்குள் நாட்டில் ஸ்திரத்தன்மை

## வஜிர அபேவர்த்தன உறுதி

(கொழும்பு)

அரசியல் நெருக்கடி நிலைமையால் ஸ்திரத்தன்மையை இழந்துள்ள நாட்டை ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் இரு வாரங்களுக்குள் இயல்பு நிலைக்குக் கொண்டுவர முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.



காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் நீதிமன்றங்கள் சுதந்திரமாகக் செயற்படுகின்றது என்பதை சர்வதேசம் கண்கூடாகக் கண்டது. இது எமது நாட்டுக்கு சர்வதேச ரீதியில் நன்மதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எந்தவித அச்சமும் இன்றி எமது நாட்டில் முதலீடு செய்யலாம்.

அநீதி இழைக்கப்பட்டால் நீதிமன்றத்தில் நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளத்தாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)



சாவகச்சேரி ஜே/301 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நேற்றுச் சனிக்கிழமை காலை பயனாளிகளுக்கு பலாமரக் கன்றுகள் வழங்கப்பட்டன. விவசாய அமைச்சின் பத்து இலட்சம் பலாமரக் கன்றுகளை நாட்டும் திட்டத்தின் கீழ் இப் பலாமரக் கன்றுகள் வழங்கி வழங்கப்பட்டன. சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வட்டார ரீதியாக 850 பலாமரக் கன்றுகள் முதற்கட்டமாக வழங்கப்பட்டன. இப் பலாமரக் கன்றுகளை சாவகச்சேரி நகர சபையின் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் விவசாய பிரதி அமைச்சரின் இணைப்பாளர்கள் வழங்கினர். இரண்டு வருடத்தில் பலன் பெறக்கூடிய பலாக்கன்றுகளே பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. (படங்கள்:-சுபேசன்)




❖1925-இலங்கை வானொலியின் ஒலிபரப்பு சேவை கொழும்பில் ஆரம்பமானது.

❖1971-பங்களாதேஷ் விடுதலைப் போர், 1971 இந்திய-பாக்கிஸ்தான் போர்: பாகிஸ்தானிய இராணுவம் சரணடைந்ததை அடுத்து போர் முடிவுக்கு வந்தது. இந்நாள் பங்களாதேஷிலும் இந்தியாவிலும் வெற்றி நாளாகக் கொண்டாடப்படுகிறது.

❖ 2014-பாகிஸ்தானின் தெக்ரிக்கு-இ-தாலிபான் போராளிகள் பெசாவர் நகரில் இராணுவப் பாடசாலை ஒன்றில் தாக்குதல் நடத்தியதில் 145 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் பாடசாலைச் சிறுவர்கள் ஆவர்.

பிறப்புகள்

❖1775-ஜேன் ஆஸ்டின், ஆங்கிலேய எழுத்தாளர் (இ. 1817)

❖1857-எட்வார்டு எமர்சன் பர்னார்டு, அமெரிக்க வானியலாளர் (இ. 1923)

❖1900-மயிலை சீனி. வேங்கடசாமி, தமிழறிஞர், எழுத்தாளர் (இ. 1980)

❖1917-ஆர்தர் சி. கிளார்க், ஆங்கிலேய-இலங்கை எழுத்தாளர் (இ. 2008)

❖1930-லலிதா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (இ. 1982)

❖1933-அடையார் கே. லட்சுமணன், பரதநாட்டியக் கலைஞர், நடன ஆசிரியர் (இ. 2014)

❖1957-எச்.டி.குமாரசாமி, கர்நாடகாவின் 18 ஆவது முதலமைச்சர்.

❖1969-ஆடம் இரீசு, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வானியலாளர், இயற்பியலாளர்

❖ 1983-ஹர்ஷவர்தன் ராணே, தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

இறப்புகள்

❖1515-அபோன்சோ டி அல்புகெர்க்கே, போர்த்துக்கேய இந்தியாவின் 3 ஆவது ஆளுநர் (பி. 1453)

❖192-பனகல் அரசர், தென்னிந்திய அரசியல்வாதி, சென்னை மாகாணத்தின் இரண்டாவது முதலமைச்சர் (பி. 1866)

❖2005-இளையதம்பி தர்சினி, இலங்கை இராணுவத்தால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட இலங்கைத் தமிழ்ப் பெண் (பி. 1985)

சிறப்பு நாள்

❖பங்களாதேஷ் வெற்றி நாள்

❖வெற்றி நாள் (இந்தியா)

❖குடியரசு நாள் (கசகஸ்தான், சோவியத் ஒன்றியத்தில் இருந்து விடுதலை, 1991)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 120 | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 110 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 450 | 350 | 400 |
| தக்காளி | 300 | 300 | 320 | 350 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 30 | 50 |
| கோவா | 120 | 100 | 120 | 100 | 120 |
| கரட் | 200 | 180 | 180 | 230 | 280 |
| பூசணி | 80 | 50 | 30 | 40 | 80 |
| புடோல் | 120 | 140 | 100 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 150 | 120 | 140 | 110 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 300 | 400 | 300 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 200 | 200 | 240 | 210 | 200 |
| லீக்ஸ் | 200 | 220 | 200 | 120 | 240 |
| பீற்றூட் | 200 | 180 | — | — | 200 |
| கறிமிளகாய் | 350 | 300 | 300 | 220 | 280 |
| முருங்கைக்காய் | — | — | — | — | — |
| போஞ்சி | 150 | 180 | 240 | 110 | 200 |
| கத்தரித்தம்புள்ள | 120 | 100 | — | 80 | 80 |
| கீரை-1பிடி | 40 | 50 | 50 | 50 | 60 |
| தேசிக்காய் | 500 | 350 | 350 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 | 180 | 200 |
| வெங்காயப்பூ | — | 500 | — | — | — |
| முள்ளங்கி | 80 | 80 | 120 | 30 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 40 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 80 | 50 | 110 | 70 |

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி முதியோர் சங்கத்தினரின் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நாளை 17 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஜே/144 மாகியப்பிட்டி கிராம உத்தியோகத்தர் பணிமனையில் கிராம உத்தியோகத்தர் ஆர்.மோகனவாணி தலைமையில் நடைபெறும்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வி.சிவராஜா, சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்மினி றஜீவன் ஆகியோர் கலந்து கொள்வர். அறுபது வயதிற்கு மேற்பட்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-5)

## நிழல் பிரதமராக சம்பந்தன்

# புலிகளைத் தோற்கடித்த மகிந்தவுக்கு எதிராகவே அனைவரும் செயற்படுகின்றனர்-சுசில் விசனம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராகவே அனைவரும் செயற்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜெயந்த குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.




"தற்போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு பதிலாக சுமந்திரன் தலைமையிலான அணியினர் செயற்படுகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியையும் அவரே இயக்குகின்றார்.

இந்நிலையில், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நிழல் பிரதமராக செயற்படுகிறார். இவ்வாறான நபர்களிடம் நாட்டை கையளிப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை.

எவ்வாறாயினும், உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நாங்கள் மதிக்கின்றோம். இந்த நாடாளுமன்றத்தை தொடர்ந்தும் கொண்டு செல்ல முடியாது. ஆகையால் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும்.

எவ்வாறாயினும், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஊடாக மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை பறிக்கப்பட்டுள்ளது.

எனினும், இதனை ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி என ஐக்கிய தேசியக் கட்சியினர் கூறிவருகின்றனர்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்





(இளவாலை)

தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/222 கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகனால் வழங்கப்பட்டது.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ தலைமையில் சேந்தாங்குளம் கிராம உத்தியோகத்தர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இந்த மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன. (இ-104)

# ரணிலுக்கு பதவியை வழங்க ஜனாதிபதி மறுக்க முடியாது

## அஜித் பி பெரேரா தெரிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்றக் கலைப்பு தவறு எனக் கூறிய தீர்ப்பின் சூடு ஆற முன் மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்மானம் சரியென உயர் நீதிமன்றம் ஜனநாயத்தை காப்பாற்றியுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

நீதிமன்றத் தீர்ப்புக்களைக் கவனத்தில் கொண்டும் அடுத்த வருடம் அல்லலுறப் போகும் மக்களின் நிலையைக் கருத்தில் கொண்டும் ஜனாதிபதி விரைவாக முடிவொன்றுக்கு வர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்த, மகிந்த தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிரான இடைக்கால தடையுத்தரவை இரத்துச் செய்யக் கோரி கையளிக்கப்பட்ட மனு தொடர்பான பரிசீலனைகள் நேற்று முன்தினம் உயர் நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது ஆஜராகி விட்டு நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டமொன்று இல்லாமல் நாட்டு மக்கள் அல்லலுற வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. ஆகவே அதனை நிவர்த்திக்க வேண்டிய கடமை பாராளுமன்ற பெரும்பான்மையைக் கொண்ட எம்மிடமே உள்ளது.

நாட்டு மக்களைக் கருத்தில் கொண்டாவது விரைவாக ஜனாதிபதி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சபாநாயகர் மீது இதுவரையில் எதிரணி முன்வைத்து வந்த குற்றச்சாட்டுக்களும் நீதிமன்றத் தீர்ப்பால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

எனவே, பாராளுமன்றப் பெரும்பான்மை ஆதரவையுடைய ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி பதவியை வழங்க மறுக்க முடியாது.

நீதிமன்றம் சட்டத்துக்கு முரணாக இயங்கிய அரசாங்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. எனவே புதிய அரசாங்கம் தற்போது தேவை. அதனை விரைந்து நியமிக்க வேண்டியது ஜனாதிபதியின் கடமை. இல்லையேல் தொடர்ந்தும் நீதிமன்றில் தோல்விகளைக் காண ஜனாதிபதி உள்ளிட்டோர் தயாராக வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நீதியரசருக்கு எதிராக அவமதிப்பு வழக்கு

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுக்கு எதிராக, உச்சநீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பேராசிரியர் சந்திரகுப்த தேநுவர, பேராசிரியர் ஹேவாவாதுகே சிறில், சிரேஷ்ட பேராசிரியர் பிரசாந்த குணவர்த்தன ஆகியோரே இந்த மனுவைத் தாக்கல் செய்தனர்.

மருதானையில் கடந்த மார்ச் 12ஆம் திகதி ஜாதிக எக்கமுத்துவ அமைப்பால், ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் முன்னாள் தலைமை நீதியரசர், சரத் என் சில்வா, நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் உரையாற்றினார் என்று அவர்கள் தமது மனுவில் கூறியுள்ளனர்.

இதேவேளை ஒக்டோபர் 18 ஆம் திகதி, அவர் அதே கருத்தை வலியுறுத்தியிருக்கிறார் என்றும், எனவே உச்சநீதிமன்றம் அவருக்கு எதிராக விசாரணை நடத்தி, சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் கோரியுள்ளனர். (இ-7)


# மரண அறிவித்தல்



மலர்வு 11 . 07 . 1931

உதிர்வு 12 . 12 . 2018

## செல்லப்பா பேரின்பம்.

(முன்னாள் உரிமையாளர் Yoga Trading Co., Dam Street, Col-

*புங்குடுதீவு 12-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா பேரின்பம் அவர்கள் நேற்று முன்தினம் (12.12.2018) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சின்னம்மா அவர்களின் அன்புக் கணவரும், விஜயசுந்தரம் (சுவிஸ்), பராசக்தி (கனடா), காலஞ்சென்றவர்களான கனகம்மா, புவனேஸ்வரி, பத்மநாதன், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானவதி (கனடா), சரஸ்வதி, குகேந்திரன், கனகேந்திரன், கிருபானந்தன் (சுவிஸ்), யோகவதி, கிருஷ்ணகுமார் (லண்டன்), மதிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகரன் (கனடா), குகதரன், காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் சரோஜினி, மோகனா, வதனி (சுவிஸ்), வித்தியா (லண்டன்), தயானா ஆகியோரின் அன்பு மாமனாரும், தரணீகரன், கிரிவதனன், பிரியதர்ஷினி, சுஜிதா, கார்த்தீபன், நிஷாந்தன், நிருஷிகா, பிரஷாந், சாருஜா, தனஞ்சயா, அருண்பிரசாந்த், இலக்கியா, கோபிகா, கோகுலன், அபிநயா, சசானா, சபித்தா, சஜித், கிரிஷாந், அனுஷன், தானியா, ஆரவ், அக்ஷரன், ஆருத்ரன், ஆதிரா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.12.2018 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று கொழும்பு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.*

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்

No.09, Ridgeway Place,
Colombo - 04.

தகவல் : மக்கள், மருமக்கள்,
குடும்பத்தினர். 011 258 5489

# ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற ஐ.தே.க தயார்



## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து பணியாற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயார் என அக்கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமிப்பதற்கு ஜனாதிபதி இணங்கியுள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிப்பதில்லை என முன்னர் உறுதியாக தெரிவித்திருந்த போதிலும் தற்போது ரணிலை நியமிப்பதற்கு அவர் இணங்கியுள்ளமை குறித்து நான் ஆச்சரியப்படவில்லை என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது ஜனாதிபதியின் உண்மையான குணாதிசயத்தை வெளிப்படுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்தை விரும்பாத சிலர் ஜனாதிபதியை தவறாக வழிநடத்தினர்.இதன் காரணமாகவே அவர் பிரதமரை நீக்கினார் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போது உண்மை தெரியவந்துள்ளது எனவும் சஜித் தெரிவித்தார். (இ-7)

## வல்லிபுரத்தில் திருப்பாவை பூஜை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று 16 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை ஆண்டாள் பாடிய திருப்பாவைப் பூஜை இடம்பெறும்.

தினமும் அதிகாலை 5.30 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி திருப்பாவை ஓதும் வைபவம் இடம் பெறுவதோடு ஞாயிற்றுக் கிழமை தோறும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் வீதி உலா வரும் வைபவமும் இடம்பெறும். (இ-9-19)

## புதையல் அகழ்வு; 15 பேர் கைது

(கொழும்பு)

வாழைச்சேனை புதையல் அகழ்வில் ஈடுபட்ட 15 பேர் பொலிஸாரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து ஸ்கான் இயந்திரம், பாரவூர்தியொன்று, ஆட்டோ மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஆகியன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

மாத்தளை, கொகரெல்ல, பக்கமுண, மாகடவெவ, மெதிரிகிரிய, வெயங்கொடை, கேகாலை மற்றும் சீதுவை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

## புதிய பிரதமராகப் பதவியேற்கவுள்ள ரணிலுக்கு இராதாகிருஸ்ணன் வாழ்த்து

(கொழும்பு)

நாட்டை சிறந்த முறையில் கட்டியெழுப்புவதற்கு இன்று மீண்டும் பிரதமராகப் பதவியேற்கவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஸ்ணன் தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.



நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இராதாகிருஸ்ணன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஒரு தவறு நிகழ்ந்தால் அதில் பாதிக்கப்பட்டவர் தனது பிரச்சினையை முதலில் கடவுளிடம் முறையிடுவார். பின்னர் நீதித்துறையை நாடுவார். இதன்போது அதற்கான நீதியை நீதித்துறையிடமிருந்தே விரைவாக எதிர்பார்ப்பது மனிதனின் இயல்பு. அந்தவகையில் இலங்கையில்கடந்த 50நாட்களாக நடைபெற்ற அரசியல் யுத்தத்திற்கு ஒரு நல்ல தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

மேலும் இந்நாட்டில் நீதித்துறைக்கும் ஜனநாயகத்திற்கும் யாரும் சவால் விட முடியாது என்ற நிலையை நீதிமன்ற தீர்ப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை நாட்டின் புதிய பிரதமராக இன்று தெரிவு செய்யப்படவுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு மலையக மக்கள் சார்பில் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் நாட்டின் ஜனநாயகத்தை தொடர்ந்து பாதுகாக்க வேண்டும்" என இராதாகிருஸ்ணன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஜனநாயகத்தைப் பாதுகாக்கவே ஐ.தே.கவுக்கு ஆதரவளித்தோம்

## யோகேஸ்வரன் எம்.பி. விளக்கம்

(ஏறாவூர்)

ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காகவே நாங்கள் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவு வழங்கினோம் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.யோகேஸ்வரன் தெரிவித்தார்.



மட்டக்களப்பு பார் வீதியில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்தகாலத்தில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கு நாங்கள் ஆதரவு வழங்கியிருந்தோம். கடந்த காலத்தில் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவே தமிழத் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து மக்கள் வாக்களித்துள்ளனர். அதனால் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கினோம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்வைத்த கோரிக்கைகளை மகிந்த ராஜபக்ஷ நிராகரித்த நிலையில் அவற்றில் சிலவற்றினை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டதன் காரணமாகவே தாங்கள் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவளித்தோம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினை விமர்சனம் செய்யும் தமிழ் கட்சிகள் வட-கிழக்கு மக்கள் சார்பாக எத்தனை வழக்குகளை நீதிமன்றுக்கு கொண்டுசென்று நடவடிக்கையெடுத்தீர்கள் என்பதை பகிரங்கப்படுத்தவேண்டும் எனவும் அவர் இதன்போது கேட்டுக்கொண்டார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு முஸ்லிம்களுடன் செல்வதாக கூறித்திரிந்தவர்கள் இன்று அந்த முஸ்லிம்களுடனேயே ஆட்சியமைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நாட்டில் பிரதான சிங்கள தேசிய கட்சிகளே இந்த நாட்டினை ஆட்சிசெய்யும் சூழல் இருக்கின்றது.. தமிழ் கட்சிகள் இந்த நாட்டினை ஆட்சி செய்யமுடியாது. அதன்காரணமாகவே தமிழ் மக்கள் சுயாட்சியொன்றைபெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக அதிகாரப் பரவலாக்கலை கோரி நிற்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்கு நியாயமானதை வழங்கியவர் என்றோ தமிழ் மக்களின் தேவையினை முழுமையாக பூர்த்தி செய்தவர் என்றோ நாங்கள் கூறவில்லை. ரணிலுடன் ஒப்பிடும்போது மகிந்த ராஜபக்ஷ காலத்தில் படுமோசமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதேபோன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நாங்கள் கூடிய ஆதரவினை வழங்கியிருந்த போதிலும் அவர் அரசியலமைப்புக்கு முரணானவகையில் செயற்பட்டுள்ளார்.இந்த விடயங்களுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கமுடியாது.

பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சியில்தான் சிறுபான்மை கட்சிகள் கூடுதலாக பிரதிநிதித்துவம் பெற்றுள்ளது. சிறுபான்மை கட்சிகள் அதிகளவில் உள்ள நிலையில் நாட்டில் ஜனநாயகத்தினை ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி செயற்படும் நிலையில் அதற்கான ஆதரவினை ஜனநாயகத்தின் அடிப்படையில் வழங்கியுள்ளோம்.

ரணில் விக்கிரமசிங்கவிடம் சிலகோரிக்கைகளை முன்வைத்தோம். அதே கோரிக்கைகளை மகிந்த ராஜக்ஷவிடமும் முன் வைத்தோம்.ஆனால் அந்தகோரிக்கைகளை அவர் நிராகரித்துவிட்டார்.

ரணில் விக்கிரமசி ங்க சிலகோரிக்கைகளை ஏற்றுக்கொண்டுள்ளார். அந்த அடிப்படையில் ரணில் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் அவருக்கு ஆதரவாக வாக்களித்தோம்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் பல சிங்கள குடியேற்றங்கள் நடைபெற்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட குடியேற்றங்கள் நடைபெற்றன. அந்த ஆட்சிக்காலத்தில் பல பிரச்சினைகளை, தமிழ் மக்கள் எதிர்கொண்டனர். ஆனால் நல்லாட்சியில் குடியேற்ற செயற்பாடுகள் குறைக்கப்பட்டுள்ளன. குடியேற்றங்கள் நடைபெறவில்லையென கூறவில்லை. ஆனால்குறைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மைலத்தமனை, பெரியமாதவனையில் பாரிய சிங்கள குடியேற்றம் திட்டமிடப்பட்ட வகையில் நடைபெற்றது. அது தொடர்பில் அன்று ஜனாதிபதி, பிரதமரின் கவனத்திற்கு கொண்டுசென்று அங்கு பாரிய பௌத்த விகாரை அமைக்க நடவடிக்கையெடுக்கப்பட்டு பௌத்த பிக்கு ஒருவர் இருந்தபோதும் அங்கிருந்து அவற்றினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

ஆனால் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி நடைபெற்றிருந்தால் அதனை செய்திருக்க முடியாது.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் கிழக்குமாகாண காணிஆணையாளர் திட்டமிட்ட வகையில் 187 சிங்கள குடும்பங்களை இங்கு குடியேற்றம் செய்வதற்கு போலி அனுமதிப்பத்திரம் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு குடியேற்ற நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டபோது அது தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு எடுத்த சகல நடவடிக்கைகள் காரணமாக அது தடைப்பட்டது.

நல்லாட்சி ஏற்பட்டதன் பின்னர் நீதித்துறை சுதந்திரமாக இயங்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது ஜனநாயகத்தினை மதித்து அரசியலமைப்பை மதித்து நியாயமான முறையில் வழங்கப்பட்ட தீர்ப்பாக நாங்கள் பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாதாள கும்பலுக்கு துப்பாக்கி விநியோகித்த இராணுவ அதிகாரிக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

பாதாள உலகைச் சேர்ந்த மூவருக்கு இராணுவ முகாமிலிருந்த துப்பாக்கிகள் மற்றும் ரிவோல்வர்களுக்கு பயன்படுத்தப்படும் பெருந் தொகையிலான தோட்டாக்கள் வழங்கிய இராணுவ கட்டளை அதிகாரி கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட நிலையில் நீதிபதி அவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமபடி உத்தரவிட்டார்.

சியாம்பலாண்டுவை நீதவான் நீதிபதி நிலந்த விமலரட்ன முன்னிலையில் இராணுவ மேஜரான கட்டளை அதிகாரியை சியாம்பலாண்டுவை பொலிஸார் ஆஜர் செய்திருந்தனர்.

அவ்வேளையில் நீதிபதி அவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

சியம்பலாண்டுவைபொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த பண்டாரவிற்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றினையடுத்து பொலிஸார் தொம்பகாவெலயின் ஆடம்பர வீடொன்றினை சுற்றிவளைத்து தேடுதல்களை மேற்கொண்டிருந்தனர்.

அவ்வேளையில் பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்பட்ட மூவரைக் கைது செய்திருந்தனர்.

இதனையடுத்து அவர்களின் உடைமைகளை சோதனையிட்ட பொலிஸார் ரி-56 ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 2997 தோட்டாக்களையும் 3.8 மில்லி மீற்றர்களைக் கொண்ட ரிவோல்வர்களுக்கு பயன்படுத்தப்படும் 32 தோட்டாக்களையும் மீட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்ட போது பெருந்தொகையான தோட்டாக்கள் இராணுவ மேஜரான கட்டளை அதிகாரியிடம் தாம் பெற்றதாகக் கூறியதையடுத்து அவர் கைது செய்யப்பட்டு நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட மூவர் ஏற்கனவே சியம்பலாண்டுவை நீதவான் நீதிபதி நிலந்த விமலரட்ன முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர்களை தடுத்து வைத்து விசாரணை செய்ய பொலிஸாருக்கு அனுமதி வழங்கியதோடு எதிர்வரும் 26 ஆம் திகதி சியம்பலாண்டுவை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

குறித்த மூவரை தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்ட போது குறித்த மூவரும்நாட்டின்பலபொலிஸ் நிலையங்களில் தேடப்பட்டு வந்த பிரபல குற்றவாளிகள் என்றும் இவர்கள் பாதாள உலகைத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சியம்பலாண்டுவைப் பொலிஸார் தொடர்ந்து தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# வாழ்வாதாரத்திற்கு உதவி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இருபாலை கிழக்கு பகுதியில் பெற்றோரை இழந்து விசேட தேவைக்கு உட்பட்ட நிலையில் வாழ்ந்து வரும்யுவதிக்கு அவரின்வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நோர்வே காலையடி இணைய உதவும் கரங்களின் அனுசரணையுடன் புலம்பெயர் அன்பர் ஒருவரின் நிதிப்பங்களிப்பில் தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இருபாலை விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் குறித்த தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. (இ-60)

# பொது மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும்



(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டு நிலைமையை தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கையை மக்கள் தீர்மானிக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏழரை வாரமாக நாட்டில் அரசாங்கம் ஒன்று இல்லை. இதனூடாக நாட்டில் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பின் காரணமாக, முதலீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், சுற்றுலா பயணிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சந்திரிகா தெரிவித்தார். (இ-7)

# பொலிஸார் படுகொலை கண்டித்து கவனயீர்ப்பு!



(ஏறாவூர்)

வவுணதீவில் இரண்டு பொலிஸார் கொலை சம்பவத்தை கண்டித்து மட்டக்களப்பில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. தமிழர் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் காந்தி பூங்காவிற்கு முன்பாகருந்துஆர்ப்பாட்டப்பேரணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி படுகொலைசெய்யப்பட்ட இருபொலிஸாரின்கொலைக்கு நீதிவேண்டியும் உடனடியாக கொலையாளிகளை கைது செய்யக் கோரியும் குறித்த போராட்டம் நேற்றுக்காலை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கடற்படை வீரர்கள் இருவரின் விளக்கமறியல் காலம் நீடிப்பு

(கொழும்பு)

கொழும்பில் 11 தமிழர்களை கடத்தி காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கடற்படை வீரர்கள் இருவரும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று முன்தினம் கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த 2008ஆம் ஆண்டு 11 தமிழர்கள் கொழும்பில் வைத்து கடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கப்பம் பெற்ற இருவர் கைது

(ஹொரணை)

ஹொரணை பகுதியில் பொலிஸ் அதிகாரிகள் என தம்மை அடையாளப்படுத்தி தொலைபேசியூடாக வர்த்தகர்களை மிரட்டி கப்பம் பெற்ற சந்தேக நபர்கள் இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து ஒரு கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (இ-7)

# கொள்ளையில் ஈடுபட்டவர் 19ம் திகதிவரை மறியலில்

(கரணவாய்)

கொள்ளையில் ஈடுபட்ட நபர் ஒருவரை எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிபதி குமாரசுவாமி உத்தரவிட்டார்.

கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னர் மாலுசந்தி தொலைத் தொடர்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ். சுகிர்தனின் பெற்றோர் வீட்டில் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றது.

இது தொடர்பில் விசாரணையை மேற்கொண்டு வந்த நெல்லியடி பொலிஸார் துன்னாலை ஆட்டிப்பட்டி கொனியைச் சேர்ந்த நபர் ஒருவரைகைது செய்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்திய போது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிபதி உத்தரவிட்டார். (இ-60)



சண்டிலிப்பாய் பிரதேச இலக்கிய போட்டிகளில் இலக்கிய விபரணம் கிராமியக்கலை கற்றல் ஆகியவற்றில் முதலாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்ற சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் கலாதேவி பாலசுந்தரத்திற்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற கலாசார விழாவில் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

# வீதிப்புனரமைப்புக்கு 20 இலட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

பல வருடகாலமாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக காணப்பட்ட உரும்பிராய் கிழக்கு அயட்டப்புல வீதி 20 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

செல்லப்பா சனசமூக நிலைய நிர்வாகத்தினரால் யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய கோப்பாய் பிரதேச செயலாளரால் இத்திட்டம் சிபாரிசு செய்யப்பட்டது.


இவ் வீதியைத் திருத்தும் பணிக்ககவலிக்கிழக்கு தவிசாளரின் மேற்பார்வை யின் கீழ் அளவீடும்பணிகள்கடந்த இரு வாரங்களுக்கு முன் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (இ

# நீரோடையில் பெண்ணின் சடலம்

(மகியங்கனை)

மகியங்கனை வியானா நீரோடையில் மிதந்து வந்த பெண்ணொருவரின் சடலத்தை மஹியங்கனைப் பொலிஸார் நேற்றுக்காலை மீட்டுள்ளனர். (இ-7)

# மத்தள விமான நிலையத்தில் தரையிறங்கிய மிகப்பெரிய விமானம்



(மாத்தளை)

உலகின் இரண்டாவது மிகப்பெரிய விமானமான என்டநொவ் 124 ரக சரக்கு விமானம் அவசரமாக மத்தள விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப கோளாறு காரணமாக விமானம்மத்தள விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

தாய்லாந்தில் இருந்து உகண்டா நோக்கி பயணித்த இந்த விமானம் நேற்று முன்தினம் அதிகாலை 5.26 மணியளவில் மத்தள சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கோளாறுகள்சரி செய்யப்பட்டு மத்தள சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நேற்று முற்பகல் 10.26 மணியளவில் மீண்டும் உகண்டா நோக்கி விமானம் பயணித்துள்ளது. (இ-7)



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் நினைவு வணக்க நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமான அறிவகத்தில் உணர்வெழுச்சியாக நடைபெற்றது. கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் கலைவாணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மற்றும் மூத்த பத்திரிகையாளரும் அன்ரன் பாலசிங்கத்தை நன்கறிந்த அவரது நண்பருமான ந.வித்தியாதரன், வடக்கு மாகாண முன்னாள் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றினார்கள். இந்நிகழ்வில் வட மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராசா, வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை மற்றும் கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்திற்கு வணக்கம் செலுத்தியிருந்தார்கள். (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

### புத்தர்சிலை நிறுவப்படுவதை தடுத்து நிறுத்த

# தமிழ்மக்களின் பிரதிநிதிகள் விரைந்து செயற்படவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவருக்கு தமிழர் மரபுரிமைப்பேரவை கடிதம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மலை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் அடையாளங்கள் அழிக்கப்பட்டு பாரிய புத்தர்சிலையொன்று நிறுவப்படுகின்றது. எக்காலத்திலும் பௌத்தமக்கள் வாழ்ந்திராத இப்பிரதேசத்தில் தொல்லியல் திணைக்களத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் இக்கட்டுமானமானது பிரதேச மக்கள் மத்தியில் ஆழ்ந்த கவலையையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டமிட்ட செயற்பாடுகளை உடனடியாக தடுத்து நிறுத்த தமிழ் மக்கள் பிரதிநிதிகள் விரைந்து செயற்பட வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கின்றார்கள் என எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தனுக்கு தமிழர் மரபுரிமைப் பேரவையின் இணைத்தலைவர்கள் இணைந்து அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர். அக்கடிதத்தின்படி:

கடந்தகாலங்களில் மேற்படி பிரதேசத்தைச் சூழவுள்ள தமிழ்மக்களின் முந்திரிகைச் செய்கை காணிகளையும் கிறிஸ்தவ சேமக்காலையையும் ஆக்கிரமிக்க தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட முயற்சிகள் பிரதேசமக்களின் தொடர் போராட்டங்கள் காரணமாக கைவிடப்பட்டிருந்தன.

ஆட்சிக் குழப்ப நிலையினை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு இவ் ஆலயப் பகுதியில் சட்டவிரோதமாக (எந்தவிதமான காணி அனுமதிப்பத்திரங்களு மின்றி) தங்கியுள்ள கொலம்பமேதாலங்க தேரர் என்ற பௌத்த பிக்கு மிகவும் அவசர அவசரமாக புத்தர் சிலையை நிர்மாணித்து திறப்பு விழாச் செய்ய முற்படுவது இப்பிரதேச மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியிருப்பதோடு இது அமைதிக்குலைவிற்கும் வழி வகுக்கும்.

அண்மைய நாட்களில் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள் திருகோணமலை மாவட்டத்தில் தென்னமரவாடிப் பிரதே சத்திலும் வவுனியா மாவட்ட த்தின் சம்மளங்குளம் பகுதியி லும் இடம்பெற்ற வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்புடன் ஆட்சிக்குழப்பநிலை முடிவுக்கு வரவுள்ள சூழ்நிலையில் இச்சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி அரசுக்கு காத்திரமான அழுத்தத்தினை கொடுப்பதுட னூடாகத் திட்டமிடப்பட்ட பௌத்தமயமாக்கல் செய ற்பாடுகளைத் தடுத்து நிறுத்த முன்வருமாறு தங் களை தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம். பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து விரைந்து செயலாற்று வீர்கள் என நம்புகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-281)

# மடுத்திருத்தலத்தை புனித பிரதேசமாக்குவதை மறு பரிசீலனைக்குட்படுத்த வேண்டும்

## மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அவசரக் கடிதம்

(மன்னார்)

மடுத்திருத்தலத்தை அரசாங்கத்தின் புனிதப் பிரதேசமாக்கும் முயற்சி தொலைநோக்கு பார்வையில் மிக அபாயமான பின்னடைவை ஏற்படுத்தலாம் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகைக்கு நேற்று அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்கத்தின் நன்கு திட்டமிட்ட உள்நோக்கமுள்ள எண்ணத்துடன் புனித பிரதேசமாக்க அவசரகதியில் முயல்வது இயல்பாகவே ஐயத்தை உண்டாக்குவதுடன் இச் செயலுக்குப்பின் மதங் கடந்த மிகப் பெரிய அரசியல்உண்டு என்பது மறுக்க முடியாத உண்மை.

புனிதப் பிரதேசமாக்கிய கதிர்காமத்தின் இன்றைய நிலை என்ன என்பது யாவரும் பகிரங்கமாக அறிந்த உண்மை.

அதற்குப் பின்னரும் தமிழர் தேசத்தின் அடையாள இருப்பிடங்களை சிங்கள தேசியமயமாக்கலுக்கு பகிர்ந்தளிப்பது எதிர்காலத்தில் பாரிய பின் விளைவை ஏற்படுத்துவதுடன் நிர்வாக இருப்பியலை சவாலுக் குட்படுத்தி சரணாகதி நிலையை ஏற்படுத்தும். ஆகவே நாம் விழித்துக் கொள்வது அவசியம்.

அவர்கள் அபிவிருத்தியை காட்டி எம்மை மயக்க முற்படலாம். இவை எல்லாம் அரசின் நீண்டகால செயற்றிட்டங்களே என்பது வெள்ளிடைமலையாகும்.

ஆகவே தயவு செய்து புனிதப் பிரதேசமாக்கும் கோரிக்கையை மறு பரிசீலனைக்குட்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-285)

## விவசாயப்பயிற்சி, குழாய் பொருத்துநர் பாடநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(பூநகரி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இலவச விவசாயப் பயிற்சி மற்றும் குழாய் பொருத்துநர்பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன்படி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் பூநகரிப்பிரதேசத்தின் ஜெயபுரத்தில் அமைந்துள்ள விவசாயப்பயிற்சி நிலையத்தில் தமிழ்மொழி மூலமான வெளிக்கள விவசாயப் பயிற்சி 2019 ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை நடத் தப்படவுள்ளதாக தேசிய இளை ஞர் சேவைகள் மன்ற விவசாயப் பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரி க.சிந்துஜன் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சியில் ஆண், பெண் இருபாலாரும் பங்கேற்க முடியும்.

குழாய் பொருத்துநர் பயிற்சிநெறியானது ஜூலை மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை நடைபெறும்.

இப்பயிற்சியில் ஆண்கள் மட்டும் பங்கேற்ற முடியும்.

இப் பயிற்சி நெறிகளில் பங்குபற்றி பயன்பெற விரும்புவோர் டிசெம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் நிலையப் பொறுப்பதிகாரி, விவசாயப் பயிற்சி நிலையம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், யாழ் மன்னார் வீதி ,ஜெயபுரம் எனும் விலாசத்திற்கு தாங்கள் சுயமாகத் தயாரித்த விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிகளுக்காக எவ்விதமான கட்டணமும் அறவிடப்படமாட்டாது. பயிற்சிக் காலத்தில் தங்குமிடம்மற்றும்உணவு இலவசம் (விவசாயப் பயிற்சிக்கு மாத்திரம்), செயன்முறை மற்றும் எழுத்து மூலமான பயிற்சிகள் வழங்கப்படும். குழாய் பொருத்துநர் பயிற்சி வார நாட்களில் வழங்கப்படும், இலங்கை முழுவதும் வசிக்கின்ற இளைஞர், யுவதிகள் பங்குபற்றிப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளலாம், பயிற்சியின் முடிவில் NVQ சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும், வயதெல்லை 16 தொடக்கம் 29 ஆகும். க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்.

மேலதிக தகவல் தேவைப்படுவோர் 077 358 9165 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2)

## தேசிய நத்தார் நிகழ்வு இன்று மன்னாரில்

(மன்னார்)

வருடா வருடம் தேசிய ரீதியில் கொண்டாடப்படும் கிறிஸ்து பிறப்பு நிகழ்வு மற்றும் ஒளிவிழாவானது இந்த வருடம் மன்னார் மாவட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம் பெறும்.


இலங்கையில்உள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி 2018 ஆம் ஆண்டுக்கான தேசிய கிறிஸ்மஸ் விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

வர்த்தகம், நுகர்வோர், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சும் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்யும் அரச நத்தார் கொண்டாட்டம் இன்று 16ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு மன்னார் நகரசபை விளையாட்டரங்கில் நடத்துவதற்கு அனைத்து ஏற் பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன.

வர்த்தகம், நுகர்வோர், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் அழைப்பின் பேரில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் ஆயர் வின்ஸ்டன் பர்னாந்து ஆண்டகை மற்றும் மன்னார் மறைமாவட்ட ஆயர். இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை ஆகியோரின் பங்குபற்றலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இவ் விழா இடம்பெறவுள்ளது. இவ் விழாவில் இலங்கை முழுவதிலும் இருந்து சுமார் மூவாயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்து கொள்ள இருப்பது குறிப்பிடதக்கது.(2-285)




## தாண்டிக்குளம் வீதியோரத்தில் வீசப்படும் கழிவுகளால் அசௌகரியம்



(குருமன்காடு)

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் வீதியோரத்தில் வீசப்படும் கழிவுகளால் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

வவுனியா - ஈச்சங்குளம் வீதியில் தாண்டிக்குளம் பகுதியில் உள்ள நீர் பாயும் கால்வாய் மற்றும் வீதியோரங்களில் கழிவுகள் தினமும் வீசப்பட்டு வருகின்றன.

வீட்டு கழிவுகள், கடை கழிவுகள், கோழி இறைச்சி கடை கழிவுகள் என அப்பகுதியில் வீசப்படுவதால் அப்பகுதி துர்நாற்றம் வீசுவதுடன், அவ் வீதியால் பயணிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

அங்கு வீசப்படும் கழிவுகள் ஓடும் நீரினாலும், நாய் மற்றும் காகம் போன்றவற்றினாலும் காவிச் செல்லப்படுவதனால் அயலில் உள்ள வீடுகளிலும் வசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் தொற்றுநோய் பரவக் கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து வவுனியா நகரசபை கவனம் செலுத்தி கழிவு முகாமைத்துவத்தை மேற்கொண்டு தம்மை நிம்மதியாக வாழ வழியை ஏற்படுத்தவேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (2-250)

## போசாக்கு தொடர்பான ஆய்வும் கலந்துரையாடலும் மன்னாரில் நாளை

(மன்னார்)

மன்னார் மாவட்ட மக்களின் போசாக்கு தொடர்பான ஆய்வும் கலந்துரையாடலும் நாளை 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை அரச சார்பற்ற நிறுவணமான வேல்ட் விசனின் அனுசரணையுடன் மன்னார் மாவட்ட சர்வோதய அலுவலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளதாக மாவட்ட இணைப்பாளர் எஸ். யுகேந்திரா தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் பிராந்திய சுகாதார பணிப்பாளர் திருமதி. யூட் ரதினி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். முப்பது அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (2-9-134)

தன் கையே தனக்கு உதவி என்பவர்களுக்குத்தான் கடவுளும் உதவுகிறார்.

~ ஃப்ராங்லின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் தொடர்பில் வெளிநாடுகள் பாராமுகம்

இலங்கையில் அரசியல் குழப்பம் ஏற்பட்ட போது அது விடயத்தில் வெளிநாடுகள் அதீத கவனம் செலுத்தின.

சில வெளிநாட்டுத் தூதுவர்கள் ஜனாதிபதி மைத்திரிக்கு கடுமையான அழுத்தம் கொடுத்தனர். இன்னும் சிலர் பாராளுமன்றத்துக்குச் சென்று சபை நடவடிக்கைகளை நேரில் அவதானித்தனர்.

இவற்றுக்கு மேலாக, அமெரிக்கா போன்ற நாடுகள் ஜனாதிபதி மைத்திரியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜனநாயகத்தை நிலைநாட்டுங்கள் என்றன.

இன்னும் சில வெளிநாட்டுத் தூதுவர்கள் நீதிமன்றத் தீர்ப்பு வருவதற்கு முன்பாகவே மகிழ்ச்சியான தீர்ப்பு வெளிவரும் என நம்பிக்கை வெளியிட்டிருந்தனர்.

ஆக, என்றுமில்லாதவாறான அழுத்தங்களை வெளிநாடுகள் இலங்கை மீது பிரயோகித்தன என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்த அடிப்படையில் இலங்கையின் அரசியலில் ஏற்பட்ட குழப்பங்களை நிவர்த்தி செய்து ஒரு சுமுகமான நிலையைத் தோற்றுவிப்பதில் வெளிநாடுகளின் வகிபங்கு காத்திரமானது என்ற உண்மையை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, சுப்பிரமணிய சுவாமி போன்றவர்கள், மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்தபோதிலும் அமெரிக்கா, கனடா, பிரிட்டன் போன்ற நாடுகள் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக வருவதை விரும்பவில்லை என்பதும் தெரிந்த விடயம்.

அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற நாடுகளின் கவனம் முழுவதும் இலங்கை மீது இருக்கும் அளவில் சூழ்நிலை உருவாக்கப்பட்டுவிட்டது என்பதால் இலங்கை ஆட்சியாளர்கள் தாம் நினைத்தபடி எதனையும் செய்துவிட முடியாது என்பதனையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பதை நிலைநாட்டவும் தமிழ் இனத்தை வதைக்கவும் முடிவு செய்த ஆட்சியாளர்கள் அவ்வப்போது வெளிநாடுகளிடம் இருந்து ஆயுத உதவிகளையும் கடன் வசதிகளையும் பெற்றுக் கொண்டனர்.

இதற்கு கைமாறாக இலங்கையில் முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பத்தையும் வெளிநாடுகளுக்கு வழங்க வேண்டியதாயிற்று. அதிலும் குறிப்பாக சீனாவுக்கு வழங்குவதிலும் இலங்கை ஆட்சியாளர்கள் அதீத அக்கறை கொண்டனர்.

முதலீடு என்ற பெயரில் இலங்கைக்குள் சீனா நுழைந்தபோது இந்தியாவும் அமெரிக்காவும் தமது பார்வையை இலங்கை மீது உன்னிப்பாக்கிக் கொண்டன.

இந்த அடிப்படையிலும் இலங்கையின் அரசியல் மற்றும் சமூக, பொருளாதார நகர்வுகள் மீது வெளிநாடுகளின் செல்வாக்கு கடுமையாக இருக்கிறது என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

இலங்கை மீதான வெளிநாடுகளின் செல்வாக்கு எத்தகையது என்பதை நாட்டின் சமகால அரசியல் சூழ்நிலை நமக்குத் தெளிவாகக் காட்டி நிற்கின்றது.

எனினும் நம் கவலை எல்லாம் இலங்கையின் அரசியல் மீது கவனம் செலுத்தும் வெளிநாடுகள் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்புத் தொடர்பிலோ அன்றி படையினர் இழைத்த போர்க்குற்றம் தொடர்பிலோ கவனம் செலுத்தத் தவறிவிட்டனர்.

தவிர, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது வெளிநாடுகளின் தலையீட்டால் சாத்தியமாகும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் இருந்தபோதிலும் அது விடயங்களில் வெளிநாடுகள் இம்மியும் கருசனை கொள்வதாகத் தெரியவில்லை.

இங்குதான் தமிழினத்தின் உரிமை மீதான விடயத்தில் வெளிநாடுகளின் பாராமுகம் நீண்டு செல்கிறது.

இது எதற்கானது என்பதும் இது விடயத்தில் நம் அரசியல் தலைமையின் மந்த நிலை ஏன் என்பதும் அறியப்பட வேண்டிய விடயங்களாகும்.

## 24 மணித்தியாலங்களில் வாகன விபத்துக்களில் ஐவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த 24 மணித்தியாலங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் ஐவர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 8 வயது சிறுமியும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், ஊரு பொக்க, அங்குனுகொல பெலஸ்ஸ, ஹபரண ஆகிய பகுதிகளில் இந்த விபத்துகள் பதிவாகியுள்ளன.

அங்குனுகொலபெலஸ்ஸ பகுதியில் மோட்டார் சைக்கிளொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.

இதில் 66 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, ஹபரண பகுதியில் காரொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளானதில் 54 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளொன்று பாதசாரி மீது மோதியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்தில் காயமடைந்த பாதசாரி மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், சிகிச்சை பலனின்றி பாதசாரி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

யாழ்பாணத்தைச் சேர்ந்த 48 வயதான ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

சுவிஸ் காரை அபிவிருத்தி சபையும் காரைநகர் அபிவிருத்தி சபையும் இணைந்து நடத்துகின்ற முத்தமிழ் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு காரைநகர் இந்துக் கல்லூரி நடராசா மண்டபத்தில் காரைநகர் அபிவிருத்திச்சபைத் தலைவர் பரமநாதன் விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வுக்குவடமாகாண சிறுவர் நன்நடத்தை திணைக்கள ஆணையாளர் திருச்சிற்றம்பலம் விஸ்வரூபன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

கலாநிதி ஆ.தியாகராசா அவர்களின் பணிகள் எனும் தலைப்பில் கலாபூஷணம், பண்டிதை செல்வி சோ.யோகலட்சுமியும் சகலதுறை வல்லவன் கலாநிதி பேராசிரியர் ஜோன் மனோகரன் கெனடி விஜயரத்தினம் எனும் தலைப்பில் கல்வியமைச்சின் செயற்றிட்டப் பணிப்பாளர் கந்தையா பரமானந்தனும் நினைவுப் பேருரைகளை நிகழ்த்தவுள்ளனர். (ம-3)

### தவறான கருத்துக்களை...

- தவறான கருத்துக்களை ஒருபோதும் நினைக்காதீர்கள்.
- எதிர்மறையான எண்ணங்களே "தவறுகளுக்குத் தூண்கள்" என்பதை உணர்ந்திடுங்கள்.
- பிறர் நம்மை தவறாகப் பேசினால்கூட அது அவனது சுபாவம் என்றே விட்டுவிடுங்கள்.
- மற்றவர் தவறான கருத்திற்கு உட்பட்டிருந்தால் பொதுவாக விமர்சிக்காதீர்கள்.
- தனிமையில் அழைத்து வந்துபேசி, திருந்திட வழி சொல்லுங்கள்.
- தவறான கருத்துக்கள்தான் எப்போதுமே ஆபத்தான முடிவுகளை உண்டாக்குகிறது என்பதை உணர்ந்து வாழ்ந்திடுங்கள்.

## ஒற்றையாட்சியில் தீர்வைப் பெறவே கூட்டமைப்பு விரும்புகிறது

### அகிலவிராஜ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எதுவித உடன்பாடோ ஒப்பந்தமோ செய்யவில்லை. வங்குரோத்தடைந்துள்ள அரசியல் தலைவர்கள் கூறும் கதைகளே இவை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஒற்றையாட்சி என்பதற்கு அப்பாற்சென்று நாடு ஒருபோதும் பிரிக்கப்படாது எனத் தெரிவித்துள்ள அவர், பிரிக்கப்படாத நாட்டிற்குள் ஒற்றையாட்சியில் தீர்வைப் பெறவே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும்விரும்புவதாக சுட்டிக்காட்டினார்.

அலரிமாளிகையில்நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எதுவித உடனபாடும் இல்லை. வங்குரோத்தடைந்துள்ள அரசியல் தலைவர்கள் கூறும் கதைகளே இவை. நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒப்பந்தம் இல்லாமல் எங்களுக்கு ஆதரவினைக்கொடுத்தது.

தமழ்தேசியக்கூட்டமைப்பு என்பதும் இந்த நாட்டின் ஒரு அரசியல் கட்சியாகும். அவர்களுக்கும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், அரசியலமைப்பினைப் பாதுகாக்கவும் வேண்டிய தேவை இருந்தது. அதற்கமைய எங்களுக்கு ஆதரவினைக் கொடுத்தார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களும் ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு என்பதையும் கூறியுள்ளார்கள். அதேபோல் ரணில் விக்கிரமசிங்கவும் நாடாளுமன்றில் ஆற்றிய உரையில் ஒற்றையாட்சியைப் பாதுகாத்து, வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்று கூறினார்.

தெற்கினைப்போல் வடக்கு மக்களின் அபிவிருத்தியும் அவர்களுக்கு தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பது குறித்தும் பேசப்பட்டது. இது சாதாரண ஒரு விடயம். அதைவிடுத்து ஒப்பந்தம் எதுவும் செய்யவில்லை.

அப்படி புதிய அரசியலமைப்பில் நாட்டைப் பிரிப்பதென்றால், அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்குமா? பிழையான ஒன்றுக்கு யாரும் ஆதரவு கொடுக்கமாட்டார்கள்" என்று தெரிவித்தார். (ம-3)

## 3 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்களுடன் நைஜீரியா நாட்டவர் கைது

(கொழும்பு)

3 கோடி ரூபாய் பெறுமதி கொண்ட கொக்கெய்ன் போதைப் பொருளுடன் வெளிநாட்டவர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய சுங்க பிரிவினர் நேற்று அவரை கைது செய்துள்ளனர்.

நைஜீரியாவில் இருந்து வந்த விமானம் மூலம் குறித்த 28 வயதுடைய நபர், தனது பயணப் பையில் போதைப்பொருளை மறைத்து வைத்து வந்துள்ளார்.

இதன்போது அவரிடம் இருந்து மீட்கப்பட்ட கொக்கெய்ன் போதைப்பொருளின் நிறை 2 கிலோகிராமுக்கும் அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப் படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒருகோடியே 21 லட்சம் ரூபாயிற்கும் அதிக பெறுமதியான ஹெரோயின் தொகையுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களையும் தடுத்துவைத்து விசாரிக்க நீதிமன்றில் அனுமதி கோரவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் நேற்று பிற்பகல் நுகேகொடை நீதவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

நுகேகொட - பாகொட பகுதியில் போதைப்பொருளை முச்சக்கரவண்டியொன்றில் கடத்திச் சென்ற நிலையில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதன்போது அவர்கள் வசமிருந்த 1 கிலோ 11 கிராம் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- ஒவ்வொன்றிற்கும் ஒரு பருவம் உண்டு. வானின் கீழ் உள்ள ஒவ்வொரு நோக்கிற்கும் ஒரு காலம் உண்டு. பிறப்பதற்கு ஒரு காலமும் இறப்பதற்கு ஒரு காலமும், விதைப்பதற்கு ஒரு காலமும், விதைத்தலின் விளைச்சலைப் பறிப்பதற்கு ஒரு காலமும் உண்டு. அழுவதற்கு ஒரு காலமும், சிரிப்பதற்கு ஒரு காலமும் உண்டு. ஓலத்திற்கு ஒரு காலமும், நடனத்திற்கு ஒரு காலமும் உண்டு.
- எதைச் சாப்பிடுவோம். எதைக் குடிப்போம். எதை உடுத்திக் கொள்வோம் என்று சிந்திக்க வேண்டாம். ஏனெனில், இவைகளை எல்லாம் அறிவிலிகளே தேடியலைகிறார்கள்.
- எதெது உண்மையோ, எதெது யோக்கியமோ, எததெது நியாயமோ, எதெது தூய்மையோ, எதெது அன்பிற்குரியதோ, எதெது நற்கீர்த்தியோ, எதெது பண்பொழுக்கமோ, எதெது போற்றுதலுக்குரியதோ அவற்றைச் சிந்தித்துக் கொண்டிருங்கள்.
- சச்சரவிலிருந்து விலகி நிற்பது மனிதனுக்கு மேன்மை தரும். ஆனால் ஒவ்வொரு முட்டாளும் எந்தச் சண்டையிலும் தலையிட்டுக் கொண்டேயிருப்பான்.

# பப்பரே சம்பியன்ஷிப் உதைபந்தாட்டத் தொடர் சென்.பற்றிக்சை வென்றது ஹமீட் அல்ஹூசைன்





இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் அனுமதியுடன், இலங்கை பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் பப்பரே சம்பியன்ஷிப் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் அரையிறுதியாட்டம் கடந்த 14 ஆம் திகதி கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு ஹமீட் அல் ஹைனியா கல்லூரி அணி மோதியது.

முதல்பாதியாட்டத்தின் 29 ஆவது நிமிடத்தில், ஹமீட் அல் ஹைனியாவின், முன்கள வீரர் மொஹமட் அப்கர் முதலாவது கோலை அடித்தார். முதல்பாதியாட்டம் இந்தக் கோலுடன் நிறைவுக்கு வந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் இரண்டு அணி வீரர்களும் கோல் அடிக்கும் வாய்ப்புக்களைத் தவறவிட்டனர். முடிவில் ஹமீட் அல் ஹுசைனியா கல்லூரி அணி, 01:00 என்ற கோல் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குத்தகுதிபெற்றது.

இறுதிப்போட்டி மற்றும் மூன்றாமிடத்துக்கான போட்கள் இன்று கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது. (க-26)

# தகர்ந்தது முரளியின் சாதனை

டெஸ்ட் கிரிக்கெட்டில் குறைந்த போட்டிகளில் 100 விக்கெட்டுகளை வீழ்த்திய இலங்கை பந்துவீச்சாளர் என்ற சாதனையை தில்ருவன் படைத்துள்ளார்.

குறைந்த போட்டிகளில் 50 விக்கெட்டுகளை வீழ்த்தியவர் என்ற சாதனையும் தில்ருவன் வசமே உள்ளது.



அவர் 11 போட்டிகளிலேயே 50 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்நிலையில் 25 போட்டிகளில் 100 விக்கெட்டுகளை தில்ருவன் வீழ்த்தினார். இலங்கை கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் முத்தையா முரளிதரன் 27 போட்டிகளில் 100 விக்கெட்டுகளை வீழ்த்தியதே இதுவரை சாதனையாக இருந்தது.

அதை தில்ருவன் முறியடித்துள்ளார். விரைவாக 150 விக்கெட்டுகளை டெஸ்ட் போட்டிகளில் வீழ்த்தியவர் என்ற சாதனை முரளிதரன் வசம் உள்ளது.

அவர் 36 போட்டிகளில் 150 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

தற்போது 34 போட்டிகளில் 147 விக்கெட்டுகளை தில்ருவன் வீழ்த்தியுள்ள நிலையில் முரளிதரன் சாதனையை மீண்டும் முறியடிக்க அவருக்கு பிரகாசமாக வாய்ப்பு உள்ளது. (க)

# காதலரை மணந்தார் சாய்னா நேவால்!



இந்தியாவின் முன்னணி பேட்மிண்டன் வீராங்கனை சாய்னா நேவால், சக பேட்மிண்டன் வீரரும் தனது காதலருமான பருபள்ளி காஷ்யப்பை திருமணம் செய்து கொண்டார்.

பிரபல பேட்மிண்டன் வீராங்கனை சாய்னா நேவாலும், மற்றொரு பேட்மிண்டன் வீரர் புருபள்ளி காஷ்யப்பும் காதலித்து வருவதாகவும், விரைவில் திருமணம் செய்துகொள்ள இருப்பதாகவும் செய்திகள் பரவின.

அதனைத் தொடர்ந்து, தாங்கள் காதலித்து வருவது உண்மைதான் என இருவரும் கடந்த செப்டெம்பர் மாதம் சாய்னா தெரிவித்தார். மேலும், டிசெம்பர் மாதம் திருமணம் செய்துகொள்ள இருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், காதலர் பருபள்ளி காஷ்யப்பை திருமணம் செய்துகொண்ட புகைப்படங்களை சாய்னா நேவால் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

அதில் இருவரும் மாலையும் கழுத்துமாக நிற்கின்றனர். அத்துடன், என் வாழ்வின் சிறந்த பொருத்தம். #justmarried எனவும் சாய்னா குறிப்பிட்டுள்ளார்.(க)



**2018 இற்கான ஜப்பான் சோட்டோகான் கராத்தே சங்கத்தால் நடத்தப் பட்ட சர்வதேச ரீதியிலான கராத்தே சுற்றுப் போட்டி கடந்த 9 ஆம் திகதி கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் S.S.K.A கராத்தே கழகம் சார்பாக பங்குகொண்ட யாழ். சென். ஜோன்ஸ்கல்லூரி மாணவன் R. டெய்சன் 10 வயது காட்டா போட்டியில் முத லாம் இடத்தைப் பெற்று வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டார். (க)**

# அரச அதிபர் வெற்றிக்கிண்ண இறுதிப் போட்டி ஸ்கந்தாவில்

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக்கழகம் நடத்தும் "அரச அதிபர் வெற்றிக் கிண்ணம் 2018" நாளை மறுதினம் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத் தலைவர் ஜே.கில்பேட்குணம் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுகுணரதி தெய்வேந்திரம், கௌரவ விருந்தினர்களாக உடுவில் பிரதேச செயலாளர் எஸ். ஜெயகாந்த், கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் மு. செல்வஸ்தான் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந் நிகழ்வில் இறுதிப் போட்டிகளாக பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி நடைபெறும். போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர்த்து வேலணை பிரதேச செயலக அணி மோதவுள்ளது.

உதைபந்தாட்டத்தில் வேலணை பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் சங்கீதக் கதிரைப் போட்டி, கயிறு இழுத்தல் ஆண்களுக்கான போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர்த்து வேலணை பிரதேச செயலகமும் பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர் சாவகச்சேரி பிரதேச செயலக அணி மோதவுள்ளது. (க-5)



**2018 இற்கான ஜப்பான் சோட்டோகான் கராத்தே சங்கத்தால் நடத்தப்பட்ட சர்வதேச ரீதியிலான கராத்தே சுற்றுப் போட்டி கடந்த 9 ஆம் திகதி கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் பங்கு கொண்ட யாழ்.மத்திய கல்லூரி மாணவன் வி.விதுசன் 50 கிலோவிற்குட்பட்ட குமித்தே போட்டி பிரிவில் தங்கப்பதக்கம் பெற்று மாகாணத்திற்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார். (க)**

# அடுத்தடுத்து சரிந்தது விக்கெட்டுகள் தடுத்து நிறுத்திய மத்தியூஸ்-டிக்வெல்



நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் முதல் நாள் முடிவில், இலங்கை அணி 9 விக்கெட் இழப்புக்கு 275 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

வெலிங்டனில் தொடங்கிய நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில், இலங்கை அணி முதலில் துடுப்பாட்டம் செய்தது. தொடக்க வீரர் குணதிலக ஒரு ஓட்டத்தில் வெளியேற, அடுத்து வந்த சில்வா மற்றும் குசால் மெண்டிஸும் சொற்ப ஓட்டங்களில் அவுட் ஆகினர்.

இதனால் இலங்கை அணி 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது. அப்போது களம் கண்ட ஏஞ்சலோ மத்தியூஸ், தொடக்க வீரர் கருணரத்னேவுடன் கைகோர்த்தார்.

இந்த ஜோடி நிதானமாக ஓட்டங்களை சேர்த்தது. அரைசதம் கடந்த கருணரத்னே, அணியின் ஸ்கோர் 142 ஆக இருந்தபோது 79 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவருக்கு பின்னர் வந்த தலைவர் சண்டிமல் 6 ஓட்டங்களில் வெளியேறினார்.

பின்னர் மத்தியூஸுடன் இணைந்த டிக்வெல்ல அதிரடி ஆட்டத்தினை வெளிப்படுத்தினார். இந்நிலையில், சௌதி வீசிய பந்தில் வாட்லிங்கிடம் கட்ச் கொடுத்து மத்தியூஸ் அவுட் ஆனார். அவர் ஒரு சிக்சர், 9 பவுண்டரிகளுடன் 83 ஓட்டங்கள் எடுத்தார்.

மத்தியூஸின் அவுட்டுக்கு பிறகு இலங்கையின் விக்கெட்டுகள் மீண்டும் சரியத் தொடங்கியது. ஒரு புறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும், டிக்வெல்ல அரைசதம் கடந்து நங்கூரம் போல் நின்று ஆடினார்.

முதல் நாள் ஆட்டநேர முடிவில் இலங்கை அணி 87 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 275 ஓட்டங்கள் எடுத்துள்ளது. டிக்வெல்ல 91 பந்துகளில் 73 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார்.

நியூசிலாந்து அணி தரப்பில் டிம் சௌதி 5 விக்கெட்டுகளையும், வோக்னர் 2 விக்கெட்டுகளையும், டிரண்ட் போல்ட், கிராண்ட் ஹோம் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். (க)

## எதிர்க்கட்சி தலை...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் விசேட உரையின் பின்னர் விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போது அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 101 பேர் மன்றில் காணப்படுகின்ற நிலையில், எதிர்க்கட்சி தலைவர் பதவியை மகிந்தவிற்கு வழங்க வேண்டிய நிலை சபாநாயகருக்கு ஏற்படும் எனவும் குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், மகிந்த ராஜபக்ஷவுடனான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து ஜனநாயக சக்தியாக எதிர்க்கட்சியில் அமர்வதற்கு தீர்மானித்துள்ளோம்.

எதிர்க்கட்சியில் செயற்பட்டு நாட்டை காப்பாற்றுவதற்காக தேர்தலொன்றை முன்னெடுப்பதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபடுவோம்.

ஜனநாயகத்தை பாதுகாப்பதே எமது நோக்கம். ஆனால், ஐக்கிய தேசிய கட்சி ஜனநாயகத்திற்கு எதிரான ஆபத்தான பயணத்திற்கு தயாராகிறது எனத் தெரிவித்தார். (ம)

## பிரதமர் பதவியை...

சர்ச்சைக்குரிய முறையில் பிரதமராக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷ, நேற்று தனது பதவியை ராஜினாமா செய்தார். நேற்று காலை விஜேராமவில் உள்ள அவரது இல்லத்தில் இராஜினாமா கடிதத்தில் அவர் கையொப்பமிட்டிருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்களுடன் சந்திப்புகளை மேற்கொண்டுள்ள நிலையில், அவர் இராஜினாமா செய்து கொள்வதாக அறிவித்தார். அதன் பின்னர் தனது இராஜினாமா கடிதத்தில் கையொப்பமிட்டார். அவர் கையொப்பமிடும் போது சிரித்த முகத்துடன் கையொப்பமிட்டுள்ளார். (ம-3)

## ரணில் தலைமை...

அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து நாட்டிற்கு செய்யவிருந்த பாரிய அழிவு, பொருளாதார வீழ்ச்சி என்பவற்றை அடுத்தே அரசாங்கத்திலிருந்து விலகுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தீர்மானித்தது.

அதனை தொடர்ந்து பொதுத் தேர்தலொன்றுக்கு செல்லும் வரை தற்காலிக அரசாங்கமொன்றே ஏற்படுத்தப்பட்டது. ஆனால், உயர்நீதிமன்ற தீர்ப்பை அடுத்து தேர்தல் சாத்தியமற்றதாகியது.

அதன்படி, புதிய பிரதமரொருவரை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு இடமளிக்கும் அதே நேரத்தில், தேர்தலை நடத்துவதற்கான எமது போராட்டத்தையும் நாம் தொடர்ந்து முன்னெடுத்து செல்வோம் எனத் தெரிவித்தார். (ம)

## கட்சி வேறுபாடின்...

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, நாட்டில் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் பலப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் நிறைவேற்ற தான் தயாராக உள்ளதாக தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பிலான பொறுப்புகளையும் தற்போது தாய் நாட்டுக்கு எதிராக காணப்படும் சவால்கள் தொடர்பிலும் பாதுகாப்பு துறை விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

மேலும் வரலாற்று காலங்களில் எமது நாடு முகங்கொடுக்க நேர்ந்த படையெடுப்புகளை விட முற்றிலும் வேறுபட்ட அந்நிய நாடுகளின் செல்வாக்கு தற்போது எமது நாட்டின் மீது செலுத்தப்படுவதாகவும் அத்தகைய சவால்களை கண்டறிந்து தாய் நாட்டின் எதிர்காலத்திற்காக ஆற்ற வேண்டிய பணிகளை அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து பிரஜைகளும் அர்ப்பணிப்புடன் நிறைவேற்ற வேண்டிய தன் அவசியத்தை ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

நேற்று முற்பகல் தியத்தலாவை இராணுவ கல்வியியற் கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்ட முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இராணுவத்தினர் வரவேற்றனர்.

முதலில் இராணுவ நினைவுத் தூபி அமைந்திருக்கும் இடத்திற்கு சென்ற ஜனாதிபதி அங்கு மலரஞ்சலி செலுத்தினார்.

கெடட் அதிகாரிகளின் பயிற்சி நிறைவு அணிவகுப்பை பார்வையிட்ட ஜனாதிபதி சிறந்த கெடட் குழுவிற்கு வெற்றிக் கொடியை வழங்குதல் மற்றும் கெடட் அதிகாரிகளுக்கு வாளினை வழங்குதல் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொண்டார்.

தியத்தலாவை இராணுவ கல்வியியற் கல்லூரியின் 06 கற்கை நெறிகளை நிறைவு செய்த 234 கெடட் அதிகாரிகள் நேற்று வெளியேறினர். (ம)

## ஐ.தே.க அரசை...

களுக்குப் பொதுத் தேர்தல் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதே எமது இலக்காக இருந்தது.

பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படாத சூழ்நிலையில் நான் பிரதமர் பதவியை வகிப்பதில் அர்த்தமில்லை. நீதிமன்றின் நீண்ட தீர்ப்பை நான் வாசித்தேன் அதனை மதித்து செயற்பட வேண்டும்.

பாராளுமன்றில் வெறுமனே 103 ஆசனங்களை கொண்டுள்ள ஐக்கிய தேசிய கட்சியை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பணயக் கைதியாக வைத்து இயக்கிக் கொண்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்கு ஐ.தே.க மறுப்பு தெரிவிக்குமாயின் பாராளுமன்றில் ஐ.தே.க பெரும்பான்மையை இழக்க நேரிடும்.

ஐக்கிய தேசிய கட்சி நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியின் எல்லைக்கு கொண்டு சென்றுள்ளது. கடந்த மூன்றரை வருடங்களில் ஐ.தே.க 20.7 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக பெற்றுள்ளது.

நாங்கள் நாட்டின் அபிவிருத்திக்காகவே கடன் வாங்கினோம். அது அனைவருக்கும் தெரிந்த விடயமே. ஆனால் அவர்கள் கடன் வாங்கியது தேவையற்ற செயற்பாடுகளுக்காக. இந்நிலையில் மீண்டும் ஆட்சியை அவர்களிடம் ஒப்படைக்கின்ற பட்சத்தில் மிகுதியிருக்கும் காலத்தில் எவ்வளவு தொகையை கடனாக பெறுவார்கள் எனத் தெரியவில்லை. டொலருக்கு நிகரான இலங்கை நாணயத்தின் பெறுமதி மேலும் வீழ்ச்சி அடையவுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை ஐ.தே.க தலைமையிலான அரசாங்கம் பிற் போட்டதைப் போன்று பாராளுமன்றத் தேர்தலையும் இந்த அரசாங்கம் பிற்போடும்.

மக்கள் எதிர்பார்த்துள்ள மாற்றத்தை ஏற்படுத்துவதற்குத் தற்போது தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும், அந்த மாற்றத்தை கட்டாயம் ஏற்படுத்துவோம்.

தேர்தல் இன்றி முன்னோக்கிச் செல்லும் வேலைத்திட்டமே தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. ஒரு வருடமும் மூன்று மாதங்களாலும் தாமதமடைந்துள்ள மாகாண சபைத் தேர்தலை நடத்துவதே எமது பிரதான இலக்கு.

மாகாண சபைத் தேர்தலை பிற்போட்டிருப்பது போன்று எல்லை நிர்ணய பிரச்சினையை ஏற்படுத்தி 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலையும் பிற்போடுவதற்கே அவர்கள் திட்டமிட்டிருக்கின்றார்கள்.

அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவிற்கு தெரியாமலேயே விடுதலைப்புலிகளுடனான சமாதான உடன்படிக்கையில் ரணில் கைச்சாத்திட்டார்.

அதே போல ஜனாதிபதிக்கு தெரியாமலேயே பல விடயங்களை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் எதிர்காலத்தில் செய்யக் கூடும். என மகிந்த ராஜபக்ஷ தனது நீண்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ம)

## ரணில் அரசின்...

விடம் கையளிக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீதிமன்றத் தீர்ப்பினையடுத்து மகிந்த ராஜபக்ஷ தன்னுடைய பதவியை இராஜினாமா செய்து கொண்டதையடுத்து, இன்று மீண்டும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்கிறார்.

எனினும், புதிய அமைச்சர்களின் பதவியேற்பு நாளை திங்கட்கிழமை இடம்பெறலாம் என்றும் அக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவையில் இடம்பெறவுள்ள அமைச்சர்களின் பட்டியலைத் தயாரிக்கும் பணி நேற்று முன்தினம் இரவு அலரி மாளிகையில் இடம்பெற்றதாக அக்கட்சியை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் பணியில் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச உள்ளிட்ட ஐ.தே.க தலைவர்களும், ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களும் இதுதொடர்பான ஆலோசனைகளில் ஈடுபட்டனர்.

இந்த கலந்தாய்வின் முடிவில் அமைச்சர்களின் பட்டியலை ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியிடம் கையளிப்பார். 19 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அமைய, 30 அமைச்சர்கள் மற்றும், பிரதி அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் 45 பேரை மட்டுமே நியமிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை புதிய அமைச்சரவையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த 6 பேரும் இடம்பெறும் வாய்ப்புகள் இருப்பதாக கொழும்பு அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

## கூட்டமைப்பின் நிப...

கிய பின்னர் நாட்டு மக்களுக்காக விடுத்த சிறப்பு அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணிக்கு 103 ஆசனங்களே உள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல்வேறு நிபந்தனைகளை விதித்து ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவளித்ததால் தான் பெரும்பான்மை நிரூபிக்கப்பட்டது. எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிபந்தனைகளை ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்றவில்லையாயின் பாராளுமன்றப் பெரும்பான்மையை அவர்கள் இழப்பார்கள்.

வரும் ஜனவரி 5ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்ற வகையில் இடைக் கால அரசை அமைக்கும் வகையிலேயே நான் பிரதமர் பதவியை கடந்த ஒக்டோபர் 26ஆம் திகதி ஏற்றுக்கொண்டேன்.

பொதுத் தேர்தல் ஒன்று நடத்த முடியாமல் போனதால், பிரதமர் பதவியிலிருந்து நான் விலகுகின்றேன் என்று அவ்அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-3)

## பிணை மோசடி...

மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கிருலப்பனை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட அதன் பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் இதனை தெரிவித்தார். (ம-3)

## மகிந்தவை மீண்டு...

பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

மகிந்தவின் விஜேராம இல்லத்தில் வைத்து நேற்று சனிக்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை இராஜினாமா செய்தமை சிறந்த விடயம். அதை எண்ணி நான் மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில், பெரும்பான்மைக்கு நாம் தலைவணங்க வேண்டும்.

இந்நிலையில், எதிர்க்கட்சியில் சிறப்பாக செயற்பட்டு, நாடளாவிய ரீதியில் சென்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி மகிந்தவை மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக்குவதற்கு முடியும்.

யார் மகிந்தவைவிட்டு விலகிச் சென்றாலும் நான் ஒருபோதும் விலகிச் செல்லப் போவதில்லை என்றும் குறிப்பிட்டார். (ம-3)

## மகிந்த - மைத்திரி...

மகிந்தவின் விஜேராம இல்லத்தில் வைத்து நேற்று சனிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், நாடு அராஜக நிலைக்கு செல்வதை தவிர்க்கும் வகையில் நீதிமன்ற தீர்ப்பிற்கு மதிப்பளித்து மகிந்த ராஜபக்ஷ நேற்று தனது பதவியை இராஜினாமா செய்தார்.

நாம் பிரிவினைவாதத்திற்கு எதிராக குரல் கொடுத்த போது, ஒரு தரப்பினர் ஜனநாயகத்திற்காக போராடிக் கொண்டு வீதியில் இறங்கினர். இந்நிலையில், ஜனநாயகம் கிடைக்கும் வரை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், மகிந்த ராஜபக்ஷவும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். அதன்மூலம் நாம் 85 வீத மக்கள் ஆணையை கொண்டிருக்கிறோம். இதனை அனைவரும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (ம-3)

# சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் நேற்று கலந்துரையாடல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று தமது எதிர்கால அரசியல் நடவடிக்கை தொடர்பில் நேற்று ஆலோசனையில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளரான மகிந்த அமரவீரவின் இல்லத்திலேயே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் இணைந்து செயற்படுவது குறித்தே இவர்கள் ஆலோசனைகளை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எத்தனை பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர் என்பது தொடர்பான தெளிவான விபரங்கள் எவையும் வெளியாகவில்லை. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

கொவிசெத
திகதி 2018.12.15
சீட்டிழுப்பு இலக்கம் 1974
ஆங்கில எழுத்து A
வெல்லப்பட்ட இலக்கங்கள் 15 41 53 70
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 15-12-2018
சீட்டிழுப்பு இலக்கம் 900
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 7 3 9 3 7 2
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
திகதி 2018/12/15
சீட்டிழுப்பு இலக்கம் 1386
எழுத்து 08
வெற்றி இலக்கம் 07 09 19 26 08 38
தேசிய லொத்தர் சபை

செவண
திகதி 2018/12/15
சீட்டிழுப்பு இலக்கம் 144
ஆங்கில எழுத்து S
வெல்லப்பட்ட இலக்கங்கள் 12 15 26 60
தேசிய லொத்தர் சபை

## ஏசியன் தளபாடத்தின் மாபெரும் மலிவு விற்பனை

தளபாடம் மற்றும் இலத்திரனியல் குளிர்சாதனப்பெட்டி




ஞாயிற்றுக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இல. 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 0217916911 / 0768219418 / 0773583879
(இலுப்பையடி - ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)

(C-4708)


## பிரதமராக ரணில்...

ளர் அகிலவிராஜ் காரியவசம் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறும் பதவியேற்பு நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் ரணில் விக்கிரமசிங்க சத்தியப்பிரமாணம் எடுப்பார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உத்தியோகபூர்வமான அறிவிப்பை அவர் நேற்று மாலை வெளியிட்டார். இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 5ஆவது முறையாக பிரதமராக பதவியேற்கவுள்ளார். (ம)

## சிங்கள பௌத்த...

டின் கீழ் கொண்டுவந்து பணயக்கைதியாக்கியுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சொல்வதை ஐக்கியதேசிய கட்சி செவிமடுக்காவிட்டால் ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற பெரும்பான்மையை இழக்கவேண்டி வரும் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தை இயக்கும் கருவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமே உள்ளது என மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். மகிந்த ராஜபக்ஷவின் இந்த அறிக்கையை சுட்டிக்காட்டி தனது டுவிட்டரில் கருத்தொன்றை பதிவு செய்துள்ள சுனந்த தேசப்பிரிய தமிழ்தேசியக் கூட்டமைப்பை தனது பக்கம் இழுக்க முயன்ற மகிந்த ராஜபக்ஷ தனது இந்த பழம் புளிக்கும் கதையை சொல்கின்றார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் இந்த அறிக்கையில் உள்ள ஆபத்து என்னவென்றால் இது தமிழ் எதிர்ப்பு இனவாதத்தை கொண்டிருக்கின்றது எனவும் சுனந்த தேசப்பிரிய டுவிட்டரில் பதிவு செய்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தீவிர சிங்கள பௌத்த பிரசாரத்திற்கு தயாராகின்றார் எனவும் சுனந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார். (ம-3)


## திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

நத்தார், புதுவருட விசேட தள்ளுபடி

### புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்

| | | |
|---|---|---|
| கொட்டன் டொப் (Top) | - 1500/= | 1000/= |
| டெனிம் டொப் (Top) | - 1500/= | 1000/= |
| 2 in 1 சல்வார் துணி | - 1500/= | 1000/= |
| 3 in 1 சல்வார் துணி | - 2000/= | 1500/= |
| கொட்டன் சல்வார் | - 4000/= | 2000/= |
| நெற் சல்வார் பெரியது | - 5000/= | 2000/= |
| நெற் சல்வார் சிறியது | - 3500/= | 1000/= |

10% - 50% வரை விலைக்கழிவு

15000/= பெறுமதியான பட்டுச் சாறி ஒன்றை கொள்வனவு செய்து 5000/= பெறுமதியான சாறி ஒன்றை இலவசமாக பெற்றிடுங்கள்



லெகீன்ஸ் 3 இற்கு 1000/=

கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T-சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புரொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்.



ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்

காலம் : 14.12.2018 - 31.12.2018 வரை

(C-4725)



## வேலைவாய்ப்பு 2019

2018 முடியப் போகின்றது. பிறக்கவிருக்கும் புதிய வருடம் நமக்கு நல்லதொரு வருடமாக அமைய வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு.

2019 இல் உங்கள் தொழிலில் வளமானதொரு மாற்றத்தை எதிர்பார்த்துள்ளீர்களா?

காப்புறுதித் துறையில் நிரந்தர வேலைவாய்ப்பும் நிகரற்ற வருமானம் ஈட்டவும் விரும்புகின்றீர்களா?

வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்ல விரும்புகின்றீர்களா?

ஆமெனில் உங்களுக்கான சிறந்ததொரு தொழில் வாய்ப்பை வழங்க ARPICO INSURANCE நிறுவனம் தயாராகவுள்ளது.

காணப்படும் வெற்றிடங்கள்.

1. Field Managers (Permanent & Non - Permanent)
2. Insurance Consultants

நேர்முகத் தேர்வு நாளை டிசெம்பர் 17 மற்றும் 18ஆம் திகதிகளில் மு.ப 9.30 - பி.ப. 1.30 வரை நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு

ARPICO Insurance
INSURANCE FOR THE LIVING
ARPICO INSURANCE PLC
No.86, Navalar Road, Jaffna.
Tel : 021 567 3895 / 077-442 5229

(8708)


## வடக்கில்...

வங்கக் கடலில் உருவாகிய காற்றமுத்த தாழ்வு நிலை திருகோணமலைக் கடற்பரப்பிலிருந்து 540 கிலோ மீற்றர் தொலைவில் நிலைகொண்டுள்ளது. அது தமிழகத்தின் வடக்கு மற்றும் ஆந்திராவை நோக்கி நகர்கிறது என்று வானிலை ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர்.

வடக்கு, வட மத்திய மாகாணங்கள் மற்றும் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அடுத்த 24 மணித்தியாலயங்களுக்கு காற்றின் வேகம் மணிக்கு 60 தொடக்கம் 65 கிலோ மீற்றராக அதிகரித்துக் காணப்படும்.

அத்துடன், நாட்டின் சில பகுதிகளில் மழையுடனான காலநிலை காணப்படும்என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ம)


## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு

- களஞ்சியப் பொறுப்பாளர் (ஆண்/பெண்) கணனி அறிவு விரும்பத்தக்கது.
- கனரக வாகன சாரதிகள்

தொடர்புகளுக்கு : 076 70 49 351

(6713)



## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி-700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

மானிப்பாய் 0768226240
யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி
நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-4663)



# விஸ்டம்

தொழில் நுட்பக் கல்லூரி

விஸ்டம்

இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

## 2021 A/L தொழில் நுட்பப் பிரிவு

விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

| | |
|---|---|
| பொறியியற் தொழினுட்பவியல் | K.ரவிக்குமார் P.சண்முகதாசன் R.சிவரூபன் R.நிருஜன் P.கிருபாகரன் P.கணேஸ் |
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | A.அரவிந்தன் S.மயூரதாசன் R.S மயூரன் P.விமலநாதன் R.நிருஜன் T.ஆதவன் |
| உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் | M.விஸ்னுதேவன் P.S ஷாணஸ் நௌறோஜி P.நிரோஜனன் |
| தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் | S.மயூரதாசன் T.ஆதவன் |
| கணிதம் | S.தஜீதரன் |
| சித்திரம் | S.கருணாகரன் |
| விவசாய விஞ்ஞானம் | M.விஸ்ணுதேவன் P.S.ஷாணஸ் |
| ஊடகக்கல்வி | S.கோணேசலிங்கம் |
| புவியியல் | S.ஸ்ரீகிருஸ்ணா T.ஹென்றிறிகன் |

அனுமதிகள் இன்றிலிருந்து

T.P : 077 248 7774

A/L2015, 2016, 2017 தொழில் நுட்பப் பிரிவு பெறுபேறுகளில் மாவட்ட மட்ட, தேசிய மட்ட நிலைகளில் பல முதல் நிலைச் சாதனை மாணவர்களை உருவாக்கிய பெருமையுடன்

புதிய பிரிவு ஆரம்பம் 20.12.2018 காலை 8.30

"தரம்,தனித்துவம், உயர்ந்தபெறுபேறு இதுவே எமது இலக்கு"

(C-4729)



## சயன்ஸ் அக்கடமி

நல்லூர் - அரியாலை

### புதிய பாடங்கள் ஆரம்பம்

தரம் 6, 7, 8, 9 - சிங்களம்
தரம் 10, 11 - ICT
தரம் 10, 11 - English Literature

இன்றே இணையலாம்.

(C-4725)



## வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை

(C-4660)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

*Registered as a Newspaper in Srilanka*

வாரமலர்

# வலம்புரி

## சங்குநாதம்

Viber 076 636 3378

நாதம் 196

வள்ளுவர் ஆண்டு 2049 | 16.12.2018 | தொலைபேசி : 021 222 3378




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். அருமந்த இரண்டு வைத்திய நிபுணர்களை நாம் இழந்து விட்டோம். பொது வைத்திய நிபுணர் அ. இரகுபதி அவர்கள் தெல்லிப்பழை வைத்தியசாலையில் மிகச் சிறந்த சேவையாற்றி மக்கள் மனங்களில் போற்றப்பட்டவர். பொதுமக்களுடன் அன்பாகப் பழகுகின்ற வைத்திய நிபுணர் இரகுபதியின் திடீர் மறைவு மருத்துவ உலகிற்குப் பேரிழப்பாகும்.

அடுத்து இதய வைத்திய சத்திரசிகிச்சை நிபுணர் ரவிப்பெருமாள். தமிழ் மண்ணை நேசித்த பெருமையாளன். அல்லைப்பிட்டியில் காணி வாங்கி அங்கு கற்றாழைச் செய்கையைச் செய்து ஒரு புதிய விவசாயத் தொழில்முயற்சியை மக்களுக்கு அறிமுகப்படுத்தியவர். இவரின் மறைவு பேரிழப்பாகும். இவர்கள் இருவருக்கும் ஆலடி மாநாடு மௌன அஞ்சலியைச் செலுத்திக் கொள்கிறது என்றார். பண்டிதர் இவ்வாறு கூறியதும் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

மௌன அஞ்சலி நிறைவுற்றதும் ஆலடியில் சில நிமிடங்கள் நிசப்தம் நிலவியது. அந்த நிசப்தத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

***விதானையார்:*** ஒரு மாதிரியாக அரசியல் குழப்பம் முடிவுக்கு வந்திட்டுது. ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராகப் பதவி ஏற்க ஜனாதிபதி மைத்திரி சம்மதம் தெரிவித்து விட்டார்.

***மூப்பர்:*** என்ன? ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக்க ஜனாதிபதி மைத்திரி சம்மதம் தெரிவித்திட்டாரோ?

***விதானையார்:*** ஏன் மூப்பர் பேப்பர் பார்க்கிறதை விட்டிட்டியளோ:

***மூப்பர்:*** பேப்பர் பார்த்தால் தலை வெடிக்கும் போல இருந்தது. மகிந்தவைப் பிரதமராக்கியது முதல் பாராளுமன்றக் கலைப்பு, அதற்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை, பாராளுமன்றக் கலைப்புச் செல்லுபடியற்றது என ஒரே குழப்பம். எப்பதான் இந்தக் குழப்பம் தீருமெண்டு பார்த்திருந்தன்.

***சாத்திரியார்:*** ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக்கிறதாக இருந்தால் என்ர ஜனாதிபதிப் பதவியை விட்டிட்டுப் போவன் எண்டு மைத்திரி கூறினவரல்லோ.

***பண்டிதர்:*** நான்கு வருடங்கள் மட்டுமே ஜனாதிபதியாக இருப்பன்; அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டன்; 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றாக வந்து கேட்டாலும் ரணிலை பிரதமராக்க மாட்டன். இப்படியெல்லாம் கூறின மைத்திரி ரணில் மீண்டும் பிரதமராக வந்தால் என்ர பதவியை இராஜினாமாச் செய்து போட்டு என்ர ஊருக்குப் போய் விவசாயப் பண்ணை செய்வன் எண்டும் சொன்னவர். சொன்னதையெல்லாம் செய்ய முடியாது தானே.


***கங்காணி:*** என்னைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி மைத்திரி மிகக் கெட்டிக்காரர் எண்டுதான் சொல்லுவன்.

***விதானையார்:*** கங்காணியார் என்ன சொல்லுறியள்.

***கங்காணி:*** ரணிலைப் பிரதமர் பதவியிலிருந்து தூக்கிப் போட்டு மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கினதால இவ்வளவு சம்பவங்களும் நடந்து முடிந்தன.

***மூப்பர்:*** இந்தக் குழப்பங்கள் நடந்ததால ஜனாதிபதி மைத்திரியைக் கெட்டிக்காரர் என்று எப்படிச் சொல்ல முடியும்.

***கங்காணி:*** ஏற்கனவே மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடித்த மைத்திரியார் மீண்டும் மகிந்த ராஜபக்ஷவை அரவணைப்பது போலக் காட்டி அவருக்குப் பிரதமர் பதவியைக் கொடுத்து அரசியலில் இருந்து அவரை நாறடித்துப் போட்டார். இனி அரசியலில இருந்து மகிந்த மீண்டு வருவது என்பது கடினமான காரியம்தான்.



## ஜனாதிபதி மைத்திரி கெட்டிக்காரரர் தான்

***பண்டிதர்:*** கங்காணியார் சொல்லுறதிலும் உண்மை இருக்கத்தான் செய்யுது. பிரதமராகப் பதவியேற்ற மகிந்த தனக்குப் பெரும்பான்மைப் பலம் இருக்கிறதை நிரூபிக்க முடியல்ல எண்டவுடன பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் மகிந்த ஒரு ரோசவான் எண்டு சொல்லலாம். ஆனால் இப்ப உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. மகிந்தனார் தன்ர பதவியைத் துறக்க வேண்டியதாய்ப் போயிற்றுது.

***வாத்தியார்:*** அதெண்டால் சரிதான். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 15பேர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து அரசியல் குழப்பத்தைத் தவிர்க்க உடனடியாகப் பதவியை இராஜினாமாச் செய்யுங்கள் எண்டு கேட்டவியள். அவையள் கேட்டபோது மகிந்தனார் பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்திருந்தால் இண்டைக்குக் கௌரவத்தோட இருந்திருக்கலாம்.

***சாத்திரியார்:*** கன்மவினைதானே ஊழ்வினையாக மாறுறது. ஊழ்வினைப் பயன் ஒருக்காலும் விடாது.

***விதானையார்:*** அது சரி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக வந்தவுடன முதல் வேலையாக அரசியலமைப்பை பாராளுமன்றத்தில நிறைவேற்றுறது, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்விக்கிறது, காணாமல் போனவர்களின்ர பிரச்சினை தொடர்பில நடவடிக்கை எடுக்கிறது, தமிழர் பகுதியில படையினர் ஆக்கிரமித்துள்ள காணிகளை விடுவிக்கிறது, படையினர் மீது போர்க்குற்ற விசாரணைகளை நடத்துறது எண்ட காரியங்களைச் செய்வார் தானே.

***வாத்தியார்:*** இதெல்லாம் நடக்கிற காரியமோ. எங்கட தமிழ் அரசியல் கைதிகள் இன்னமும் விடுதலை யின்றி சிறைகளில வதைபடுகி னம். ஆனால் நாங்கள் தீர் வுத் திட்டத்தை எரித்தவருக் காக வழக்காடி அதில வெண்டதுக்கும் வெடியும் கொளுத்துறம். என்ன செய்யிறது.

***கங்காணி:*** பாராளுமன்றத்தைக் கலைப்புச் செய்தது சட்டத்திற்குப் பிழை என்று வாதிட்டு வெற்றி பெற்றதால கூட்டமைப்புக்கு செல்வாக்கு அதிகரித்திருக்குமோ.

***மூப்பர்:*** இலங்கையின் ஆட்சியில மகிந்த இருந்தாலென்ன, ரணில் இருந்தாலென்ன இரண்டும் கொழுக்கட்டையும் மோதகமும் தான். கூட்டமைப்புக்கு தமிழ் மக்களிட்ட செல்வாக்கு ஏற்படுறதா இருந்தா வாத்தியார் சொன்ன அரசியலமைப்பு, கைதிகளின் விடுதலை எண்ட அத்தனை விடயங்களையும் செய்தாக வேணும். அப்படிச் செய்திட்டால் கூட்டமைப்புக்கு வெற்றிதான்.

***வாத்தியார்:*** மகிந்தவுக்குப் பிரதமர் பதவியைக் கிடைக்கச்செய்து அதன்மூலம் அவர் செல்வாக்கையும் இழந்த அந்த ஊழ்வினைப் பயன் கூட்டமைப்புக்கும் சூழத் தொடங்கிற்றுது.

***பண்டிதர்:*** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

***வாத்தியார்:*** ரணில் விக்கிரமசிங்க எல்லாம் செய்வார் எண்டு கூட்டமைப்பு நம்புது. ஆனால் கூட்டமைப்பு எதிர்பார்க்கிற எதுவும் நடக்கப் போறதில்லை. இன்னும் ஒரு வருடத்தில பொதுத் தேர்தல் வரும். அப்பதான் கூட்டமைப்பு நினைக்கும் ரணிலைப் பிரதமராக்குவதற்கு ஆதரவு தெரிவிக்கா மல் பேசாமல் இருந்திக்கலாமெண்டு.

***மூப்பர்:*** என்ன வாத்தியார் குழப்புறியள். கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்களன்.

***வாத்தியார்:*** பாராளுமன்றக் கலைப்புக்கு எதிராக நீதிமன்றம் போய் அதில வெற்றி பெற்றது கூட்டமைப்புக்கு வெற்றியாக இருக்கலாம். அதால தமிழ்மக்களுக்கு எந்தப் பிரயோசனமும் இல்லை. தமிழ் மக்களுக்கு நன்மையானதை இனித்தான் ரணில் செய்யப்போறாராம். அதை அவர் செய்யாமல் இருக்க, பொதுத் தேர்தலும் வந்தால் மகிந்தவுக்கு இப்ப நடந்த கதிதான் கூட் டமைப்புக்கு நடக்கும். எங்கட மக்கள் நிச்சயம் கூட்டமைப்பிட்ட கேட்பினம் அப்ப தெரியும் ஊழ்வினையின் வலிமையை.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனை அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

# பாராளுமன்றில் மீண்டும் அமர்க்களம் ஏற்படும்



பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைப்புச் செய்தது சட்டத்திற்கு முரணானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு மீண்டும் பழைய அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்தப் போவது தெளிவாகிறது.

அதாவது, ஜனாதிபதி மைத்திரி என்னதான் சபதம் எடுத்தாலும் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்குவதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை என்ற நிலைமைக்கு வந்துவிட்டார்.

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக்குவதன் மூலம் இருந்த இடத்திற்கு அரசாட்சி வருகிறது எனக்கூறினாலும் ஜனாதிபதி- பிரதமர் என்ற உறவு நிலை கசப்பும் எதிர்ப்பும் நிறைந்ததாகவே இருக்கும் என்பதும் ஏற்புடைய உண்மை.

இவை ஒருபுறமிருக்க, ஜனாதிபதி மைத்திரியின் அரசியல் காய்நகர்த்தல்கள் பிசகிப் போவதற்கு மூலகாரணம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒற்றுமை என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஜனாதிபதி மைத்திரி, மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமித்த கையோடு பாராளுமன்றத்தில் தமக்கான பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பதற்காக மகிந்த ராஜபக்ஷ தரப்பு மிகத்தீவிரமாக ஈடுபட்டிருந்தது.

இதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைக்கு கோடிக்கணக்கில் விலை பேசப்பட்டதான தகவல்களும் வெளியாகியிருந்தன.

113 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தமக்கு இருப்பதாகக் கூறிய மகிந்த தரப்பு ஈற்றில் பாராளுமன்றத்திற்குச் செல்வதைப் புறக்கணிக்கின்ற அவலத்திற்கு ஆளாகியது.

அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் மகிந்த தரப்பிற்குத் தாவிக்கொண்ட சம்பவமும் நடந்து முடிந்தது.

நிலைமை இதுவாக இருக்க, ஜனாதிபதி மைத்திரியின் நோக்கம் நிறைவேறாத வகையில் ஐக்கிய தேசியக் க்ட்சி உறுதியாக இருந்தது. அதிலும் குறிப்பாக சஜித் பிரேமதாஸவின் நிலை தடுமாறாத உறுதித் தன்மை, ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஆச்சரியமான வெற்றியையும் கௌரவத்தையும் கொடுத்தது.

மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமிப்பதற்கு முன்னதாக சஜித் பிரேமதாஸவுடன் தொடர்பு கொண்ட ஜனாதிபதி மைத்திரி அவரைப் பிரதமராக இருக்கும் வண்ணம் கேட்டுக்கொண்டார்.

எனினும் சஜித் பிரேமதாஸ அதனை இம்மியும் ஏற்றுக் கொள்ளவில்லை. பிரதமராக இருப்பதற்குச் சம்மதம் என்று சஜித் ஒரு வார்த்தை கூறியிருந்தால் அதனை ரணில் தவிர்ந்த ஒட்டுமொத்த ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஏற்றுக் கொண்டிருப்பர். ஆனால் அதனை சஜித் செய்யவில்லை. இதுவே ரணிலின் வெற்றிக்கு மூலகாரணம் எனலாம்.

தவிர, சபாநாயகர் கரு ஜெயசூரியவின் உறுதித் தன்மையும் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்குப் பேருதவியாயிற்று.

பாராளுமன்றத்தில் மகிந்த தரப்பு நடந்து கொண்ட அடாவடித்தனங்களை எல்லாம் சமாளித்து சபை நடவடிக்கைகளை இடைவிடாது நடத்திய சபாநாயகரின் துணிச்சலும் ரணிலுக்குப் பக்கபலமாயிற்று எனலாம்.

இவற்றுக்கு மேலாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜே.வி.பியும் இடையறாத ஒத்துழைப்பை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்கியதன் அடிப்படையில், ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் பிரதமர் பதவி கிடைக்க வாய்ப்பாகிறது.

இவையனைத்தும் ஜனாதிபதி மைத்திரியின் அரசியல் நகர்வுகளை ஸ்தம்பிதமாக்கின என்பதுடன் அந்த விவகாரத்தை முடிவுறுத்திக்கொள்ளலாம்.

இப்போது நம்மிடம் எழுகின்ற கேள்வி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்ப்பது கிடைக்குமா? என்பதுதான்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்ற கையோடு ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தவர்கள் மகிந்த தரப்பிற்குத் தாவினர் என்பதைவிட, தனது குறைந்தளவு உறுப்பினர்களில் பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் கூட்டமைப்பில் இருந்து மகிந்த பக்கம் தாவியமை பரபரப்பாகப் பேசப்பட்டது.



தவிர, ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்குவதற்காக கூட்டமைப்பு இந்தளவு தூரம் பாடுபடுவது எதற்கானது என்ற வினாவும் கூடவே எழுந்திருந்தது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றதும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் நிறைவேறும் என்பது கூட்டமைப்பின் நம்பிக்கையாகவுள்ளது.

இந்த நம்பிக்கை நிறைவேறுமா? என்பதைக் காலம்தான் தீர்மானிக்கவேண்டும். ஆனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க காலதாமதம் செய்தார் என்றும் அவரின் அசமந்தப்போக்கே இனப்பிரச்சினைக்கு முடிவு காண முடியாமல் போனது என்பதும் ஜனாதிபதி மைத்திரியின் குற்றச்சாட்டு.

இந்தக் குற்றச்சாட்டுக்களின் மத்தியில் இப்போது அரசியல் கைதிகளின் விடுதலையில் ரணில் விக்கிரமசிங்க உடன்பட்டாலும் ஜனாதிபதி மைத்திரி தனக்குரிய வகிபங்கை செய்வாரா? என்பதுதான் இப்போது இருக்கின்ற ஐயம்.

பாராளுமன்றத்தில் மகிந்த ராஜபக்ஷ தனக்கான பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கின்ற விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடுநிலை வகிக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரி கூட்டமைப்பிடம் இரந்து கேட்டிருந்தார்.

இருந்தும் ஜனாதிபதியின் கோரிக்கையை ஏற்க மறுத்த கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கே தனது ஆதரவை வெளிப்படுத்தி நின்றது.

இந்நிலைமையானது ஜனாதிபதி மைத்திரிக்கும் கூட்டமைப்புக்குமான உறவு நிலையைக் கடுமையாகப் பாதிக்கவே செய்யும்.

இவ்வாறாக பிரதமர் ரணில் கூட்டமைப்பை ஆதரிக்க; ஜனாதிபதி மைத்திரி கூட்டமைப்பை கடுமையாக எதிர்க்க, தமிழர்களுக்கு ஏதேனும் ஆகுமா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

எது எவ்வாறாயினும் தமிழ் மக்களுக்கு உரிமை கொடுப்பது என்ற விடயம் மேலெழும்போது பாராளுமன்றம் மீண்டும் அமர்க்கள மாக மாறும். சண்டைகள், சச்சரவுகள், மிளகாய்த்தூள் வீச்சுக்கள் என எல்லாம் தாராளமாக இருக்கும் என்பதை மட்டும் இப்போதைக்கு உறுதிபடக் கூறமுடியும்.

**திருநீலகண்டன்**




# தானத்தில் சிறந்தவன் கர்ணனே



ரொம்ப நாட்களாகவே பாண்டவர்களுக்கு ஒரு சந்தேகம் இருந்தது. அது, நம்முடைய அண்ணன் தர்மரும் தானம் செய்வதில் சிறந்தவர். இருப்பினும் கர்ணனையே ஏன் எல்லோரும் தானம் செய்வதில் சிறந்தவன் என்று கூறுகின்றனர் என்பது தான் அது. இவர்கள் மனதில் உள்ள சந்தேகத்தை அறிந்த கிருஷ்ணன் ஒரு நாள்பாண்டவர்களை அழைத்தார்.

தங்கமலை, வெள்ளி மலை என இரு மலைகளை உருவாக்கினார். பின் பாண்டவர்களை நோக்கி, "இங்கே பாருங்கள்! இந்த இரு மலைகளையும் பொழுது சாய்வதற்குள் தருமம் செய்துவிட்டால் தானத்தில் சிறந்தவர் தர்மர் என்று நீங்கள் சொல்வதை ஒப்புக் கொள்கிறேன்" என்று கூறினார்.

பீமனும் அர்ஜுனனும் மற்றவர்களும் அந்த இரு மலைகளில் இருந்து தங்கத்தையும் வெள்ளியையும் பாளம் பாளமாக வெட்டி எடுத்துத் தர தருமர் அதை உடனுக்கு உடன் நகர மக்களுக்குத் தானம் செய்தார். ஆனால், நகர மக்களில் பெரும் பகுதியினருக்கு அவ்வாறு தானம் செய்தும் தங்கமும் வெள்ளியும் குறையவேயில்லை. அதற்கு மாறாக அவ்விரு மலைகளும் வெட்ட வெட்ட வளர்ந்து கொண்டே இருந்தன.

மாலைப் பொழுது வந்ததும் இனி தங்களால் முடியாது என்பதை உணர்ந்த தருமர், "எங்களால் முடியாது கண்ணா!" என்று தன் தோல்வியை ஒப்புக் கொண்டார். உடனே கிருஷ்ணன்ஆளை அனுப்பி கர்ணனை வரவழைத்தார். கர்ணா! இதோ பார் இந்த இரண்டு மலைகளில் ஒரு மலை தங்க மலை. மற்றொன்று வெள்ளி மலை. இதை நீ பொழுது சாய்வதற்குள் தானம் செய்ய வேண்டும் பொழுது சாய இன்னும் ஒரு நாழிகைப் பொழுதே உள்ளது. உன்னால் முடியுமா? யோசித்துச் சொல்" என்று கூறினார்.

உடனே கர்ணன், "இதில் யோசிக்க என்ன இருக்கிறது. இப்போதே செய்து காட்டுகிறேன்" என்று கூறி அங்கிருந்த இருவரை அழைத்து, "இதோ பாருங்கள்! நீங்கள் இருவரும் ஆளுக்கொரு மலையாக இவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி தனது தர்மத்தை முடித்து விட்டுக் கிளம்பினான்.

பாண்டவர்கள் அசந்து போயினர். அவர்களை ஒரு அர்த்தப் பார்வையுடன் பார்த்து சிரித்தார் கிருஷ்ணன். தர்மருக்கும் பரந்த மனசு தான். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அவரைக் காட்டிலும் தான தருமம் செய்வதில் பரந்த மனசு உடையவன் கர்ணனே என்பதை சொல்லாமல் பாண்டவர்களுக்கு உணர்த்திவிட்டார் கிருஷ்ணன்.

SINGER
Trusted Excellence

ஒரு மகத்தான இடம் உங்கள் சேவையை நாடுகிறது

விற்பனை ஊக்குவிப்பு அலவலர் (யாழ்ப்பாணம்)

சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி.யின் [illegible] விற்பனை ஊக்குவிப்பு அலுவலராக இணைந்துகொள்ள திறமையும் உற்சாகமும் வாய்ந்த இளைஞர்களுக்கு அபூர்வ வாய்ப்புக் கிட்டியுள்ளது. விண்ணப்பதாரர் ஊக்கம் மிக்கவராகவும் சிறந்த தொடர்பாடல் திறன்கள் கொண்டவராகவும் சவால்கள் நிறைந்த சூழலில் ஏனைய ஊழியர்களுடன் அணி சேர்ந்து மனவுறுதியுடன் பணியாற்றக்கூடியவராகவும் இருக்க வேண்டும்.

தகுதி விபரம்


- க.பொ.த சாதாரணதர அல்லது உயர்தர பரீட்சையில் சித்தி
- விவசாய கனரக உபகரணங்களின் சந்தைப்படுத்தல் அனுபவம் அனுகூலமானது
- சிங்களம் அல்லது தமிழிலும் ஆங்கிலத்திலும் நன்கு உரையாட வேண்டும்
- மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் அவசியம்
- 19க்கும் 30க்கும் இடைப்பட்ட வயது

உடனடி நேர்முகப் பரீட்சைகள்
சிங்கர் சேவை நிலையத்தில்
இல.333, பலாலி வீதி, கோண்டாவில், கோண்டாவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
2018 டிசெம்பர் 19 | பி.ப. 2.00 முதல் பி.ப. 6.00 வரை

உதவி முகாமையாளர் - மனித வளங்கள்
ஆட்சேர்ப்பு மற்றும் அமைப்புகள்
சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி., 80, நவம் மாவத்தை, கொழும்பு 02.

Great Place To Work.

## வழிகாட்டுங்கள்



ஹாய் குட்டீஸ்! எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.








யாழ்ப்பாணத்தில் சமாதானப் புறாக்கள் பறக்கின்றனவே?

உலகத்தில் எல்லோராலும் ஏற்றுக்கொள் எக்கூடிய ஒரு பொதுவான விடயம்?

இனப் படுகொலை நடந்த நாட்டில் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்குமா?

**சுதன் — குப்பிளான்**

**தமிழரைக் குழப்ப வேண்டாம் என்று தமிழ்த் தலைமை கூறக் காரணம் என்னவோ?**

எம் மக்களின் துயர் துடைப்போம் என்று உறுதி மொழி கூறி பாராளுமன்றம் சென்ற தமிழ்த் தலைமை தமிழருக்கான தீர்வு தொடர்பில் ரணிலிடம் எழுத்துமூலம் வாங்கினால் அது சிங்கள மக்களை கொதிப்படையச் செய்யுமாம் என்று கூறுகிறது.

அப்படியென்றால் சிங்களவர்கள் கோபப்படாமல் இருக்க வேண்டும் என்று தானே நீங்கள் விரும்புகிறீர்கள். தவிர தமிழர்களுக்கான தீர்வைப் பெற்றுத் தர அல்ல என்பது தான் பொருள். என்ன செய்ய எமக்கு வாய்த்த தலைமை இப்படி ஆகியதை நினைத்து தலையில் அடித்துக்கொள்வதை விட வேறுவழியில்லை.

**தர்ணிகா — நவிண்டில்**

**இனப் படுகொலை நடந்த நாட்டில் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்குமா?**

கனவு காணுங்களேன். இலங்கை வரலாற்றில் இரண்டு பேரினவாத, இனவாதக் கட்சிகள் மாறிமாறி ஆட்சிபுரிகின்றன. ஒவ்வொரு ஆட்சிக்கலைப்பின் பின்பும் தமிழர்களுக்கான தீர்வு தரப்படும் என்ற பசப்பு வார்த்தைகளைக் கூறி எமது தமிழ்த் தலைமையை ஏமாற்றி ஆதரவு பெற்றுவிட்டு தூக்கி எறிவதுதான் இந்த பேரினவாதக் கட்சிகளின் வேலை. இவர்களுக்குப் போய் முட்டுக் கொடுத்துக் கொண்டு நிற்கும் தமிழ்த் தலைமைகளை நினைக்க நெஞ்சம் வெடிக்கிறது காணும்.

**ஜுபா — கரவெட்டி**

**யாழ்ப்பாணத்தில் சமாதானப் புறாக்கள் பறக்கின்றனவே?**

பாவங்கள் ஐயா அந்தப் புறாக்கள். சமாதானம் என்ற பெயரில் அவற்றை நாள் முழுவதும் அடைத்து வைத்து விருந்தினர் வந்ததும் அவர்கள் கைகளில் கொடுத்து பறக்கவிடுவதற்குப் பெயர் சுதந்திரமா? இதன் அர்த்தம் சமாதானமா?

**நிஷா — பருத்தித்துறை**

**நம் ஊரில் ஜிம்மிற்கு போகும் அனைவரையும் மோட்டார் சைக்கிளுடன் சந்தியில் காண முடிகிறதே?**

இறுக்கமான ரீ சேட் போட்டிருப்பார்கள். திருமண வீடுகளில் சாம்பார் வாளியை இரண்டு கைகளில் கொண்டு நடப்பவர்கள் போல கைகளை விரித்து நடப்பார்கள்.

அடுத்த ஆண் அழகன் நான்தான் என்று தாறுமாறாக மோட்டார் சைக்கிளை ஓடி எங்கையாவது மோதி முடிந்து போவார்கள்.

**ஜசி — நவாலி**

**தற்கால பாராளுமன்ற குழப்பம் தொடர்பில் யாது நினைக்கிறீர்?**

யான் என்ன நினைப்பது நாதா. அதுதான் நம் தலைமை, தலைமை தாங்கி வெற்றி பெற்றுக் கொடுத்துவிட்டதே. இந்த வெற்றியில் தமிழருக்கு ஏதும் நன்மை போல் எனக்குத் தெரியவில்லை நாதா. இந்த வெற்றிக்கு வெடி கொளுத்தி கொண்டாடுவதும் முகப் புத்தகத்தில் வெற்றிப் பதிவிடுவதும் வெட்கம் கெட்ட வேலை சுவாமி.

**வேதா — யாழ்ப்பாணம்**

**வாழ்க்கைக்கு நல்ல ஒரு தத்துவம் சொல்லுங்கள் வியாசரே?**

தடுமாறும் பொழுது தாங்கிப் பிடிப்பவனும் தடம் மாறும் போது தட்டிக் கேட்பவனுமே உண்மையான நண்பன்.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை**
**வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532,**
**076 636 3378 என்ற**
**Viber இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

## தொழில் மரியாதையும் சுய மரியாதையும்!

செருப்புக் கடைக்கு ஒரு கஸ்டமர் சென்றார். கடையில் உள்ள பணியாளர் அவரை வரவேற்று அழைத்து, அவருக்கு செருப்பை எடுத்துக்காட்டினார். கஸ்டமரை அமர வைத்து அவர் காலடியில் அமர்ந்து ஒவ்வொரு செருப்பாக அணிவித்து காட்டினார்.

இது செருப்பு வாங்க வந்த கஸ்டமருக்கு சங்கடமாக இருந்தது. நானே போட்டு பார்க்கிறேன் என்றார் கஸ்டமர். ஆனாலும், பணியாளர் விடவில்லை. பணியாளர் தொடர்ந்து அவருக்கு உதவினார். கஸ்டமர் பெருந்தன்மையாக சொன்னார் "ஐயா! நானும் மனிதன் நீங்களும் மனிதன். என் கால்களை நீங்கள் தொடுவது எனக்கு ஒரு மாதிரியாக இருக்கிறது என்றார். பணியாளர் சிரித்தபடி சொன்னார்.

இந்த கடைக்கு வெளியே போய் விட்டால், நீங்கள் நூறு கோடி ரூபாய் கொடுத்தாலும் நான் உங்கள் கால்களைத் தொடமாட்டேன்".

அது என்னுடைய சுய மரியாதை! கடைக்குள் நீங்கள் நூறு கோடி கொடுத்தாலும், உங்களுக்கு உதவுவதை நான் நிறுத்த மாட்டேன். இது என்னுடைய தொழில் மரியாதை.

**மோகிதன் — யாழ்ப்பாணம்**

**வடக்கு மக்களை ரணில் மட்டுமா ஏமாற்றினார்?**

வாக்குறுதியைக் கொடுக்கவும் வாங்கவும் என தம் பொக்கற்றுகளை நிறைத்துக் கொண்டு தமிழர் நலன் பற்றிச் சிந்தியாத எம் தலைமை பற்றி உங்களுக்குத் தெரியும் தானே.

இப்போது சொல்லுங்கள் ரணில் மட்டுமா தமிழர்களை ஏமாற்றினார்?

**துஷா — தொண்டைமானாறு**

**உலகத்தில் எல்லோராலும் ஏற்றுக்கொள் எக்கூடிய ஒரு பொதுவான விடயம்?**

மனிதனால் ஏற்றுக்கொள்ள முடியாதது. ஆனால் ஏற்றுத் தான் ஆக வேண்டிய ஒன்றே ஒன்று அது மரணம் மட்டும்தான். ஏனோ இது மனிதருக்குப் புரிவதில்லை.

பிறந்ததில் இருந்து ஓடி ஓடி உழைத்து வானை முட்டும் பணம் சேர்த்து விட்டு வாழ நினைக்கும் போது அவன் வாழ்வு முடிந்து போய் விடுகிறது.

**திரு — வடமராட்சி**

**பல்லில்லாதவன் பகோடாச் சாப்பிட ஆசைப்படலாமா வியாசரே?**

அப்போ பல்லில்லாதவர் பாயாசம் மட்டும் தான் சாப்பிடணும் என்று சொல்லுகிறீரோ? ஏன் பகோடாவை உரலில் போட்டு குற்றிச் சாப்பிட்டால் என்னவாம்.

**சர்மினி — யாழ்ப்பாணம்**

**ஒரு பெண் ஆணிடம் எதை எதிர்பார்க்கிறாள்?**

ஆரம்பத்தில் பெண்கள் ஆண்களிடம் எதையும் எதிர்பார்ப்பதில்லை. நாள் போகப் போக அடுத்த வீட்டில் என்ன இருக்கிறதோ அதை தன் வீட்டில் எதிர்பார்க்க ஆரம்பித்து ஆதுபேராசையாக மாறி முற்றி வெடிக்கும் நிலையில் வந்து நிற்கும். எதையும் தகுதிக்கு மீறி ஆசைப்படுவது தவறு என்பதைப் புரிந்து கொண்டால் எல்லாம் சரி.

**கரிஸ் — யாழ்ப்பாணம்**

**தமிழ் பற்றி கூறுங்கள் வியாசரே?**

சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும், என்தன் உடல் சாம்பலிலும் தமிழ் மணந்து வேக வேண்டும், பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போதும் பைந்தமிழில் அழும் ஓசை கேட்க வேண்டும், ஓடையிலே என் சாம்பல் ஓடும் போதும் ஒண் தமிழே சலசலத்து ஓட வேண்டும்.

— ஈழத்து கவிஞர் சச்சிதானந்தம்.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## அவன் புகழ்

ஊரார் உறங்க
உற்றவரும் தானுறங்க
அவன் விழி மட்டும்
உறங்காது ஏறுபூட்டி
சேற்றில் மிதிக்க
நாம் சோற்றில்
கை வைக்கின்றோம்

வெயில் மழை பாராது
நெற்றி வியர்வை
நிலத்தில் சிந்த
பூமியைக் கீறி
புதையல் எடுத்து
ஊரோடு சேர்ந்து
உண்ணும் உத்தமனும் அவனே

காத்துக்கிடந்து காவல்புரிந்து
காலமறிந்து கதிரவனின்
சிரிப்பறிந்து
காலத்தை வென்று
எம் பசிக்கு விருந்தளிக்கும்
உத்தமனின் திருநாளாம்
தைத்திருநாளில்
ஊரெங்கும் ஒளிவீச
இல்லமெங்கும்
பொங்கல் பொங்க
அகமகிழ்ந்து அவன்
புகழ்பாடுவோம்
அகிலமெங்கும்
கேட்கட்டும்
வணக்கம் பலமுறை

சி. கலாமணி, வட்டாரம்-08, மண்டைதீவு



## ஏழ்மை ஒழியட்டும்!

வானம் பொழியட்டும்
வையம் மகிழட்டும்
கூனல் நிமிரட்டும்
கொள்கை பரவட்டும்!

சீலம் சிறக்கட்டும்
சீர்த்தி செழிக்கட்டும்
ஞாலம் ஒளிரட்டும்
நன்மை பயக்கட்டும்!

ஏழ்மை ஒழியட்டும்
ஏற்றம் நிகழட்டும்
தாழ்வு பணியட்டும்
தகவு தழைக்கட்டும்!

பண்பு பரவட்டும்
பாசம் பனிக்கட்டும்
கண்கள் களிக்கட்டும்
கடமை ஒளிரட்டும்

சிந்தை சிறக்கட்டும்
சீர்மை சிலிர்க்கட்டும்
விந்தை விளங்கட்டும்
விவேகம் விளையட்டும்

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

## கவிதைக்கலசம்

## எழு பெண்ணே!



நிலையற்ற, நிம்மதியற்ற
இவ்வாழ்வு நீங்க பெண் இனமே
வீறு கொண்டு எழுவாயாக
வாழ்வது ஒருமுறை
அதை உனக்காக வாழ
நியாயம் அற்று நித்தம் எமை
போட்டு சித்திரவதை செய்யும்
ஆண் வர்க்கத்தை எதிர்த்து நிற்க
நீ வீறுகொண்டு எழு பெண் இனமே

யோ.வொமினா,
யா/ சிதம்பராக் கல்லூரி.

## யாருக்குத் தெரியும்?

மழையின் அருமை பூமிக்குத் தெரியும்
நிழலின் அருமை வெயிலில் தெரியும்
நீரின் அருமை தாகத்தில் தெரியும்
பிள்ளையின் அருமை தாய்க்குத் தெரியும்
பெற்றோரின் அருமை இல்லாதார்க்குத் தெரியும்
கல்வியின் அருமை கல்லாதார்க்குத் தெரியும்
பணத்தின் அருமை ஏழைக்குத் தெரியும்
உறவின் அருமை தனிமையில் தெரியும்
ஊரின் அருமை இறப்பில் தெரியும்
ஒளியின் அருமை இருளில் தெரியும்
வாவியின் அருமை ஊருக்குத் தெரியும்
வலியின் கொடுமை பட்டார்க்குத் தெரியும்
கண்ணின் அருமை இல்லாதார்க்குத் தெரியும்
காலின் அருமை முடவனுக்குத் தெரியும்
சொல்லின் அருமை ஊமைக்குத் தெரியும்
நேர்மையின் அருமை நல்லார்க்குத் தெரியும்
இறப்பின் அருமை யாருக்குத் தெரியும்

பாவரன், குட்டிநகர், வவுனியா

## பாட்டி வீட்டு மந்திரம்

பாடுபட்டு ஏர்பிடித்து
ஏழைக்கு சோறுபோட்ட
காலமது மாறிப்போக
பாஸ்பூட் பாசனிலே
ஹோட்டலிலே ஓடர்செய்து
ஆரோக்கியத்தை அடகுவைக்கும்
அன்பர்களே கேளுங்கள்

வயிறு நிறைய உண்பது
வாழ்க்கையல்ல
உயிர் வாழ்வதற்கே உணவு
உயிர் எடுப்பதற்கு அல்ல
எனும் எண்ணம் வளர வேண்டும்

தொலைக்காட்சி தொடர்களிலே
மூழ்கிமூழ்கி மூச்சடக்கி
குடும்ப உறவுகளைத் தொலைத்தபின்பு
தேம்பி அழுது என்ன இலாபம்

வேண்டும் எமக்கு வாழ்வெனில்
வேண்டாத .உணவுகளைத் தவிர்த்து
வீட்டில் சமைத்து
வேளை தவறாது உண்போம்

நாளைய நம் சந்ததி
ஆரோக்கியமாய் வாழ்ந்திட
பாட்டி வீட்டு மந்திரத்தை
பரப்புவோம் அவர்களிடம்

மாவை. நா. கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 426



### வருவாயா?

எதிர்பார்த்து ஏங்கி ஏங்கி
கண்களும் பஞ்சடைத்து
காலங்கள் கடந்தோடி
நரை திரை ஆன பின்பும்
இன்னுமின்னும்
இறுதி மூச்சுவரை...
நானீன்ற என் குஞ்சு
எங்கே என் பிள்ளை

சி.இளங்கோ
சம்மட்டியோலை
மானிப்பாய்

### தேடல்

உதிரம் சொரியத் தரித்த
உன்னைத் தக்கவைக்க
தவறிய பாவி இன்றுவரை
தேடி அலைகின்றேன் உன்னை
மரித்திருந்தாலும் முடித்திருப்பேன்
என் கடமைகளை
கடந்து போன காலத்திற்குள்
தொலைந்து போன உன்னை
கலையாத் துணிவுடன்
தேடி அலைகின்றேன் இன்றுவரை

த.தனுசன்
உரும்பிராய், யோகபுரம்

### தாய்மையின் தேடல்

இராணுவ முற்றுகையில்
மாயமாய் போனவனும்
என் மாயவனே!
தொலைந்து போன உறவை
உரிமையோடு கேட்க
நாதியற்ற எனக்கு
தீர்வு கிடைப்பது எப்போது?
தவமாய் தவம் இருந்து
பெற்றெடுத்த என்
தவப்புதல்வனை
கண்டீர்களா எங்காவது?
மகனின் புகைப்படத்தை
அடையாளம் காட்டி
புலம்பும் புலம்பெயர்ந்த
தாய்மையின் தேடல்

சி.லோட்டஸ்லோறெஸ்
தெல்லிப்பழை

### கதறல்

கதறி அழுதும் கண்ணீர் விட்டும்
என்ன பயன்
சிதறிப்போன உடலைக் கூட
சீரழித்த மானிடர்கள்
பதறிப்போன உன் மனதை
புரிந்து கொள்வாரில்லையம்மா
பிறவி ஒன்று எடுக்கும் காலம்
விரைவில் வரும் உன் சோகம் தீர

தமிழ்யோகி, மடத்துக்கடவையான்

### நீ எங்கிருக்கின்றாய்?

என் அன்பு மகனே!
நீ எங்கிருக்கின்றாய்?
நான் உன்னைத் தேடித்தேடி
என் கால்கள் தேய்ந்து விட்டன
உடல்கள் சோர்ந்து போய்விட்டன
உள்ளம் நொருங்கி விட்டன
அன்பு மகனே நீ
இருக்கும் இடம் சொல்வாயானால்
நான் வருவேன் உனைத்தேடி

அ.மேரி அல்போன்சா,
குருநகர்

### தனயன்

என் மகன் வருவான்!
என் மகன் வருவான்!
தினமும் மகனின்
புகைப்படத்தை பார்த்து
பொய்யான வாழ்வுக்கு
பொய்யான சந்தோசத்தை
தனதாக்கிக் கொண்ட
தெய்வத்தாய் இவள்
என் மகனின் சாதகபலனும்
சிரஞ்சீவி அவனே!
தாய்மை என் பட்டத்தை
எனக்குச்சூட்டி
நானும் ஒரு தாய் என்று
சமுதாயத்திற்கு என்னை
அறிமுகப்படுத்திய குலக்கொழுந்தே!
நீ வருவாய் என வழிமேல்
விழிவைத்து காத்திருக்கிறேன்
புதைகுழியில் மனித எச்சங்கள்
நாள்தோறும் விளையும்
உலோகப்பொருளாக இருந்தாலும்
என் தனயன் எனைத் தேடி வருவான்

சி.ஜெனிஃபர்
மயிலங்காடு

## இவ்வார மௌனத்தின் தேடல் -427



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி-சங்குநாதம்
இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்

### செல்வங்கள் எங்கே?

விடையே காணாத
கேள்வியைப் போல
தொடரும் இப்போராட்டம்
எம் செல்வங்களை
மீட்பதற்காகவே
தீராத போர் அதற்கே
முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது
ஆயினும்
அதில் தொலைந்த
எம் செல்வங்கள் எங்கே?
அமைதிப்போராட்டம்
ஆதலாலே
இன்னும் தீர்வு
கிட்டவில்லை
பரவாயில்லை
இது எம் உயிர்
உள்ளவரை தொடரும்

த. ஜானிகா
உரும்பிராய்

### பெத்தமனம் பித்தாகிவிட்டதே

தொலைத்த
உன்னை
புகைப்படம்
காட்டி கண்ணீரும்
கம்பலையுமாக
தேடி அலைகின்றாளே
அவளின்
மனக்குமுறல்கள்
உன் செவிக்கு
கேட்கவில்லையா! மகனே
பெத்தமனம்
பித்தாகிப் போனதே
தடைகளைத்
தகர்த்தெறிந்து
எழுந்து வா மகனே
உன் தாயின்
கண்ணீர்த்துளிகளை
துடைப்பதற்கு

சி.பிரியங்கா
மட்டுவில் தெற்கு

# அவர்கள் சாகவில்லை!




நோர்வே நகரில் உள்ள ஒஸ்லோ சர்வதேச விமான நிலையத்திலிருந்து நள்ளிரவு 12 மணிக்கு தனது இலங்கைக் கான பயண த்தை ஆரம்பித்த ஸ்ரீலங்கா எயார்லைன் நிறுவனத்திற்குச் சொந்த மான ஜெட் விமானம் 300 இற்கு மேற்பட்ட பயணிகளுடன் பேரிரைச்சலுடன் தனது ஓடு பாதையில் ஓடி மெல்ல மெல்ல கிளம்பி வான் மண்டலத்துக்குள் நுழைந்து தன் பயணப் பாதையில் சென்று கொண்டி ருந்தது.

திடீரென அழகு தேவதைகள் போல கருநீலச் சேலை அணிந்த விமானப் பணிப்பெண்கள் பயணிகளை நோக்கி "ஆய்போவன், வணக்கம் எல்லோரும் உங்கள் இடுப்புப் பட்டிகளையும் பாதுகாப்பு கவசத்தையும் அணிந்து கொள்ளுங்கள்? எனப் புன்முறுவல் பூத்த வண்ணம் கட்டளையிட்டனர். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல இன மக்களும் நிறைந்திருந்த அந்த விமானத்தினுள் சரவணனும் மஞ்சுளாவும் கூடவே இருந்தனர். அவர்க ளும் பணிப்பெண்களின் கட்டளைக்கேற்ப செயற்பட்டனர்.

தாய்நாட்டிலிருந்து ஒரு தசாப்தத்திற்கு முன்பாக நாட்டில் சூழ்நிலைகளால் அவல மான காலகட்டத்தில் புலம்பெயர்ந்து நோர்வே நகரில் குடியுரிமை பெற்று வசித்து வரும் சரவணனும் மஞ்சுளா வும் தங்கள் தாய்நாட்டில் கால் பதிக்கப் போகும் மனப் பூரிப்பில் இருந்தனர். அங்கு இப்போ என்ன நிலைமையோ, எங்கள் ஆசை நிறைவேறுமா? எங்கள் மீது சந்தேகப்பட்டு திருப்பி அனுப்பி விடுவார் களோ? இப்படியே மஞ்சுளா சரவணனை கேட்ட வண்ணம் இருந்தாள். இப்போ அரசின் சமாதானக் காலம். அப்படியொன் றும் நடக்காது. எங்கள் சோபாலபிட்டி விநாயகர் அப்படி நடக்கவிடார். நாம் எம் செல்வத்தின் கல்லறைக்கு நெய் விளக் கேற்ற, கல்லறையை முத்தமிட்டு எம் கடமையை நிறைவேற்ற, எம் விநாயகப் பெருமானில் கொண்ட நம்பிக்கையோடு தானே வருகிறோம். எதுவும் நடக்காது. மஞ்சு எதற்கும் யோசிக்க வேண்டாம் என்று கூறியபடி பல கதைகளை பேசிய வண்ணம் இருந்த சரவணன் சற்று உறங்கிவிட்டான்.

சரவணன் தோளில் சாய்ந்தவண் ணம் இருந்த மஞ்சுளாவின் உள்ளம் கடந்தகால நினைவுகளால் கண்கள் குளமாகி கண்ணீர் தாரை தாரையாக ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த உஷ்ண மேறிய விழிநீர் அவளின் துயரமான கதையை கூறிக்கொண்டே பாய்கிறது.

சரவணனும் மஞ்சுளாவும் ஒருவரை யொருவர் அறியாதவர்கள். அப்போதைய சமூக அமைப்பில் வேறுபட்டவர்கள். இருவரும் தங்கள் பிரதேசங்களில் சிறப்பான கல்வியைப் பெற்று சமகாலத்தில் பேராத னைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பிற் காக உள்நுழைந்தவர்கள். இருவரின் பல் கலைக்கழக நட்பு. நெருக்கமான உறவா டல் காதலாக மலர்ந்தது. சமூகத்தில் புரையோடிக்கிடக்கும் மூடநம்பிக்கை களையும் வேற்றுமைகளையும் உடைத் தெறியும் போராட்டத்தில் வெற்றியும் கண்டனர்.

பல்கலைக்கழக கல்வியை முடித்த இருவருக்கும் ஒரே நாளிலேயே பட்டதாரி ஆசிரிய நியமனமும் கிடைத்து கிளிநொச்சி மாவட்டத்தில் இரு பெரிய கல்லூரிகளில் நியமனமும் கிடைத்தது. சரவணன் ஆசி ரியத் தொழிலோடு தாம் வாழ்ந்த பரந்தன் குமரபுரம் கிராமத்தில் பல பொதுத் தொண் டுகளில் ஈடுபட்டதன் பயனாக மக்களின் மதிப்பும் சரவணனுக்கு ஓங்கியது. குதூ கலம் மிக்க குடும்பமாக இருந்த இவர்க ளுக்கு இரு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண் ணும் பிறந்து வளர்ந்து கல்வி கற்றுக் கொண்டிருந்த காலம். மூத்தவன் சுரேன், இளையவன் ரமேஸ், நடுப் பிள்ளையாக அவதரித்த வள்தான் மாலதி. செல்லப்பிள்ளையாக இருந்த மாலதி கிளிநொச்சி நகரில் உள்ள பிரபலமான மகளிர் கல்லூரியான திரேசா மகளிர் கல்லூரியில் உயர் வகுப்பில் கற்றுக்கொண்டி ருந்தார். சகோதரர் இருவ ரும் கிளி. இந்துக் கல்லூரி யில் உயர்வகுப்பிலும் ஆரம் பப் பிரிவிலும் கற்றுக் கொண்டிருந்த காலம். குதூ கலமாக இருந்த குடும்பத் தில் பேரிடி வீழ்ந்தது. அமைதியான குடும்பம் நிர்க்கதிக்குள்ளாகி சின் னாபின்னப்பட்டதனால் ஊரரே கலங்கினர். இவர்க ளுக்கா இந்தக் கதி ஏற்படவேண்டுமென கவலை தெரிவிக்க அவர்கள் இல்லத்தில் மக்கள் கூட்டம். அப்போது தான் மக்கள் தம்மீது கொண்ட அன்பு, மதிப்பு பற்றி உணர்ந்தான்.

> **“ அன்புள்ள அம்மா, அப்பா ஏன் என்னைத் தேடி அலைகிறீர்கள். நான் விரும்பியே என் னைப் போராளியாக இணைத் துக் கொண்டேன். அண் ணாவையும் தம்பியை யும் படிக்க வையுங்கள். எனது கடமை முடிய நான் வீடு தேடி வருவேன்.**

நாட்டின் நாலாபக்கமும் போரின் அதிர்வுகள், துப்பாக்கி வேட்டுக்கள், விடுதலைப் போராளிகளின் அறைகூவல்கள், நாட்டில் நடைபெறும் சம்பவங்கள், பிரசார நடவடிக்கையால் மனம் குழம்பிப் போய் இருந்த மாலதி விரக்தி கொண்டவளாய் படிப்பில் அக்கறை குறைந்து வருவதை யும் உணர்ந்த சரவணனும் மஞ்சுளாவும் தீராக் கவலை கொண்டிருந்தனர். " நாம் படித்து எதைச் சாதிக்கப் போகிறோம். எம் போன்றோரின் தியாகத்தையும் வீரத் தையும் பேசுவதற்கு என்ன தகுதியுண்டு" இப்படித்தான் அவளைப் பெற்றுவளர்த்த தாயோடு வாதிட்டாள்.

அன்று ஒருநாள் காலை பள்ளிக்குப் போனவள் தான் மாலையில் வீடு திரும்ப வேயில்லை. தினம் தினம் போராளிகள் பாசறை எங்கும் தேடி அலைந்தார்கள், பலன் ஏதும் கிடைக்கவில்லை. அவர்கள் துரும்பாய் இளைத்தார்கள். அன்றொரு நாள் அவர்கள் கைக்கு அவள் கைப்பட எழுதிய சிறிய மடல் ஒன்று வந்தடைந்தது.

அன்புள்ள அம்மா, அப்பா ஏன் என்னைத் தேடி அலைகிறீர்கள். நான் விரும்பியே என்னைப் போராளியாக இணைத்துக் கொண்டேன். அண்ணா வை யும் தம்பியை யும் படிக்க வையுங்கள். எனது கடமை முடிய நான் வீடு தேடி வருவேன்.

அன்பு மகள் மாலதி.

இனி எதுவும் சிந்திப்பதற்கில்லை. அவள் தானாகவே எங்கள் அன்பை, பாசத்தை சுக்கு நூறாக்கிவிட்டாள். இனி இங்கிருப்பது எங்கள் ஆண் பிள்ளை களுக்கு எந்தப் பாதுகாப்புமில்லை. போர் உச்சக்கட்டத்தை அடைந்தது. இருவரும் இணைந்தே ஒரே முடிவுக்கு வந்தனர். அது தீர்க்கமான முடிவாகவே இருந்தது.

அதன் பலன் புலம் பெயர் அகதிகள் என்ற பெயரோடு நோர்வே நகர் சென்ற சரவ ணனுக்கும் பிள்ளைகளுக்கும் நோர்வே நாட்டில் அரசியல் தஞ் சம் கிடைத்தது. அழகு மிகு அந்நாட்டின் வெள் ளிப் பனிமலை மீதி னிலே உலாவந்த னர். இந்நிலையிலும் தன் மகளின் நினை வாகவே காலம் கட த்தி வந்த சரவணனுக் கும் மனைவிக்கும் அன்றொருநாள் அதி காலை விடியும் நேரம் தான் அந்தத் தாங்க முடியாத உடலைப் பொசுக்கும் செய்தி வந்தடைந்தது.

முல்லைச் சமரில் ஒரு படையணிக்கு தளபதியாகச் சென்ற மாலதி என்ற மாதவி (அவள் புனைபெயர்) வீரச்சாவடைந்தாள். மிக நெருக்கடியான காலகட்டம். அவர்க ளால் எதைத்தான் செய்யமுடியும். அழுது புலம்பி தலையில் அடித்துக்கொண்டார்கள். காலம் ஒருநாள் கனிந்துவரும். அப்போ தாவது எங்கள் கடமையைச் செய்வோம் என்ற நம்பிக்கையோடு இருந்தார்கள்.

அரசு போராளிகளோடு சமாதானம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சமாதான உடன்படிக்கையும் 2005 இல் ஏற்பட்டது. சமயம் பார்த்திருந்த சரவண னும் மஞ்சுளாவும் அவ்வாண்டு நடை பெறும் மாவீரர் தினத்தில் கலந்து கொண்டு அவள் கல்லறையில் முத்தமிடுவோம். தீபம் ஏற்றுவோம் என்ற நம்பிக்கையோடு புறப்படுவதற்கு ஏற்பாடுகளைச் செய்தனர்.

2005 நவம்பர் 25 இல் நள்ளிரவு நேரம். நோர்வே நகரில் இருந்து புறப்பட்ட எயார் லங்கா விமானத்தில் தாயக மண் ணில் கால் பதிக்கும் மகிழ்ச்சியோடு, பல எண்ணக் கனவுகளோடு புறப்பட்டனர். 26 நவம்பர் நள்ளிரவு நேரம் கொழும்பு சர்வதேச விமான நிலையத்தை வந்த டைந்தனர். அவர்களது முன் ஏற்பாட்டின் படி நண்பர் ஒருவர் ஹயஸ் வாகனத்தோடு தயாராகக் காத்து நின்றார். சாரதியான நண்பருக்குத்தான் விடயம் பற்றி விரி வாகக்கூறி உரிய நேரத்திற்கு முன்னதாக கிளிநொச்சியிலுள்ள கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்திற்குச் செல்ல வேண்டு மென்று அவன் குறிப்பிடவே " நீங்கள் இரு வரும் உரிய நேரம் 6.05 இற்கு முன்ன தாகவே துயிலும் இல்லம் சேர்ப்பேன். நானும் ஒரு மாவீரர் குவேனியின் அப்பா தான்" என்றார்.

நள்ளிரவு நேரம், பனிமூட்டம், மாரி மழை மூசிப் பெய்து கொண்டிருந்தது. காரிருளைக் கிழித்துக்கொண்டு ஹயஸ் வாகனம் கண்டி வீதி வழியாக விரைந்த வண்ணம் இருந்தது. முறிகண்டியை வந்தடைந்து விட்டது. எல்லோரும் இறங்கி தேங்காய் அடித்து தீப வணக்கம் செய்து மீண்டும் பயணம் தொடர்ந்தது. இரணை மடுச்சந்தி இன்னும் சில நிமிடங்களில். உரிய நேரத்திற்குப் போய்விடுவோம் என்று சொன்ன சாரதி திடீரென தன் வாகன பிறேக்கை அழுத்தினார். எல் லோரும் திகைத்துவிட்டனர்.

திடீரென வீதியின் குறுக்கே பாய்ந்து மறித்த புலிச்சீருடை அணிந்த பெண் போராளி " நீங்கள் துயிலுமில்லம் போவது போல் தெரிகிறது. நானும் தீபம் ஏற்ற வேண்டும் எனது அண்ணனுக்கு" அவள் சொல்லி முடிப்பதற்குள் அவளையும் பரிதாபத்துடன் நோக்கி ஏற்றிக்கொண்டு விரைந்தது ஹயஸ்.

சரவணனும் மஞ்சுளாவும் அங்கு நடந்த காட்சிகளையும் அலங்காரத்தை யும் பார்த்து மெய்மறந்து நின்றார்கள். நேரம் 6 மணியைத் தாண்டியதை ஒலி பெருக்கிச் சத்தம் நினைவூட்டியது. அப்பா, அம்மா இப்போ கதைக்க நேரம் போதாது. எனது வீடு மிக அண்மையில் தான் இருக் கிறது. நாளை என் வீட்டிற்கு வாருங்கள். நாளை மதிய உணவு எங்கள் வீட்டில். இதுதான் எங்கள் முகவரி. ஒரு அட்டை யைக் கொடுத்து பிரிந்தாள்.

இவ் இனிய சந்திப்பை எண்ணிப் பெருமை கொண்டபடி தங்கள் மகளின் கல்லறைக்குச் சென்றனர். அங்கும் பல மலர் மாலைகள் சாத்தப்பட்டிருந்தது. கல்லறையில் மாலதி (மாவீரர் மாதவி) என எழுதப்பட்டிருந்தது. தங்கள் கட மைகளை முடித்துக்கொண்டவர்கள் பெண் போராளி தந்த அதே முகவரிக்கான வீட்டை அடைந்தனர். அங்கே அவர்கள் கண்டகாட்சி அவர்கள் குருதியை உறைய வைத்தது. அதேபெண் சந்தேகமேயில்லை. முகவரியைக் கொடுத்த அப்பெண் போரா ளியின் படம் புது மலர்மாலையோடு ஆடி ஆடி வரவேற்றது. வயதான அப்பாவும் அம்மாவும் வரவேற்று உபசரித்தனர். தங்கள் மகள்தான் அப்படத்தில் இருப்பவர். 10 வருடங்களுக்கு முன் இரணைமடுவில் வீரச்சாவடைந்தார். " நாங்கள் ஒரு மாவீரர் குடும்பம்" எனப் பெருமையாகச் சொன் னார். அப்படியானால் அவர்கள் சாவடைய வில்லை இன்னும் வாழ்ந்து கொண்டிரு க்கிறார்களா? என்ற கேள்வி தொக்கி நின்றது. சரவணனும் மஞ்சுளாவும் பல அன்பளிப்புக்களைக் கொடுத்து நாங்களும் ஒரு மாவீரர் குடும்பம் என்ற பெருமை யுடன் விடை பெற்றுச் சென்றனர்.

(யாவும் கற்பனை)

**கலாபூஷணம்**
**பொன். தில்லைநாதன்**
**பூநகரி**

# பசியில் வாடும் ஏமன் குழந்தைகளும் சவுதி அரேபிய-அமெரிக்க உறவும்!

ஏமன் போரில் ஈடுபடுவதற்கு அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்கவில்லை. இத் தீர்மானம் உடனடியாக அமெரிக்க அரசின் தலையீட்டை நிறுத்தாது என்ற போதிலும் ஒரு சிறிய அளவிலான சலனத்தை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது.

இருபத்தோராம் நூற்றாண்டின் மிகக் கொடூரமான உள்நாட்டுப் போரைச் சந்தித்து வருகிறது ஏமன். ஏமன் உள்நாட்டுப் போர் "மனிதனால் உருவாக்கப்பட்டுள்ள மிக மோசமான நெருக்கடி" என ஐ.நா. சபை குறிப்பிட்டுள்ளது. ஏமன் உள்நாட்டுப் போரில் அமெ ரிக்காவின் தலையீட்டை முடிந்த அளவுக்கு அல்லது முற்றிலுமாக நிறுத்த வேண்டும் என அமெரிக்க செனட் சபை கடந்த நவம்பர் 2ஆம் திகதியன்று தீர்மானம் ஒன்றை 63 :37 என்ற பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவோடு நிறை வேற்றியுள்ளது. இது விரைவில் முழு விவாதத் திற்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது.



ஏமன் யுத்தத்தில் முழு வீச்சில் ஈடுபட்டுவரும் சவுதி அரே பியாவுக்கு அமெரிக்கா சகல உதவிகளையும் செய்து வருகிறது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சவுதி அரேபியா வுடன் அதிக நெருக்கம் காட்டி வருகிறார். இந்நிலையில் அமெ ரிக்காவில் ஆளும் கட்சியான குடியரசுக் கட்சி, பெரும் பான்மை பலம் கொண்டுள்ள செனட் சபையில் பெரும் பான்மை ஆதரவுடன் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள் ளது ஜனாதிபதி ட்ரம்பிற்கு பின்னடைவாக அமைந்துள்ளது.

### எங்கே, எப்போது தொடங்கியது ஏமன் உள்நாட்டு யுத்தம்?

ஏமன் உள்நாட்டுப் போர் மார்ச் 2015ஆம் ஆண்டு தீவிரமடைந்தது என்றாலும், அதற்கான தொடக்கம் 2011ஆம் ஆண்டு தொடங்கிய அரபு எழுச்சியிலிருந்தே வருகிறது. துனிசியாவில் தொடங்கிய அரபு எழுச்சி பல்வேறு மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளில் ஆட்சி மாற்றத்திற்கு வித்திட்டது. அதன் தொடர்ச்சியாக ஏமனிலும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. 33 ஆண்டுகள் ஆட்சியிலிருந்த அலி அப்துல்லா சாலேவுக்கு எதிராகப் புரட்சி உருவாகவே துணை ஜனாதிபதி மன்சூர் ஹாதியிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

புதிய ஜனாதிபதி மன்சூர் ஹாதி, பதவிக்கு வந்த பிறகு ஏமனில் செயற்பட்டுவந்த ஹவுதி குழுக்கள் ஏமனின் வடக்குப் பகுதியில் உள்ள சத்தா மற்றும் அதன் அருகாமை மாகாணங்களைக் கைப்பற்றின. முன்னாள் ஜனாதிபதி சாலேவுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்த குழுக்களுக்கும் ஹவுதி உடன் இணைந்து தலைநகர் சனாவையும் கைப்பற்ற முயன்றன. இதனால் ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேற நேர்ந்தது.

ஜனாதிபதி ஹாதிக்கு ஆதரவாகச் சவுதி, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்டவை ஹவுதி மற்றும் முன்னாள் ஜனாதிபதி சாலேவின் படைகளை எதிர்த்து மார்ச் 2015 முதல் போரிடத் தொடங்கின. அன்று முதல் ஏமன் உள்நாட்டுப் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஹவுதி குழுக்களுக்கு ஆதரவாக ஈரான் செயற்படுவதாகத் தொடர்ந்து குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றன. இதை ஈரான் மறுத்தாலும் அமெரிக்கா, சவுதி அரேபியா தொடர்ந்து ஈரானைக் குற்றம்சாட்டி வருகின்றன.

சவுதி தலைமையிலான ஜனாதிபதி ஹாதி ஆதரவுப் படைக்கு அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் தொடர்ந்து இராணுவ உதவி, ஆயுதம் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை அளித்து வருகிறது. தீவிரவாதக் குழுக்கள் உள்ள பகுதிகளின் மீது வான்வழித் தாக்குதலில் ஈடுபடப் போவதாகச் சவுதி அறி வித்திருந்தது. ஆனால், பெரும் பாலான ஏவுகணைத் தாக் குதல்கள், பொதுமக்கள் வாழும் பகுதிகளில்தான் நடை பெற்றுள்ளது என்பதை ஐ.நாவும் உறுதிப்படுத்தியுள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகிற இந்த யுத்தத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். இருபது இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்துள்ளனர். மருத்துவ வசதிகள் கிடைக்கப்பெறாமல் இலட்சணக்கான மக்கள் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொலரா தொற்றினால் மட்டும் 85.000 குழந்தைகள்வரை உயிரிழந்திருக்கலாம் எனச் சில புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் இலட்சக்கணக்கான குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடுகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏமனுக்கான போக்குவரத்தையும் சவுதி முடக்கி வைத்துள்ளதால் உணவு, மருந்துப் பொருட்கள், பாதிக்கப்பட்டவர்களுக்குச் சென்று சேர்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஏமன் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்புமே போர்க்குற்றத்துக்குச் சாட்சியானவர்கள் என்று ஐ.நா., கடந்த ஓகஸ்ட் மாதம் தெரிவித்திருந்தது. போரை முடிவுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்துப் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளுமே தோல்வியில்தான் முடிந்துள்ளன.

### சவுதி அரேபியா - அமெரிக்கா

மத்திய கிழக்கில் அமெரிக்காவின் செயல்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்பதற்காக இஸ்ரேல், சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகளுக்குத் தொடர்ந்து நிதியுதவி அளி த்து சர்வதேச அரங்கில் ஆதரவாகச் செயற்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு மே மாதம் ட்ரம்பின் சவுதி பயணத்தின் போது, அந்த நாட்டுடன் $110 பில்லியன் மதிப்பிலான இராணுவ ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

சவுதி அரேபியா தலைமையிலான அரபு நாடுகள் கட்டார் மீது எண்ணற்ற தடைகளை விதித்தன. இதற்கு அமெரிக்க இராணுவம், அப்போது வெளியுறவுத் துறைச் செயலராக இரு ந்த ரெக்ஸ் டில்லர்சன் வருத்தம் தெரிவித்த போதும் ஜனாதிபதி ட்ரம்ப் வரவேற்று சவுதிக்கு ஆதரவு தெரிவித்தார்.

அண்மையில் மிகப்பெரிய அளவில் சர்ச்சையைக் கிளப்பியது சவுதி பத்திரிகையாளர் ஜமால் கஷோக்கியின் படுகொலை. ஜமால் கஷோக்கி காணாமல் போனதாகச் செய்தி வரத் தொடங்கிய போது, சவுதி தன்னுடைய பங்கு எதுவும் இல்லை என மறுத்து வந்தது. சர்வதேச அளவில் அழுத்தம் அதிகமானதால் துருக்கியில் உள்ள சவுதி தூதரகத்தில் ஜமால் கஷோக்கி கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டதைச் சவுதி இறுதியாக ஒப்புக்கொண்டது. இந்தக் கொலைக்கு சவுதி இளவரசர் முகமது பின் சல்மானே நேரடியாகக் உத்தரவிட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டு வந்தது. அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. கூட இளவரசர்



சல்மான் தான் கஷோக்கியின் கொலைக்கு உத்தரவிட்டார் என்று தெரிவித்த போதிலும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சவுதிக்கு ஆதரவாகவும் இளவரசர் சல்மானைப் புகழ்ந்தும் பேசி வருகிறார். இத்தகைய சூழலில் சவுதி முன்னின்று நடத்தக்கூடிய ஏமன் போரில், அமெரிக்கா பின்வாங்கும் என்பது உறுதியற்ற நம்பிக்கையாகத்தான் உள்ளது. தற்போது அமெரிக்க செனட் அவையில் நிறைவேற்றப்பட் டுள்ள தீர்மானத் தைப் போன்று, கடந்த மார்ச் மாதமும் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டது. தற்போது ஆளும்கட்சி பெரும்பான் மையாக உள்ள செனட் அவையில் உறுப்பினர்களின் ஆதர வோடு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கு ஜமால் கஷோக்கியின் படுகொலை யும் அதற்கு ட்ரம்பின் எதிர்வி னையும்தான் முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

இந்தத் தீர்மானத்தை கொண்டு வரு வதில் செனட் சபையின் உறுப்பினர் பெர்னி சாண்டர்ஸ் மிக முக்கிய பங்காற்றினார். அதற்கு மிகப்பெரிய அளவில் வரவேற்பு கிடைத்தது. அமெரிக்கக் குடிமக்களின் சார்பாக, சாண்டர்ஸ்"க்கு எழுதப்பட்ட திறந்த மடல் ஒன்று இணையத்தில் உலவ ஆரம் பித்தது. இராணுவத்திற்காகச் செலவிடுவதை குறைக்க வேண்டும் என அமெரிக்க மக்களும் விரும்புகின்றனர். அண்மையில் வந்த கருத் துக்கணிப்புகள் சில 'உலக நாடுகளில் உள்ள பெரும்பான்மையானவர்கள், அமெரிக்காவை உலக அமைதிக்கு அச்சுறுத்தலாகக் கருதுவ தாக தெரிவித்துள்ளது' உலகம் முழுவதும் இராணுவத்துக்காக அமெரிக்கா செலவு செய்ததில் சிறு துளியை மருத்துவம், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளுக்காக (இராணுவச் செலவுகளில் சிறு அளவே இதற்குப் போதுமானதாக இருந் திருக்கும்) செய்திருந்தால் கூட இத்தகைய வெறுப்பைச் சம்பாதித்திருக்க வேண்டிய தேவை இருந்திருக்காது"

அமெரிக்க அரசியலமைப்பின்படி, எந்தவொரு நாட்டின் மீதும் போர் தொடுக்க வேண்டும் அல்லது ஊடுருவல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் அதற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் அவசியம். ஏமன் போரில் ஈடுபடுவதற்கு அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்கவில்லை. இந்தத் தீர்மானம் உடனடியாக அமெரிக்க அரசின் தலையீட்டை நிறுத்தாது என்ற போதிலும் ஒரு சிறிய அளவிலான சலனத்தை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது.

வியட்நாம் யுத்தத்துக்கு அமெரிக்காவில் மிகப் பெரியளவில் எதிர்ப்பு உருவானதும், முகம்மது அலி உள்ளிட்டோர் வெளிப்படையாகவே இராணுவ சேவையில் ஈடுபட முடியாது என அறிவித்ததும் அமெரிக்க சிவில் சமூகத்தில் மிகப்பெரிய எழுச்சியை ஏற்படுத்தியது.

அமெரிக்கா, வியட்நாமிலிருந்து பின்வாங்கியதில் அது பிரதான காரணமாக இல்லையென்றாலும் அத்தகைய ஒரு எழுச்சி மிக முக்கிய பங்காற்றியது. அமெரிக்காவில் அகதிகளின் குழந்தைகளை அவர்களின் பெற்றோர்களிடமிருந்து பிரித்து தடுப்புச் சிறைச் சாலைகளில் அடைக்க அண்மையில் ட்ரம்ப் அரசு உத்தரவிட்டிருந்தது. இது அமெரிக்கர்களிடையே மிகப்பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியது. சிவில் சமூகத்தின் அழுத்தம் காரணமாக, ட்ரம்ப் அரசு அந்த உத்தரவைத் திரும்பப்பெற்றது. அத்தகைய விளைவை இந்தத் தீர்மானம் ஏற்படுத்துமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

முன்னாள் ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அனான், 2004ஆம் ஆண்டு ஈராக்கில் அமெரிக்கா ஊடுருவியதைக் கண்டித்துப் பேசியபோது.

"ஈராக் மீதான அமெரிக்காவின் போர் சட்டவிரோதமானது" எனக் குறிப்பிட்டிருந்தார். ஈரானின் ஆதிக்கத்தைத் தடுப் பதற்காகவே அமெரிக்கா மத்திய கிழக்கில் அமைதி யற்ற சூழலை நிலைத்திருக்கச் செய்து கொண்டிருப் பதாக ஒரு குற்றச்சாட்டு பரவலாக வைக்கப்படுகிறது.

எந்தவொரு ஏகாதிபத்திய நாடுக ளுமே மோதிக் கொள்ளத் தேர்ந்தெடுப்பது மூன்றாம் உலக நாடுகளைத் தான். அதைத்தான் நாம் சிரியாவி லும் பார்க்க முடிகிறது. அதிகாரப் பரவலாக்கம், பிராந் திய ஆதிக்கம் என்ப தைத் தாண்டியும் இதில் அந்த நாடுகளின் வர்த்தக நலன்களும் இலாபங் களுமே பிரதானமாக இருப்பது தவிர்க்க முடியாத உண்மை.

# பலவீனமான பாஸ்வேட்

ஹேக்கிங் தொடர்பான சம்பவங்கள் எப்போது எங்கே நடந்தாலும், அதில் முக்கியமான இரண்டு விடயங்களை நாம் கவனிக்கலாம். ஒன்று, ஹேக்கிங் செய்யப்பட்ட நெட்வேர்க்குடன் தொடர்புடையவர்கள் அல்லது கணனியின் உரிமையாளர்கள் யாரையேனும் ஏமாற்றி, அதை ஹேக் செய்திருப்பார்கள் அல்லது அந்த நெட்வேர்க் சம்பந்தப்பட்ட பாஸ்வேர்டைத் திருடியிருப்பார்கள். எவ்வளவு பெரிய ஹேக்கிங் சம்பவங்கள் என்றாலும், இந்த இரண்டில் ஒன்று நிச்சயம் நடந்திருக்கும்.

இதில் முதல் விடயத்தில் கவனமாக இருப்பதற்கு விழிப்புஉணர்வும், எச்சரிக்கை உணர்வும் தான் முக்கியம். அதே இரண்டாவது விடயத்திற்குடும். இதற்காக அந்த ஆண்டில் இணையத்தில் லீக் ஆன 50 மில்லியனுக்கும் மேலான பாஸ்வேர்டுகள் அலசி ஆராயப்படும். அப்படி ஆராயப்பட்டு, இந்த வருடமும் டொப் 100 பலவீனமான பாஸ்வேர்டுகளின் பட்டியல் வெளியாகியிருக்கிறது. அதில் முதலிடம் எதற்குத் தெரியுமா? 123456. ஆம், இந்த 6 எண்கள் தான் இன்னும் பலபேரால் தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது. இதற்கடுத்த இடத்தைப் பிடித்திருப்பது password. இந்தப் பட்டியலில் 'sunshine', 'donald' போன்ற சில புதிய பாஸ்வேர்டுகளும் இணைந்திருக்கின்றன.

டொப் 10 பலவீனமான பாஸ்வேர்டுகள் பட்டியல் இதோ.

123456, password, 123456789, 12345678, 12345, 111111, 1234567, sunshine, qwerty, iloveyou.




இன்னும் எளிது; நாம் அன்றாடம் பயன்படுத்தும் பாஸ்வேர்டுகளைப் பாதுகாப்பானதாக வைத்திருந்தாலே போதும் ஆனால், அதைப் பெரும்பாலானோர் செய்வதில்லை. அதை நிரூபிக்கும் வகையில் வெளியாகியிருக்கிறது SplashData எனும் நிறுவனத்தின் தரவுகள்.

ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும், அந்த ஆண்டில் அதிகம் பயன்படுத்தப்பட்ட பலவீனமான பாஸ்வேர்டுகள் குறித்த தொகுப்பை இந்நிறுவனம் வெளியி

இந்த கடவுச்சொற்களை ஏதேனும் அக்கவுண்ட்களுக்கு நீங்களும் வைத்திருந்தால், கண்டிப்பாக மாற்றிவிடுங்கள். இதே போல ஒரே பாஸ்வேர்டை அனைத்து கணக்குகளுக்கும் வைத்திருந்தாலும் அவற்றை மாற்றி விடுங்கள். இதுபோன்ற எளிதான பாஸ்வேர்டுகள், நம் தகவல்கள் களவுபோவதை எளிமையாக்கி விடும். உஷார் மக்களே!



"என் மனைவிக்குக் கோபம் வந்தா அவ அம்மா வீட்டுக்குப் போயிடுவா!"

"நீங்க என்ன பண்ணுவீங்க?"

"கோபம் வர்ற மாதிரி ஏதாவது பண்ணிகிட்டே இருப்பேன்!"




"ராத்திரி கொள்ளை அடிச்ச நகைக்கடைக்கு, ஏன் காலைல போயி மாட்டிக்கிட்டாய்?"

"சார்ஜ்ல போட்ட மொபைலை எடுக்கப் போனேன்!"

## இது நம்ம கதைகள்... 29

# வேள்விக் கடாய்



உலகின் முதல் விமான விபத்து 17.9.1908 அன்று இடம்பெற்றது. உலகின் முதல் விமானத்தை அறிமுகம் செய்தவர்களிலொருவராகிய ஓர்வில் றைட் தான் நவீன முறையில் மேம்படுத்திய விமானமொன்றைப் பரீட்சித்து பார்க்க முனைந்த போது அது விபத்திற்குள்ளாகியது. இதில் ஓர்வில் றைட் படுகாயமடைந்தார். அவருடன் கூடப் பயணித்த 26 வயது நிரம்பிய லெப்ரினனட் தோமஸ் செல்பிறிட்ஜ் உயிரிழந்தார். அந்த முதல் விபத்திலிருந்து இறுதியாக 29.10.2018 அன்று இந்தோனேசியாவில் நிகழ்ந்த 189 உயிர்களைக் காவு கொண்ட "லயன் எயார்" விபத்து வரையில் உலகில் 1918 விமான விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன. அதில் விமானத்தில் பயணித்த 29646 பேரும், தரையில் நின்ற 1216 பேரும் மாண்டனர்.

விமான விபத்துக்களுக்கு இயந்திரக் கோளாறு, மோசமான காலநிலை, விமானிகள் மற்றும் கட்டுப்பாட்டு நிலைய அலுவலர்களின் கவனயீனம், தாக்குதல்கள் ஆகியனவே பிரதான காரணங்களாக இருந்த போதிலும், சில விபத்துக்கள் அளவுக்கதிகமான பயணிகள் மற்றும் பொதிகளின் பாரத்தினாலும் நிகழ்ந்துள்ளன என்பது ஆச்சரியமான உண்மை.



18.5.2003 அன்று அமெரிக்காவின் சார்லேற் என்ற இடத்தில் நிகழ்ந்த "US எயார்வேஸ்" இன் விமான விபத்தில் 21 பேர் உயிரிழந்தனர். வழமையாக விமானம் சுமக்கும் எடையை விட அதிகமாக 500 கிலோ கிராம் எடையை அந்த விமானம் சுமந்து சென்றதாலேயே சமநிலை குழம்பி விபத்து ஏற்பட்டதாக அறிக்கைகள் சுட்டுகின்றன. இதுபோல் மேலும் இரு விபத்துக்கள் 2013, 2015 ஆகிய ஆண்டுகளில் நிகழ்ந்துள்ளன. விமானத்தில் அது சுமக்கக்கூடிய உச்ச எடையின் 84.8 விகிதத்தையே எடுத்துச் செல்ல வேண்டுமென்ற நியதியுள்ளது.

இவ்வாரக் கதை விமானப் பயணத்தைப் பற்றியதென்றாலும், அதன் மையம் பயணம் பற்றியதல்ல. மாறாக தம் சுமையை தாமே சுமக்காது பிறர் மீது பொறித்துவிடும் மனிதர்கள் பற்றியது.

அந்த விமானத்தில் 250 பயணிகளே பயணிக்க முடியும். அது மேலெழுந்து பயணிக்கத் தொடங்கியது. 30,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த போது தான் 253 பயணிகள் அதில் பயணிக்கின்றனர் என்ற விடயம் விமானிக்குப் புரிந்து. விமானத்தில் பரசூட் எதுவுமேயில்லை.

"அளவிற்கதிகமான பயணிகள் இவ்விமானத்தில் பயணிக் கிறார்கள். அதிகளவு பாரத்தால் விமானம் நிலைகுலைந்து கீழே விழப்போகிறது. எனவே சக 250 பயணிகளின் உயிர்களைக் காக்க யாராவது மூன்று பேர் விமானத்திலிருந்து கீழே குதிக்க வேண்டும். இது மிகப் பெரிய உயிர்த்தியாகம். முன்பின் தெரியாதவர்களுக்காக தம்முயிரைத் தியாகம் செய்வதென்பது அதனிலும் மேலானது" என்று அறிவித்தார் தலைமை விமானி. நேரம் கடக்கிறது. அச்சத்திலுறைந்து போகின்றனர் பயணிகள். தமக்காக யாராவது குதிப்பார்களா என்று ஆளை ஆள் பார்க்கின்றனர்.

திடீரென இங்கிலாந்து நாட்டுப் பயணி எழுகிறார். "எம் நாடு வரலாற்றுப் பெருமைமிக்கது. ஒரு காலத்தில் எம் நாட்டில் சூரியன் உதிப்பதுமில்லை, அஸ்தமிப்பதுமில்லை என்பார்கள். எங்கள் படைவீரர்களின்தியாகமேஎம்மை உலகின்முதன்மை நாடாக்கியது. என்நாட்டின்பெருமைக்காக நான்என்உயிரைத் தியாகம் செய்கிறேன்" என்று சொல்லிக் கொண்டு கீழே குதித்தார். விமானமே நிசப்தமானது. தமக்காக உயிர்த்தியாகம் செய்தவருக்காக எல்லோரும் எழுந்து மௌனமாக அஞ்சலித்தனர்.

தொடர்ந்து இந்திய நாட்டுப் பெண் பயணி எழுந்தார். "எங்கள் நாடும் தியாகத்தில் தோய்ந்த நாடு. ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் தம் தியாகத்தால் நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளனர். ராணி பத்மாவதியும் அவரது தோழிகளும் தம்மையே ஆகுதியாக்கி எதிரிக்கு பாடம் கற்பித்தனர். என் நாட்டின் பெருமைக்காக நானும் என்னுயிரைத் தியாகம் செய்கின்றேன். வந்தே மாதரம்" என்று சொல்லிக் கொஜண்டு குதித்தார். கண்ணீர் மல்க பயணிகள் அஞ்சலித்தனர்.

அதன்பின் யாரும் குதிக்க முன்வரவில்லை. விமானம் தள்ளாடியபடியே பறக்கிறது. "விமானம் சில நிமிடங்களில் விழப்போகிறது. அந்த 2 தியாகிகளின் தியாகமும் வீணாகிவிடும். எங்கள் உயிர்களும் ஒட்டுமொத்தமாக அழியப்போகிறது. யாராவது முன்வாருங்கள் " என்றார் விமானி பதறியபடியே.

அந்தக் கணமே நம்ம நாட்டுப் பயணி எழுந்தான். "எங்கள் நாடு சிறியது என்றாலும், தியாகத்தில் யாருக்கும் சளைத்ததல்ல. என் நாட்டின் பெருமைக்காக இதைச் செய்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே அந்த விமானத்தின் விமானியைத் தூக்கி கீழே போட்டான்.

**தலைவர்கள் எவ்வழியோ**
**தொண்டர்களும் அவ்வழியே**

**எப்.எக்ஸ்.அன்ரன்**



# ஓங்கும் கை... மூழ்கும் தாமரை!

மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், தெலுங்கானா, சத்தீஸ்கர், மிசோராம் ஆகிய ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகள், டிசெம்பர் 11 ஆம் திகதி அறிவிக்கப்பட்டன. இதில், பெரும்பாலான இடங்களில் 'கம்பாக்' கொடுத்திருக்கிறது காங்கிரஸ். மிசோராமில் அரியணை 'கை' நழுவியிருக்கிறது. தெலுங்கானாவில் பலமான எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது.

ஐந்து மாநிலங்களில் மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் முடிவுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. காரணம், இந்த மாநிலங்களில் பி.ஜே.பியும் காங்கிரசும் நேரடியாக மோதின. 200 தொகுதிகளைக் கொண்ட ராஜஸ்தானில் ஆரம்பத்தில் இழுபறியாக இருந்த நிலை பின்னர், காங்கிரஸ் கட்சிக்குச் சாதகமாக மாறியது.

நெருக்கிப் பிடித்து வெற்றியைத் தொட்டிருக்கிறது காங்கிரஸ். சென்ற முறை இமாலய வெற்றியடைந்த வசுந்தராவின் பரிவார், இம்முறை பரிதாபகரமாகத் தோற்றிருக்கிறது. அவரது அமைச்சர்கள் பலரே மண்ணைக் கவ்வியிருக்கிறார்கள். ராஜஸ்தான் தேர்தலில் 'வேலைவாய்ப்பின்மை' பெரியளவில் எதிரொலித்தது. அதை வசுந்தராவும் உணர்ந்திருந்தார். அதை சரிக்கட்ட முடியவில்லை. 'பெண் அரசியல்வாதி நான்' என்று பரிதாபமாக வாக்கு கேட்டதையும் மக்கள் நிராகரித்திருக்கிறார்கள்.

ராஜஸ்தானில் மூத்த தலைவர் அசோக் கெலாட்டும், இளம் தலைவர் சச்சின் பைலட்டும், 'பார்ட்னர்ஷிப்' அமைத்து, காங்கிரசை அரியணை ஏற்றியிருக்கிறார்கள். குறிப்பாக இருவரும் சீனியர் - ஜுனியர் என்று ஈகோ இல்லாமல் செயற்பட்டது 'கை' மேல் பலன் தந்திருக்கிறது. தவிர, புள்ளிவிபரக் கணக்குடன் ராஜஸ்தானில் தேர்தலை அணுகியது காங்கிரஸ். இரண்டு இலட்சம் பேரிடம் பரிந்துரைகளைப் பெற்று, தேர்தல் அறிக்கையைத் தயாரித்தார்கள். 'ஆட்சிக்கு வந்தால் பத்து நாட்களில் விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்வோம்' என்று வாக்குறுதி தந்ததும் வெற்றிக்கு உதவியிருக்கிறது.

காவிக்கொடி பறந்த தலையாய மாநிலம் மத்தியப் பிரதேசம். 230 இடங்கள் கொண்ட பெரிய மாநிலமும்கூட. அங்கே மூன்று முறை கோலோச்சிய சக்கரவர்த்தி சவுகானை மிரட்டியிருக்கிறது காங்கிரஸ். ஆனால், முற்றிலும் விரட்ட முடியவில்லை. இங்கு 'மாற்றம்' என்ற சொல்லையே தேர்தல் மந்திரமாக முன்வைத்தது காங்கிரஸ். தனிப்பெரும் தலைவர்கள் இல்லாததால், ஆட்சியின் மீதான அதிருப்தி அலையை பெரியளவில் நம்பியது காங்கிரஸ். எனவேதான் கடந்த தேர்தலை விட அதிகத் தொகுதிகளை காங்கிரஸ் பிடிக்க முடிந்தது. சவுகான் அரசின் நிர்வாகச் சீர்கேடுகள், ஊழல்கள், முறைகேடுகள் ஆகியவற்றைத் தொகுத்து, 'குற்றப் பத்திரிகை' என்ற ஒன்றை காங்கிரஸ் வெளியிட்டது. தேர்தல் பாணிகளில் இது புதுசு.

விவசாய மாநிலம் என்பதை உணர்ந்து, விவசாயிகளை- மையப்படுத்தித் தேர்தல் அறிக்கையில் பல அம்சங்களைச் சேர்த்தார்கள். அதில், 'விவசாயிகளின் மகள்களின் திருமணத்துக்கு, 51,000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும்' என்ற அறிவிப்பு, பெண்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியது. 'யுவ ஆயோக்' (இளைஞர் ஆணையம்) அமைப்போம், தொழிற்றுறைகளில் பணிபுரியும் இளைஞர்களுக்கு 10,000 ரூபாய் ஊதிய மானியம் அளிப்போம்' போன்ற வாக்குறுதிகள், இளைஞர்களை ஈர்த்தன.

ராகுல் காந்தியின் கோயில் அரசியலும் மத்தியப் பிரதேசத்தில், காங்கிரசுக்கு உதவியிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். 'இந்துத்துவா சரியா, தவறா என்பதைவிட, அது பலனளிக்குமா? பலனளிக்காதா? என்ற ரீதியில் அணுகினார் ராகுல். இது, 'ராகுல் ஓர் இந்து. கோயில்களுக்குச் செல்பவர். இந்துக்களைப் புறக்கணிப்பவர் அல்ல' என்ற பிம்பத்தை காங்கிரஸ் ஏற்படுத்தியது. இந்தக் கட்டுரை எழுதப்படும் வரை மத்தியப் பிரதேசத்தில் பி.ஜே.பி. காங்கிரஸ் இடையே இழுபறி நீடித்தது. இங்கு ஆட்சியமைப்பதில் வெற்றி பெற்ற சுயேட்சைகள் கை ஓங்கக் கூடும்.

சத்தீஸ்கரிலும் காங்கிரசுக்கு இந்துத்துவா ஆயுதம் கைகொடுத்திருக்கிறது. 'இந்துத்துவா' கைப்பிடியில்லாத கத்தி என்பதை உணர்ந்து, கச்சிதமாகக் கையாண்டது காங்கிரஸ். 'இந்து வாக்குகளையும் பெற வேண்டும் சிறுபான்மையினர் வாக்கையும் விட்டுவிடக் கூடாது' என்பதில் கவனமாக இருந்தார்கள். இலவசத் திட்டங்கள் எதுவும் இங்கே மூன்று முறை முதல்வராக இருந்த ராமன் சிங்கைக் காப்பாற்றவில்லை. ஆனாலும், காங்கிரஸின் மதச்சார்பின்மை கொள்கைக்கு இது சரியல்ல, மிஸ்டர் ராகுல்!

தெலுங்கானாவில், சந்திரசேகர் ராவ் மீண்டும் வெற்றி பெற்றிருக்கிறார். காங்கிரஸ் – தெலுங்கு தேசம் கூட்டணியின் பருப்பு, ராவிடம் வேகவில்லை. 'மாநிலத்தைப் பெற்றுத் தந்தவர்' இமேஜ், இம்முறையும் காப்பாற்றியிருக்கிறது. 'காங்கிரஸ் - தெலுங்கு தேசம்' கூட்டணியை, மிகக் கச்சிதமாகப் பயன்படுத்திக் கொண்டார் ராவ். 'தெலுங்கானாவுக்கு எதிராகச் செயற்படுபவர், சந்திரபாபு. அவருடன் கூட்டணி அமைத்திருக்கிறது காங்கிரஸ். இது தெலுங்கானா மக்களுக்குச் செய்த துரோகம்' என்று முழங்கினார். ஒருவகையில் இது வெறுப்பரசியல்தான். ஆனால், அதுவே அவரை அங்கு காப்பாற்றியிருக்கிறது. ஆனால், ராவ் ஆந்திர வெறுப்பைத் தொடர்ந்தார் என்றால் அது ஆரோக்கியமானது அல்ல் ஒரு தாய் பிள்ளைகளான இரு மாநில மக்களுக்குமே ஆபத்து. தெலுங்கு அரசியல் களம், பிம்ப அரசியலைப் பிரதானமாகக் கொண்டது. என்.டி.ஆர்., ராஜசேகர் ரெட்டி என்று ஆளுமைகளைப் பார்த்துப் பார்த்து வாக்களிப்பவர்கள் அவர்கள். ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் பாணியில் முதல்வர் வேட்பாளர் என்ற முகம் இல்லாமல், இங்கு களமிறங்கியது காங்கிரசைக் கவிழ்த்துவிட்டது.

மிசோரமில் ஆட்சியைப் பறிகொடுத்திருக்கிறது காங்கிரஸ். பழங்குடியினரின் வாக்குகளைச் சிந்தாமல் பெற்று, மாநிலக் கட்சியான 'மிசோ தேசிய முன்னணி' ஆட்சியைப் பிடித்திருக்கிறது. முதல்வர் லால் தன்வாலாவை பெரிதும் நம்பினார் ராகுல். ஆனால், ஆட்சியின் மீதான அதிருப்தியை உடைக்க முடியவில்லை. ஆட்சி ஆரம்பித்த சில மாதங்களில், மாநில வருவாயை அதிகரிப்பதற்காக, மதுவிலக்கை இரத்து செய்தார் தன்வாலா. அதுவே அவரை கவிழ்த்துவிட்டது. 'மதுக்கடைகளைத் திறந்து, மாநிலத்தைச் சீர்குலைய வைத்துவிட்டார் தன்வாலா. நாங்கள் ஆட்சிக்கு வந்தால், மதுவிலக்கைக் கொண்டுவருவோம்' என்று எதிர்க்கட்சியினர் முழங்கினார்கள். அதுவும் அவர்களின் வெற்றிக்கு உதவியிருக்கிறது.

ஐந்து மாநிலத் தேர்தல்களையும் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கான 'அரையிறுதி ஆட்டம்' என்கிறார்கள் அரசியல் பார்வையாளர்கள். கடந்த 2013ஆம் ஆண்டு சில மாநிலத் தேர்தல்களில் கிடைத்த முடிவுகள், அப்படியே 2014 நாடாளுமன்றத் தேர்தலிலும் எதிரொலித்தன. தற்போது முடிவுகள் வெளியாகியிருக்கும் ஐந்து மாநிலங்களில் 83 நாடாளுமன்றத் தொகுதிகள் இருக்கின்றன என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். அமித் ஷாவின் கோட்டையின்மீது, முதல் வாக்கைப் போட்டிருக்கிறது காங்கிரஸ். சங்பரிவாரங்களை காங்கிரசின் காரியகர்த்தாக்கள் முறியடித்திருக்கிறார்கள். தவிர, காங்கிரஸ் தலைவராக ராகுல் பதவி ஏற்றதும் பெற்றிருக்கும் முதல் பெரிய வெற்றி இது. குஜராத்தில் சொற்ப எண்ணிக்கையில் ஆட்சியமைக்க முடியாமல் போன காயங்களுக்கான மருந்தும்கூட. கர்நாடகத்திலும் காங்கிரஸால் கூட்டணி ஆட்சியே அமைக்க முடிந்தது. ஆனால், இப்போது லாபக்கணக்கை தொடங்கியிருக்கிறது காங்கிரஸ். அதன்படி வரும் நாடாளுமன்றத் தேர்தல் ஆட்டத்தில் காங்கிரசுக்கு இது ஏறுமுகமே!


**ராகுல் VS மோடி...**

ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகளை முன்வைத்து, 'மோடி அலையை ராகுல் சுனாமி விழுங்கிவிட்டது' என்று கொண்டாடுகிறார்கள் காங்கிரஸ் ஆதரவாளர்கள். உண்மையிலேயே, பி.ஜே.பி-யின் பிரசாரப் பீரங்கியான மோடிக்கு, கடும் நெருக்கடி கொடுத்தார் ராகுல். மோடி மற்றும் ராகுல் காந்தியின் அனல் பறக்கும் பிரசாரப் பேச்சுகள்தான் தேர்தலின் ஹைலைட்டாக அமைந்தன. 'நக்சல் ஆதரவாளர் ராகுல்' என்று மோடி பந்து போட்டால், 'அம்பானி ஆதரவாளர் மோடி' என்று ராகுல் திருப்பியடித்தார். மாநிலப் பிரச்சினைகளைவிட தேசியப் பிரச்சினைகளைப் பிரதானப்படுத்தி பேசும் வகையில், பிரசாரக் கூட்டங்களை வடிவமைத்திருந்தார் ராகுல். 'விவசாயிகளை வதைக்கிறார்கள், வியாபாரிகளைச் சிதைக்கிறார்கள்' என்று முழங்கினார். பண மதிப்பிழப்பு, ஜிஎஸ்டி பாதிப்புகளை எல்லாக் கூட்டங்களிலுமே குறிப்பிட்டார். இந்துத்துவா அரசியலில், தேவைக்கேற்ப தொட்டும் தொடாமலும் நடந்துகொண்டார்.

நரேந்திர மோடியைத் திருப்புமுனை பிரசாரகர் என்பார்கள். ஆனால், இந்த முறை அது பலன் அளிக்கவில்லை. தவிர, அவரிடம் பேசுவதற்கு இந்துத்துவாவைத் தவிரப் புதிதாக எதுவுமில்லை அல்லது சொல்லும்படியாக அவர் எதுவும் செய்யவில்லை. எல்லாவற்றையும் விட இந்த முறை நரேந்திர மோடி பி.ஜே.பி-யின் ஒற்றை முகமாக முன்னிறுத்தப்படவில்லை. அவர் பிரசாரகராக மட்டுமே செயற் பட்டார். அதுதான் பி.ஜே.பி என்பதையும் மோடி புரிந்துகொள்ள வேண்டும்.

**ஜுனியர் விகடன்**

# திரும்ப வந்து தெறிக்கவிட்ட டி வில்லியர்ஸ்






இந்தியாவில் சச்சின், கங்குலி, கோலி, டோனி, ரோஹித் ஷர்மா ஆகியோருக்கு எதிராக இருக்கும் சில ரசிகர்களை கூட காணமுடியும். ஆனால், டிராவிட் மற்றும் டி வில்லியர்ஸ் போன்ற வீரர்களை வெறுக்கும் கிரிக்கெட் ரசிகர்களை பார்ப்பது மிகவும் அரிது. அந்தளவுக்கு தன்னுடைய ஆட்டம், செயற்பாடு, மனிதாபிமானம் மூலம் உலகம் முழுவதும் ரசிகர் பட்டாளம் வைத்துள்ளார் டி வில்லி யர்ஸ்.

இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல். போட்டிகளை போன்று தென்னாபிரிக்காவில் மசான்ஸி சுப்பர் லீக் தொடர் நவம்பர் மாதம் முதல் நடைபெற்று வருகிறது. இதில் 6 அணிகள் பங்கேற்று வருகின்றன. கெயில், பிராவோ, ரஷித் கான் உள்ளிட்ட வெளிநாட்டு வீரர்களும் இந்த லீக்கில் பங்கேற்றனர். இந்த தொடரின் பயிற்சி ஆட்டத்தில் 31 பந்துகளில் 93 ஓட்டங்கள் விளாசி தன் கம்பேக்கை காட்டினார் 34 வயதான டி வில்லியர்ஸ். ஸ்ட்ரைக் ரேட் 300.

இந்த நிலையில் கடைசி லீக் ஆட்டத்தில் மீண்டும் ஒரு அதிரடியை காட்டினார் டி வில்லியர்ஸ். 52 பந்துகளில் 93*. 11 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள். இந்த தொடரில் 14 சிக்ஸர்கள் உட்பட 282 ஓட்டங்கள் குவித்தார். ஸ்ட்ரைக் ரேட் 162. ஷ்வேன் ஸ்பார்டன்ஸ் அணிக்கு இவர் ஆடினார். 30 பந்துகளில் 59, 21 பந்துகளில் 39, 18 பந்துகளில் 32 என இந்த தொடரில் சில போட்டிகளில் பட்டையை கிளப்பினார்.

இந்த தொடரில் பங்குபெற்றதை நான் மிகவும் பெருமையாக கருதுகிறேன். கிரிக்கெட்டின் தரம் இந்த மசான்ஸி சுப்பர் லீக்கில் மிகச்சிறந்ததாக இருந்தது.

இளம் வீரர்கள் ஆச்சரியம் தரும் வகையில் விளையாடினார்கள். அடுத்த வருடம் மீண்டும் வருவேன். கேப்டவுன் அணி மிகவும் வலுவான அணியாக உள்ளது. மேலும் அவர்களது சொந்த மைதானத்தில் இறுதிப் போட்டியில் விளையாடுவார்கள். லீக்கை வெல்ல கேப்டவுன் அணிக்கு வாய்ப்புகள் அதிகம்.என்று டி வில்லியர்ஸ் தென்னாபிரிக்காவின் லோக்கல் லீக் பற்றி கூறினார்.



ஜெய்ப்பூரில் டிசம்பர் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் 2019 ஐ.பி.எல். வீரர்கள் ஏலத்தில் 26 தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்கள் போட்டியில் உள்ளனர். மசான்ஸி சுப்பர் லீக்கில் கேப்டவுன் பிளிட்ஸ் அணிக்கு விளையாடிய அன்ரிச் நொர்டே மற்றும் ஜேன்மேன் மலன், ஜோசி நட்சத்திரங்கள் அணியின் ரியான் ரிலெல்டன் மற்றும் டைட் பில்ஜோன், ஷ்வேன் ஸ்பார்டன்ஸ் அணியின் லுடோ சிபம்பா உள்ளிட்ட பல புதிய முகங்கள் ஏலத்தில் பங்குபெற உள்ளனர். தென்னாபிரிக்கா துடுப்பாட்டவீரர் காலின் இங்க்ராமின் அடிப்படை ஏலத் தொகை ரூபாய் 200 லட்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐபிஎல், உலகின் மிகப்பெரிய இருபது-20 போட்டியாக உள்ளது. ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரில் உள்ள விராட் கோலி மற்றும் மீதமுள்ள என் அணி வீரர்களுடன் மீண்டும் சேர்ந்து விளையாட ஆவலாக உள்ளேன். 2018-ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஏமாற்றத்தை அழிக்க நாங்கள் கடுமையாக உழைக்க வேண்டும். என்று ஐ.பி.எல். போட்டிகள் குறித்து தனது ஆர்வத்தை நவம்பர் மாதம் கூறியிருந்தார் டி வில்லியர்ஸ்.


தென்னாபிரிக்க வீரர் டி வில்லியர்ஸ் இதுவரை ஐ.பி.எல்.இல் 141 போட்டிகளில் விளையாடியுள்ளார். 3,953 ஓட்டங்கள் எடுத்துள்ளார். துடுப்பாட்ட சராசரி 39.53. ஸ்ட்ரைக் ரேட் 150. அவரது ஐ.பி.எல். வாழ்க்கையில் மூன்று சதங்களும் 28 அரை சதங்களும் அடங்கும். அடுத்த வருடம் நடக்கும் ஐ.பி.எல். தொடரில் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது நடைபெற்று வரும் இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா தொடர் பற்றி தொடருக்கு முன்பு “தொடர் மிகவும் சவாலானது. ஆனால் அவுஸ்திரேலியாவில் வெல்லும் திறமை இந்தியாவிடம் உள்ளது. நல்ல வாய்ப்பு இந்திய அணிக்கு உள்ளது.

தென்னாபிரிக்கா சுற்றுப் பயணத்தின் போது இந்திய அணி சிறப்பாக விளையாடியது. அணியின் பாஸ்ட் பவுலர்கள் அனைவரும் காயம் பிரச்சனை இல்லாமல் இருந்தால், இந்திய அணிக்கு மிகச்சிறந்த வாய்ப்பு. உலகின் தலைசிறந்த பந்துவீச்சு இணைகளை பெற்றுள்ள அணிகளில் இந்தியாவும் ஒன்று. முதல் டெஸ்ட் போட்டி மிகவும் முக்கியமான ஒன்று.” என்று கூறியிருந்தார். இந்த நிலையில் இந்திய அணி முதல் டெஸ்ட் போட்டியை வென்றுள்ளது. எனவே இந்த தொடரை வெல்ல இந்திய அணிக்கு வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக கருதப்படுகிறது.

இந்த வருடம் மே மாதம் தான் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து ரசிகர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கினார். உண்மையை சொல்லப்போனால் மிகவும் களைத்து விட்டதாகவும், இனிமேல் லோக்கல் இருபது-20 போட்டிகளில் மட்டுமே பங்குபெறப் போவதாகவும் கூறினார். “நான் நீண்ட காலமாக யோசித்தேன், டிசன்ட் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கும்போதே ஓய்வு பெற விரும்புகிறேன்.

இந்தியாவிற்கும் அவுஸ்திரேலியாவிற்கும் எதிரான அற்புதமான தொடர் வெற்றிக்குப் பிறகு, இது ஓய்வு பெற சரியான நேரம் என்று உணருகிறேன். என்று தன் ஓய்வு முடிவை அறிவித்திருந்தார். இவர் இந்தியன் பிரிமியர் லீக் மற்றும் பாகிஸ்தான் சுப்பர் லீக் உள்ளிட்ட லோக்கல் இருபது-20 தொடர களில் விளையாட உள்ளது அவரது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (மு)




# ஆர் கொலோ சதுரர்

அன்பார்ந்த சங்குநாத வாசகர்களே உங்களுக்கு ஜிம்மிக்குட்டியின் இனிய ஞாயிறு வணக்கம் உரித்தாகட்டும். புனிதமான மார்கழி மாதம் இண்டைக்குப் பிறக்குது. மாதங்களில் சிறந்த மாதமாகக் கவிஞர்கள் பாடியிருக்கிறார்கள். அடைமழையும் இடி மின்னலும் ஊதல் காற்றும் திடுதிப்பென்று வந்து நிக்கிறதாலை நோய் நொடியும் கூடவே வந்து சேர மரணங்கள் றோட்டுக்கு றோட்டு வீதிக்கு வீதி என்று மரணங்கள் தொடர்கதையாக் கிடக்கு. இதனாலை தான் போலை பீடை நிறைஞ்ச மாதமாக மார்கழியை வர்ணிப்பதும் உண்டு. எது எப்பிடி இருந்தாலும் மார்கழி மாதத்தின்ரை புனிதம் எந்த மாதத்திற்கும் வராதுதான். வாசல் தெளிச்சு சாணத்தினாலை மெழுகி மாக்கோலம் போட்டு பிள்ளையாரைப் பிடித்து வைச்சு பூசினிப் பூவை சொருகி வைச்சு மாதம் முடிய முழுப்பிள்ளையாரையும் பூசகர் கடலிலை கரைச்சுப்போட்டு பெரியவர் எட்டிப் பார்க்கிறார். ஏதாவது போட்டிக்குப் பேச்சுப் பழகப் பிள்ளையள் வருவினம்.

இப்ப எல்லாம் விளங்கிப் படிக்கிறது குறைவாம். பாடமாக்கிப் போட்டு அப்பிடியே சோதினைப் பேப்பரிலை வாந்தி எடுக்கிறது தானாம். வாழ்க்கைக்குப் படிக்கிறது கிடையாதாம். பெரிய பெரிய தத்துவங்களையெல்லாம் மேடையிலை ஏறித் தொண்டை கிழியக் கத்திப்போட்டு உபதேசம் ஊருக்குத்தான் எண்ட மாதிரி மனம்போன போக்கிலை வாழுகினமாம். இதென்ன கொடுமையாக் கிடைக்கு. பொறுங்கோ பொறுங்கோ பெரியவர் பக்தியோட திருவாசகம் பாடுறார். அடிக்கடி பாடுற பாட்டுத்தான். நானும் கேட்டுக்கேட்டுப் பாடமாக்கிக் போட்டன். பெரியவர் விளக்கம் சொல்லுறார் கேளுங்கோ...

"இறைவா நீ உன்னை எனக்குத் தந்து என்னை உனக்காகக் கொண்டு செய்த வியாபாரத்திலை உனக்கு லாபமேயில்லை. அற்புதமான சொத்தாகிய உன்னை அடைஞ்ச நான் எந்தளவு கொடுத்து வைச்சிருக்கிறன். என்னிலை ஒரு விசேடமும் இல்லை. அப்படிப்பட்ட என்னை நீ பெற்றுக் கொண்டு எதை அடைந்தாய். ஆனால் நானோ எல்லையில்லாத ஆனந்தம் அடைந்து நிறைந்து வாழ்கிறேன். நீ என் உடலிடம் கொண்டதாலை உனக்கு என்னய்யா லாபம். இந்தக் கொடுக்கல்–வாங்கலில் யார் திறமையான அடைவைப் பெற்றவர்கள்? நீயா? நானா? யார் இதில் கெட்டிக்காரர். நீயா? நானா? அற்புதமானவனே உன்னால் நான் ஒளிர்கிறேன். இருளகற்றப்பட்ட உள்ளொளி நிறைந்த பிரகாசமான இதய அந்தரங்கம் எனக்கு உன்னால் கிடைத்திருக்கிறதே. இந்தக் கருணைக்கு எத்தனை பிறவி எடுத்தாலும் என்னால் கைம்மாறு செய்து கடன் தீர்க்க முடியாதே. என் னைக் கடன் காரனாக்கி விட்டு நீ மாறாத புன்னகையோடு என்னை ஆவலோடு பார்க்கின்ற காட்சியில் நான் பூரித்துப்போய் நிற்கிறேனே. உன்னைப் போற்றுவதும் பூசிப்பதும் வாழ்த்துவதும் வந்திப்பதும் தவிர எனக்கு வேறு என்னய்யா வேலை. இந்தப் பக்தி மார்க்கம் எத்தனை இனிமையானது. மனிதப் பிறவியில் மட்டுமே இதனை நாம் அனுபவிக்க முடியும். கிடைத்துள்ள இந்த அற்புத மானிடப்பிறவியில் நாம் இதனைக் கடைப்பிடிக்கா விட்டால் பின்பு எப்பிறப்பிலும் எமக்கு இந்த வாய்ப்புக் கிட்டவே கிட்டாது. உன்னருளாலே உன்னை வணங்கும் வாய்ப்பைத் தந்தவனும் நீயே. தந்து என்னை நீ பெற்றுக் கொண்டு என்னைப் புனிதப்படுத்தவே உடலிடம் கொண்டாய். நீயல்லவோ அளப்பரிய கருணை வள்ளல். அருமையான பாடல் இது. திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார். ஆற அமர இருந்து மனதை ஒரு நிலைப் படுத்திக்கொண்டு இதைப் படித்து அனுபவித்தால் தான் இதன் ஆழம் புரியும். ஆனந்தமும் புரியும். இதனை விளக்க வார்த்தைகள் போதாது...ம்..."

பெரியவர் கண்ணை மூடிக்கொண்டு ஏதோ பிரசங்கம் மாதிரிப் பாடிப் பொருள் சொல்லி அனுபவிச்சு அமைதி அடையும் காட்சி கண்கூடக் கலங்கி சால்வையாலை மெல்லத் துடைக்கிறார்–ஏழைக்குப் பொன் முடிச்சும் புதையலும் கிடைச்ச மாதிரி தன்னை மறந்து போயிருக்கும் அழகே தனிதான்.



தை மகளை ஆவலுடன் வரவேற்பார். சின்னப் பையன்கள் பிள்ளையார் தேரை இழுத்துச் செல்லும் அழகே தனிதான். பஜனை பாடிக்கொண்டு விடியக் காலை நாலு மணிக்கே ஊரெல்லாம் சென்று கடலை, மோதகம் என்று வகைவகையா உணவுப் பொருட்களும் சாப்பிட்டுக் கொண்டே பக்தி பரவசமாகி வலம் வரும் காட்சி அடுத்த வருசம் தான் வரும் எண்டு மனசை ஆத்திக்கொண்டு வாழ்க்கையை ஓட்டிச்செல்லுறதுதான். பழைய காலத்திலை பொம்பிளைப் பிள்ளையள் விடியற்காலையிலை எழும்பி நிலம் தெரியாத இருட்டு வேளையிலையே குடமும் தூக்கிக் கொண்டு பாவை நோன்பு இருக்க கடற்கரைக்கும் நீர்நிலைகளுக்கும் போவினம் எண்டு சொல்லுறவை. ஏன் தெரியுமோ? நல்ல கணவன் கிடைக்க வேணும் எண்டு நேர்த்திக் கடனாம். ம்...இப்ப ஆர் இப்பிடியெல்லாம் வழிபாடு செய்யினம். விடியக் காலையே ரியூசனுக்கு வெளிக்கிட்டுப் போறதுதான் பெரிய நேர்த்திக் கடனாக் கிடக்கு. சரிசரி ஆரோ வருகினம்.

ம்...சும்மா சொல்லக் கூடாது. நாயிற்கடையாய் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயாவான தத்துவனே எண்டு சும்மா வெறும் வார்த்தையிலை சொன்னது எண்டு நினைச்சியளே... கண்ணை மூடிக்கொண்டு மனசை ஒருநிலைப்படுத்திக் கொண்டு இறைவனை நினையுங்கோ. அபிஷேகம், ஆராதனை, தூபதீப அலங்காரத்தோடு சர்வாலங்காரமாக இறைவனைக் காணலாம். கண்டு மகிழலாம். பயிற்சி செய்தால் குடமுழுக்கைக்கூட நல்ல தெளிவாப் பார்த்து பரவசமடையலாம். மனசை தெளிவாக வைத்திருந்தால் போதும் சரி சரி நான் போட்டு வாறன்.

திருமதி.பாரதி கணேஷ்
சுன்னாகம்.

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : பறக்கும் பாவை
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஷ்வநாதன், ரி.ஆர்.ராமமூர்த்தி
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசிலா



கல்யாண நாள் பார்க்க சொல்லலாமா - நாம்
கையோடு கை சேர்த்து கொள்ளலாமா
கல்யாண நாள் பார்க்க சொல்லலாமா - நாம்
கையோடு கை சேர்த்து கொள்ளலாமா
செல்லாத இடம் நோக்கி செல்லலாமா
சிந்தாமல் சிதறாமல் அள்ளலாமா
கல்யாண நாள் பார்க்க சொல்லலாமா - நாம்
கையோடு கை சேர்த்து கொள்ளலாமா

வண்ணமணி மண்டபத்தில் துள்ளி விழுவோமா
அந்திரத்தில் கண்மயங்கி துள்ளி விழுவோமா
வண்ணமணி மண்டபத்தில் துள்ளி விழுவோமா
அந்திரத்தில் கண்மயங்கி துள்ளி விழுவோமா
சொன்னவர்கள் சொன்னபடி அள்ளி வருவோமா
தொட்டு வரும் தென்றலுக்கு தூது விடுவோமா

கல்யாண நாள் பார்க்க சொல்லலாமா - நாம்
கையோடு கை சேர்த்து கொள்ளலாமா
செல்லாத இடம் நோக்கி செல்லலாமா
சிந்தாமல் சிதறாமல் அள்ளலாமா
கல்யாண நாள் பார்க்க சொல்லலாமா - நாம்
கையோடு கை சேர்த்து கொள்ளலாமா

கண்ணாடி பார்த்தபடி கதை படிப்போமா
பொன்னான வண்ணங்களில் படம் வரைவோமா
கண்ணாடி பார்த்தபடி கதை படிப்போமா
பொன்னான வண்ணங்களில் படம் வரைவோமா
நடந்ததை நினைத்தபடி ரசித்திருப்போமா
நாளை இன்னும் அதிகமென்று பிரிந்திருப்போமா

கல்யாண நாள் பார்க்க சொல்லலாமா - நாம்
கையோடு கை சேர்த்து கொள்ளலாமா

சந்திரனை தேடிச் சென்று குடியிருப்போமா
தமிழுக்கு சேதி சொல்லி அழைத்துக்கொள்வோமா
சந்திரனை தேடிச் சென்று குடியிருப்போமா
தமிழுக்கு சேதி சொல்லி அழைத்துக்கொள்வோமா
அந்தி பட்டு வானத்திலே வலம் வருவோமா
அங்கும் ஒரு ராஜாங்கம் அமைத்திருப்போமா

கல்யாண நாள் பார்க்க சொல்லலாமா - நாம்
கையோடு கை சேர்த்து கொள்ளலாமா
செல்லாத இடம் நோக்கி செல்லலாமா
சிந்தாமல் சிதறாமல் அள்ளலாமா
கல்யாண நாள் பார்க்க சொல்லலாமா - நாம்
கையோடு கை சேர்த்து கொள்ளலாமா

# கண்ணீரில் கரைந்த ஓர் ஆண்டு

மண்ணில்
17
03
1939



விண்ணில்
27
12
2017

திருமதி

## அரியநாயகம் சேதுப்பிள்ளை

(உடுப்பிட்டி - யாழ்ப்பாணம்)

திதி : 16.12.2018

அம்மா என்ற சொல்லின் சூட்சுமம் நீ, குடும்பத்தலைவியாய் எங்கள் வழிகாட்டியாய் நீ இருந்தாய் அம்மா...
நாங்கள் எங்கே எப்படி வாழ்ந்தாலும் நீயே எங்கள் வாழ்வின் ஒளிவிளக்கு...
பாசத்தின் உறைவிடம் அம்மா நீ, நல்ல நேசத்தின் இருப்பிடமும் நீ, கருணையின் பிறப்பிடம் நீ,
எம்மை அன்பாய் ஆட்சி செய்தவள் நீ,
ஓராண்டு ஓடி ஒழிந்தது அம்மா, நித்தமும் உம் நினைவுகள் எம் மனதில் அம்மா...
ஆறுதல் கூற ஆயிரம் வார்த்தை இருந்தும் என்ன அம்மா, பரிவுடன் நீ காட்டிய அ்ன்பினை இனி
எவர்தான் எமக்கு கொடுப்பார் அம்மா...
உம் ஆத்மா சாந்தியடைய எம்மை என்றும் வழிநடத்த
அனுதினமும் இறையருள் வேண்டுகின்றோம்.

அன்னாரது ஆத்மசாந்தி பூஜையும், மதிய போசனமும் 16.12.2018 இன்று
உடுப்பிட்டி இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி
குடும்பத்தினர்

(6709)

# பெரும்பான்மையினரின் உரிமைகளை மட்டும் பாதுகாப்பது ஜனநாயகமல்ல



பெரும்பான்மை ஆதரவு, சிறுபா ன்மை ஆதரவு என்ற சொற்பதங்கள் இன்று காலம் கடந்தவை ஆகியுள் ளன. சர்வதேச சட்ட சொற்பதங்களின் பட்டியலில் இவை பெறுமதி இழந்த பதங்களாகவே கணிக்கப்படுகின்றன.

ஜனநாயகம் என்பது யாருக்காக? பெரும்பான்மையினருக்கா, இல்லை சிறுபான்மையினருக்கா? அல்லது இரண்டு தரப்பினருக்குமா என்று சர்வதேச சட்டவல்லுநர்கள் கேள்வி யெழுப்புகின்றனர்.

பெரும்பான்மை அதிகாரம் அல்லது பெரும்பான்மையினரின் உரிமை களை பாதுகாத்துக் கொண்டு சிறுபா ன்மையினரின் உரிமைகளை அப் பட்டமாக மீறுவது ஜனநாயகம் அல்ல.

பெரும்பான்மையினரின் உரிமைகளை பாது காப்பது என்பது சிறுபான்மையினரின் உரிமை களை மிதிப்பது அல்ல. சிறு தப்பபிப்பிராயத்துடன் கூடிய ஜனநாயகம் என் பது அனைவ ருக்குமான தாகும். அபிவிருத்தி, முன்னேற்றம், சமாதானம் மற்றும் நீதி ஆகியவை அனைவ ருக்கும் கிடைப்பதை உறுதி செய்வதே ஜனநாய கமாகும்.

ஜனநாயகம் என்ற பெயரிலும் அரசியலமைப்பு என்ற பதத்திலும் இலங்கை அண்மையில் எதிர்கொண்ட மோசமான விளைவுகளைப் பார்க்கும் போது பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருந்தும் ஒரு கட்சி வெறுமனே பார்வையாளரா கவே பாராளுமன்றத்தில் இருக்க வேண்டியிருந்தது.

அனைத்து ஆளும் கட்சிகளும் தேர்தல் வாக்குறுதி களுடன்தான் மக்களைச் சந்திக்கின்றன. அந்த தேர்தல் வாக்குறுதிகள் மக்களை மகிழ்ச் சியாகவும் சமாதானத்துடனும் வாழ வைக்கும் வகையில் அமைவதால் மக்கள் அக்கட்சிக்கு வாக்களிக்கின்றனர். ஜனநாயகத்தின் மீது மதிப்பு வைத்து மக்கள் இவ்வாறு அக்கட் சிக்கு வாக்களித்த போதும், குறிப்பிட்ட அக்கட்சி உறுப்பினர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதுடன் கட்சித் தாவல்களிலும் ஈடுபட்டு அக்கட்சிக்கு வாக்களித்த மக்களுக்கு துரோகம் செய்கின்றனர்.

மற்றொரு கட்சிக்கு மாறுவதற்கு அவர்களுக்கு கோடிக்கணக்கில் பணம் கிடைக்கிறது. அவர்கள் மகிழ்ச்சியில் திளைக்க, அவர்களுக்கு வாக்களித்த மக்களோ ஏமாந்து போகின்றனர். இப்படிப் பார்க்கும் போது பாராளு மன்றம் ஒரு அதியுயர் பீடம் என்று கூற முடியுமா? ஆனால் பாராளு மன்றம் ஒரு அதியுயர் பீடமாக அமை யலாம். அவ்வாறான சந்தர்ப்பத்தில் அது எவ்வாறு அமையும்?

பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனநாயக முறையில் தெரிவு செய் யப்பட்டு அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தம்மை தெரிவு செய்த மக்களின் உண்மையான அபிலா ஷைகளின்படி நடந்து கொள்வார்க ளேயானால் பாராளுமன்றம் அதியு யர் பீடமாக அமையும் என்று கூற லாம்.

நாட்டின் பொருளாதாரம், கலாசாரம் மற்றும் விஞ்ஞானபூர்வ முன் னேற்றத்தை பாராளுமன்றம் சிறப்பாக நிர்வகிக்குமேயானால் அதனை அதியுயர் பீடம் என்று கூற முடியும்.

ஒட்டுமொத்தமாக மக்கள் பயன் பெறும் வகையிலான சட்டங்களை இயற்றி, சட்டத்தின் ஆட்சியை நீதித் துறையின் எந்தவொரு இடையீடும் இன்றி பேண முடிந்தால் பாராளுமன்றத்தை ஒரு அதியுயர் பீடம் என்று கூறலாம்.

பாரிய திட்டங்களின் போது ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோர் மற்றும் வங்கி செயற்பாடுகளின்போது மோசடி மற்றும் திருட்டுகளில் ஈடுபட்டு நாட் டின் பொருளாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துவோரை கைது செய்ய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதுடன் அவ் வாறு ஊழல் மோசடி மூலம் இழந்த சொத்தை மீளப் பெற பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்குமாயின் அதனை அதியுயர் பீடம் என்று கூறலாம்.

அப்பாவி மக்கள் வரியாகச் செலு த்தும் பணத்தை அதிக அளவு வீண் விரயம் செய்யாமல், செல்வச் செழிப்பு வாழ்க்கையை தவிர்த்து, சாதாரண வாழ்க்கையில் ஈடுபட பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வருவார்களாயின் பாராளுமன்றத்தை அதியுயர் பீடம் என்று கூறலாம்.

பெரும்பாலான ஆசிய நாடுகளில் தேர்தலில் தெரிவு செய்யப்படும் பாரா ளுமன்ற உறுப்பினர்கள் தமது கடமை களையும் பொறுப்புகளையும் மறந்து விடுகின்றனர். பொதுச் சொத்தை திருடுவதும், தங்கள் சொத்தை அதிக ரித்துக் கொள்ள முயற்சிப்பதும் அவர்களுக்கு முக்கியமாகி விடுகி ன்றன. பாரிய அபிவிருத்தித் திட்ட ங்களில் கிடைக்கும் கொமிஷன், பொதுச் சொத்துக்களை வெளிநாட்டின ருக்கு விற்பது, தேவையற்ற பொருட் களை இறக்குமதி செய்வது, அதன் மூலம் கொமிஷன் பணத்தை சேர்ப்பது பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகளாக மாறி விடுகின்றன.

ஜனநாயக ரீதியில் தெரிவு செய் யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களுக்கு சேவையாற்று வதை விட தமது குடும்பத்துக்கு சேவை யாற்றும் இந்த வழக்கம் எங்கள் நாட்டில் மட்டுமன்றி ஆசியாவின் பல நாடுகளிலும் உள்ளது. எனவே பாரா ளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் என்பது பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு அல்ல. அது நாட்டின் மக்க ளுக்காகவேயாகும் என்பதனை பாராளு மன்ற உறுப்பினர்கள் கருத்திற் கொள்ள வேண்டும். அதுமட்டுமன்றி அதன் பிரகாரம் செயற்படவும் வேண்டும். அதன் மூலமே அவர்கள் பாராளுமன் றத்தை அதியுயர் பீடமாக மாற்றலாம்.

மக்களுக்கு நன்மை ஏற்படாவிட் டால், அவர்களது அபிலாஷைகள் தவறாக பிரதிபலிக்கப்பட்டால், அவர்களது நம்பிக்கை சிதறடிக்கப்பட்டால், அவர்களது வாக்களிப்புத் தெரிவும் பிழையாக அமைந்து விட்டால், அவர்களை ஏமாற்றத்துக்குள்ளாக்கிய அந்த சட்டத்தை அவர்கள் முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

# கப்பலில் வருகைதரும் சுற்றுலாப் பயணிகள்

## கலகலப்பாகிறது கொழும்பு துறைமுகம்

அண்மைக் காலமாக உல்லாசப் பயணத்துறை விரைவாக வளர்ச்சி கண்டுள்ளது. விசேடமாக மூன்று தசாப்த கால யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கையில் ஏற்பட்ட அமைதியான சூழ்நிலை காரணமாக பல நாடுகளிலிருந்தும் உல்லாசப் பயணிகள் வரத் தொடங்கினர்.

கடந்த பல வருடங்களாகக் கிடைத்த மதிப்பீடுகளின்படி இரண்டு மில்லியனுக்கும் அதிகமான உல்லாசப் பயணிகள் (ஒரு வருடத்தில்) இந்நாட்டிற்கு வந்துள்ளதாகத் தெரிகிறது. இவ்விபரத்தை அறிக்கைகள் மூலம் அறிய முடிகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் 2017, 2018 மற்றும் 2019ம் ஆண்டுகள் உல்லாசப் பயண வருடங்களாக பெயரிடப்பட்டிருந்தன. அதேசமயம் வருட இறுதி வரையான காலப்பகுதியில் 25 இலட்சம் உல்லாசப் பயணிகள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு இலங்கைக்கு வருகை தந்துள்ள மற்றும் வருகை தரவிருக்கும் உல்லாசப் பயணிகளில் அநேகமானோர் விமானம் மூலமாகவே இங்கு வருகை தருகின்றனர். ஆனால் தற்போது கப்பலில் வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. தெற்காசியாவில் மட்டுமல்ல அனைத்து ஆசிய பிராந்தியத்



திலும் முதன்மையான துறைமுகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கொழும்புத் துறைமுகம் இலங்கையின் உல்லாசப் பயணத்துறை தொழில் சிறந்த பாதையில் பயணிக்க பாரிய பங்களிப்பை பெற்றுக் கொடுக்கின்றது. தற்போது அந்தத் துறைமுகத்துக்கு வருகை தரும் உல்லாசப் பயண கப்பல்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் தகவல்களுக்கமைய் கடந்த 10 மாதங்களில் கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தந்த உல்லாசப் பயண கப்பல்களின் எண்ணிக்கை 45 ஆகும். கடந்த வருடம் அந்த 10 மாத காலப் பகுதியில் 35 கப்பல்களே வருகை தந்திருந்தன. அதன்படி ஒரு வருடத்துக்குள் ஏற்பட்ட வளர்ச்சி 28.6 வீதம் என தெரியவந்துள்ளது.

திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள துறைமுகங்களுக்கும் தற்போது பல நாடுகளிலிருந்தும் உல்லாசப் பயணக் கப்பல்கள் வருகை தருகின்றன. கடந்த வருடத்தில் 50 உல்லாசப் பயண கப்பல்கள் வருகை தந்ததாக அறிக்கைகள் கூறுகின்றன.

இலங்கை துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான கொழும்புத் துறைமுகம் உள்ளிட்ட இலங்கைத் துறைமுகங்கள் இந்நாட்டின் உல்லாசப் பயணத்துறையின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பை நிச்சயமாக வழங்கியுள்ளன.

தற்போது உல்லாசப் பயணத்துறையை மேலும் வளர்ச்சி பெறச் செய்யும் நோக்கில் உயர் மட்டத்திலான அடிப்படை வசதிகளுடன் கூடிய நவீன இறங்குதுறை ஒன்றை அமைக்கவும் அமைச்சு திட்டமிட்டுள்ளது. அதன் மூலம் இங்கு வரும் உல்லாசப் பயண கப்பல்களுக்கு சிறந்த முறையில் தேவையான வசதிகளை வழங்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது கொழும்புத் துறைமுக வளர்ச்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் இத் துறைமுகத்தை சர்வதேச ரீதியில் வளர்ச்சியடையச் செய்ய அனைத்துத் தரப்பினரும் மற்றும் அமைப்புகளும் புதிய கப்பல் சேவைகளை கவரும் வகையில் பல நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

# facebook

# குருவும் சிஷ்யனும்

(சென்றவார தொடர்ச்சி)

அதற்காக என் நேரத்தையும் கவனத்தையும் முழுமையாகச் செலுத்த வேண்டும். இப்படி நதிக் கரையில் நடப்பதாலும், மங்கையைக் கண்டு மயங்குவதாலும் அதை நான் அடைந்துவிட முடியாது. சிஷ்யா இன்று இந்தப் பயணம் போதும். நாங்கள் எங்கள் குடிலுக்குத் திரும்புவோம்.' என்று சிவகுரு தன்னை நிதானப்படுத்தி சிஷ்யனின்வழிகாட்டலைத்தவிர்த்து, தனது வழியில் திரும்பினார். இருந்தும் சிஷ்யன்.

குருவே நீங்கள் ஏன் அவசரப் படுகிறீர்கள்? மீண்டும் திருப்பி வாருங்கள். இந்த உலகமே நிஜமானது. இந்த வாழ்வே சுகமானது. இருப்பதை மாயை என்றும் இல்லாததை மறுவுலகு என்றும் எதற்கு உங்களுக்குத் தப்பிதமான கற்பனை? அதனால் உடலையும், மனதை எதுவும் இல்லாததிற்கு வருத்தி எதை அடையப் போகிறீர்கள்? இல்லாததை இருப்பதாயும், இருப்பதை இல்லாததாயும் குழப்பமாக கதைப்பதை மார்க்கமாகக் கொண்டால் மண்ணுலகம் சொர்க்கமாகத் தெரியாது நரகமாகத் தெரியலாம். எனக்கு விளங்கியதை உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் குரு. அனைத்தும் கற்று அறிந்தவர். நீங்கள் வருந்துவதோ, இழப்பதோ எனக்கு அமைதி தராது என்பதால் மட்டுமே இதை வற்புறுத்துகிறேன்.'

சிஷ்யா உன்னோடு நான் என்றும் விவாதம் செய்ய விரும்பவில்லை. இருந்தாலும் ஒன்று கூற விளைகிறேன். நீ குருவுக்குப் புத்தி கூறுவதற்கு இங்கு வரவில்லை. குருவின் சொற்படி நடக்கவே இங்கு வந்தாய். குரு சொல்வதை உன்னால் ஏற்று நடக்க முடிந்தால் ஏற்று நட. அல்லது நீ என்னை விட்டு விலகிவிடு. அதையும் மீறி என்னோடு இருக்க வேண்டும் என்றால் நீ மௌனமாக இருக்க வேண்டும். இது என் வேண்டுகோள் அல்ல. இதுவே என் கட்டளை.'

குரு தனது சொல்லைக் கேட்காதது மட்டும் அல்லாது தான் கதைப்பதற்கும் தடை போட்டு விட்டுத் தன் விருப்பப்படி திரும்பி ஆச்சிரமத்திற்கு நடை போடுவது சிஷ்யனுக்கு பெரும் வேதனையை உண்டு பண்ணியது. அவன் எதுவும் செய்ய முடியாது அவர் பின்னால் சென்றான். குருவை எப்படியாவது கதைத்து மாற்ற வேண்டும் என்பதே அவனது குறிக்கோள். ஆனால் தற்போது கதைக்க முடியாது என்கின்ற உண்மையை உணர்ந்தவனாகத் தொடர்ந்தும் அமைதியாக நடந்தான். இன்னும் ஒரு நாள் அதைப் பார்த்துக் கொள்ளலாம் என்று தனது விடா முயற்சி பற்றிச் சிஷ்யன் நினைத்துக் கொண்டான்.

சில நாட்கள் சென்றன. சிஷ்யன் குருவைத் தொந்தரவு செய்யாது அமைதியாக இருப்பது போலத் தோன்றியது. சிஷ்யன் பற்றியோ, அல்லது வேறு எந்த உலக ஆசைகள் பற்றியோ அக்கறை இல்லாது குரு தன்னைத் தான் அறியும் உள்நோக்கிய பயணத்தில் மும்மரமானார். சிஷ்யன் அமைதியாக இருப்



பது போலத் தோன்றினாலும் உண்மையில் அவன் அமைதி இன்றித் தவித்தான். அவனால் அப்படி இருக்க முடியவில்லை. குருவை வெளியே அழைத்துச் செல்ல வேண்டும். இவ்வுலக இன்பங்களை அவருக்குக் காட்ட வேண்டும். அத்தால் குருவையே தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும் என்று சிஷ்யன் தவித்தான். அவனுக்கு எத்தனை நாட்கள் இப்படிப் பொறுமையாக இருப்பது என்று விளங்கவில்லை. மேலும் பல நாட்கள் சிஷ்யன் குருவைக் குழப்பாது அமைதியாகக் காலம் கழிந்தது. ஆனால் அவனால் அதைத் தொடர முடியவில்லை. இன்று அவரை நீராட அழைத்துச்செல்வது போல அழைத்துச் சென்று நதிக்கரையில் மது வாங்கிப் பருகக் கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டான். அதன் மூலம் இவ்வுலக இன்பத்தில் ஒன்றையாவது அவருக்கு சுவைக்கக் கொடுக்க வேண்டும். அதனால் அவன் அமைதியாக குருவின் முன்சென்று பௌவியமாக நின்று.

'குருவே இன்று நீராட வேண்டிய நாள். நீராடப் புறப்படுவோமா?' என்றான். குரு கண் திறக்கவில்லை. எந்த அசைவும் இல்லாது அப்படியே சிலையாக இருந்தார். அப்படிக் குரு இருப்பது சிஷ்யனுக்கு பயத்தையும், கோபத்தையும் உண்டு பண்ணியது. அவன் மீண்டும் தனது குரலை உயர்த்தி 'குருவே குருவே' என்று கூவினான்.

குருவின் உள்நோக்கிய பயணம் தடைப்பட்டது. குரு கண் விழித்தார். இருந்தும் கண்களில் சாந்தம் பரவி இருந்தது. சிஷ்யனே எதற்கு என்னை இப்போது அழைத்தாய்? ' என்றார். இன்று நீராடப் போக வேண்டும். ' என்றான் சிஷ்யன்.

குரு மீண்டும் ஒருமுறை கண்ணை மூடித் தியானித்தார். அவருக்குச் சிஷ்யனின் எண்ணம் விளங்கியது. அவர் புன்னகை புரிந்த வண்ணம்.

சிஷ்யா இன்று, இப்போது ஸ்நானம் தேவைப்படுவது உனக்கு மட்டுமே. நீ செல். சென்று ஸ்நானம் செய்த பின்பு அப்படியே உன் பயணத்தைத் தொடங்கு. எனக்கு எப்போது ஸ்நானம் தேவைப்படுகிறதோ அப்போது நான் சென்று ஸ்நானம் செய்து வருகிறேன். உனக்கு இன்றோடு இந்தக் குடிலில் எந்த அலுவலும் இல்லை. நீ இங்கு மீண்டும் திரும்பி வரத் தேவை இல்லை. உனது ஸ்நானத்தை முடித்துக்கொண்டு அப்படியே பயணித்துவிடு. குருவே' சிஷ்யன் பதறியபடி கூவினான்.

குரு நிறுத்து என்று முதலில் கையைக் காட்டினார், பின்பு போ என்று கையாலேயே சைகை செய்தார். சிஷ்யனால் மேற்கொண்டு எதுவும் செய்ய முடியவில்லை. அவன் குடிலை விட்டு வெளியேறினான்.

குரு மீண்டும் கண்ணை மூடித் தனது தியானத்தைத் தொடர்ந்தார். திடீரென அவர் முன்னே அந்தத் துறவி தோன்றினார்.

உனக்கு நான் அப்போது சொல்லியது இப்போது விளங்குகிறதா? ' என்று கேட்டார்.

'ம்... ம்... ' என்று குரு புன்னகையோடு அமைதியாக எந்த வித பெருமையோ, சிறுமையோ, மானமோ, அவமானமோ இல்லாது தலை அசைத்தார். அந்தத் துறவி அத்தோடு மறைந்து விட்டார். துறவி மாத்திரம் அல்ல அந்தச் சிஷ்யனும். அவன் பிடியில் இருந்து அன்றில் இருந்து சிவகுரு முற்றுமாக விலகி இருந்தார்.

(முற்றும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1588


### ரஜிவன்

விழும்போது திமிறி எழுந்து ஓடு
வெல்லும்போது திமிர் இல்லாமல் நட



### குகதர்சன்

தனித்துவிடப்படும் போதுதான் நம் பலமும்
பலவீனமும் நமக்கு தெரியவரும்




### கவிதாஸ்

என் தவறுகளை என் முகத்தைப் பார்த்து
என்னிடம் கூறுங்கள் என்னைச் சுற்றி
உள்ளவர்களிடம் அல்ல... ஏனென்றால்
என் தவறுகளை நான்தான் திருத்திக்கொள்ள
முடியும்... மற்றவர்கள் அல்ல



### பிரதீபன்

நமது எண்ணங்கள் உயர்வாக இருந்தால்
போதும் எந்த இலக்கையும் எளிதாய்
அடையலாம்



### முத்துச்சாமி கஜன்

யாருக்காகவும் நீ மாற நினைக்காதே
ஏனெனில் ஒவ்வொரு மனிதருக்காகவும்
நீ மாற வேண்டியிருக்கும்



### ராகுலன்

சில சிக்கல்களை நாம் எதிர்கொள்ளும்
போதுதான் கூடவே பல திறமைகளும்
வெளிப்படுகின்றன



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உயிரை பணயம் வைத்து
## ஏரியை சுத்தம் செய்த இளம் நடிகை



விஜய் தேவரகொண்டாவுக்கு ஜோடியாக கீதா கோவிந்தம் படத்தில் நடித்தவர் ராஷ்மிகா. இப்படம் ஹிட்டானதால் இவருக்கு அடுத்தடுத்து வாய்ப்புகள் குவிந்த வண்ணம் இருந்தன.

இந்நிலையில் அவரின் புகைப்படம் ஒன்று சமூகவலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

பெங்களூரில் உள்ள மிகப் பெரிய ஏரியான **Bellandur Lake** மாசுபட்டு வருவது அவருக்கு கவலையளித்துள்ளது.

இதனால் அதை பாதுகாக்கும் பொருட்டு அவர் மாசடைந்த அந்த ஏரி நீருக்குள் குதித்து. உள்ளே இருக்கும் குப்பைகளை வெளிக்காட்டி விழிப்புணர்வை ஏற்படுத்திய புகைப்படம் பலரை கவர்ந்துள்ளது.

# கொடிய நோயினால் அவதிப்பட்டவருக்கு
## உதவிய விஜய் ரசிகர்கள்



விஜய் உலகம் முழுவதும் பல இலட்சம் ரசிகர்களை கொண்டவர். இவருக்கு 6 லிருந்து 60 வயது வரை ரசிகர்கள் இருந்து வருகின்றனர்.

அதிலும் பெண் ரசிகைகள் இவருக்கு மிக அதிகம். இவர்களில் பலரும் விஜய்யை அண்ணா என்று தான் அழைப்பார்கள்.

அப்படித்தான் கிருஷ்ணகிரியில் உள்ள விஜய் ரசிகை ஒருவர் மிகவும் கொடிய நோய் ஒன்றால் பாதிக்கப்பட்டுள்ளார். அவரின் எலும்புகள் உடைந்து வருகின்றதாம். இதை அறிந்த விஜய் ரசிகர்கள் மக்கள் இயக்கம் சார்பாக ரூபாய் 25 ஆயிரம் பணத்தை அவரின் மருத்துவ உதவிக்கு கொடுத்துள்ளனர்.

